


# திருச்சி விசுவநாதம்

# திருச்சி விசுவநாதம்

(வரலாறு)

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.
திரிபல்துறை.

ஆசிரியர் :
மா. சு. சம்பந்தன்
(தொடர்பன்)

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு: செப்டம்பர் 1954.

ஸ்ரீ காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை சண்முகம் நூலகம்.
வரிசை எண்: 1—4—0
தமிழியல் துறை.

ஆசிரியரின் பிற நூல்கள்:

சிறந்த பேச்சாளர்கள்
சென்னை மாநகர் (அச்சில்)
திரு. வி. க. ,,
குமுறும் உள்ளம் ,,
இங்கர்சால் ,,

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்:
நன்கொடை எண்:

விரோதன் அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# முன்னுரை

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு எம். எல். ஏ.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றிற்கு முன்னுரை எழுதுவதில் எனக்கு அதிக மகிழ்ச்சியுண்டு. எந்தப் புத்தகத்திற்கும் நான் இதுவரையில் முகவுரை எழுதியது கிடையாது. முன்னுரை எழுதுவது இதுவே முதல் தடவையாகும்.

திரு. விசுவநாதம் மிகவும் சிறந்த தமிழ்த் தலைவர் என்பது எனது கருத்து. எனது நாற்பது ஆண்டு அரசியல் வாழ்க்கையில் பல திறப்பட்ட தலைவர்களைப் பார்த்து உள்ளேன். இவர்களில் தமிழ்நாட்டில் மிக்க உயர்தலைவர்கள் வ. உ. சிதம்பரம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் என்பது எனது திடமான அபிப்பிராயம். இம்மூவரும் அரசியல்வாதிகள். என்னுடனிருந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்தியவர்கள். இவர்களைத் தமிழ்நாடு எந்நாளும் மறக்கலாகாது.

ஆனால் திரு. விசுவநாதம் வேறு துறையில் தமிழ் மக்களுக்குப் பணியாற்றி வருகிறார். இந்நாட்டில் இருவிதமான கலைகள் உண்டு—வடகலை தென்கலை—சமஸ்கிருதக் கலை தமிழ்க்கலை. தென்கலையானது வடகலையை விடப் பழையது; மிகவும் பெருமை நிறைந்தது. ஆசிய நாடுகளுக்குத் தாயகமானது தமிழ்க்கலை. எனினும், ஆயிர வருடங்களாக, தமிழர் பண்பாடு—திராவிட நாகரிகம்—பின் தங்கிவிட்டது. இதற்குக் காரணங்கள் பல உண்டு. சென்ற 50 ஆண்டுகளாக, தமிழ் நாட்டின் பழைய கலைகளுக்கு மறுமலர்ச்சி தோன்றி வளர்ச்சி பெற்று வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றவர்களில் நானும் ஒருவன். பழையது கழிந்து, புதியது வளம்பெறவேண்டுமென்பதே எனது கொள்கை. ஆயினும் புராதன பெருமைகளைப் பெற்றுள்ள தென்னாடு, பழையதை அடிப்படையாக்கிக் கொண்டே, புதியதை உருப்படியாக்க வேண்டுமென்பது எனது உறுதியான எண்ணம்.

திரு. விசுவநாதம் அவர்களுடைய சீரிய வாழ்க்கையும், அவருடைய எண்ணங்களும், எழுத்தும், பேச்சும், தமிழர்களுக்கு ஒருவித புதிய சக்தியையும், எழுச்சியையும் உண்டாக்கியிருக்கின்றன. அவருடைய நேர்மையையும் நெஞ்சு உறுதியையும் கண்டு எனது உள்ளம் பூரிப்படைவதுண்டு. தமிழ்நாட்டின் எதிர்காலமும், அதன் சிறப்பும் எவ்வாறு இருக்குமென்பதற்கு திரு. விசுவநாதம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்ருர். நண்பர் விசுவநாதம் கல்வியில் பெரியவர். கருத்தில் சிறந்தவர். உயர்ந்த பண்பாடு உள்ளவர். தமிழ்நாட்டின் அரசியல் முன்னணியில் நின்று அவர் சேவை செய்யவேண்டுமென்று, சில மாதங்களுக்குமுன் திரு. விசுவநாதம் அவர்களை நான் கேட்டுக் கொண்டேன். அவருக்கும் எனக்கும் அரசியல் துறையில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் நாட்டின் பொதுவான முன்னேற்றத்தையும், தமிழரின் எதிர்காலச் சிறப்பையும் முன்னிட்டு, விசுவநாதம் போன்ற பண்பிற் சிறந்த தமிழ்த் தலைவர்கள் அரசியலில் நாட்டம் செலுத்த வேண்டுமென்பது எனது வேண்டுகோள். அவர் ஒரு வெறும் தமிழ்ப்புலவராக மட்டும் இருந்தால், இவ்வாறு நான் சொல்லமாட்டேன். இந்நாட்டின் பல்வேறு மண்டலங்களையும் நான் நன்கு அறிந்திருக்கின்றேன். தமிழ்நாட்டின்—தமிழர்களின்—அரசியல் நிலைமை மிகமிக தாழ்ந்திருப்பதைக் கண்டு அடிக்கடி எனது மனம் நோவதுண்டு. தமிழ்நாட்டுக்கு உயர்தரமான தலைவர்கள் வேண்டும். அவ்விதக் கூட்டத்தில் இருப்பதற்கு திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் முற்றிலும் தகுதியுள்ளவர்.

திரு. மா. சு. சம்பந்தம் அவர்கள் எழுதியுள்ள விசுவநாதம் வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்த்து அதிகச் சந்தோஷமடைகிறேன். திரு. சம்பந்தத்தின் தமிழும், எடுத்துக்கூறும் விதமும், உயர்ந்த நடையும் பொன்னெனப் போற்றக் கூடியதாயிருக்கின்றது. திரு. சம்பந்தம் ஒரு சிறந்த நூலாசிரியராவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

சென்னை.
1—9—'54.

**பி. வரதராஜலு நாயுடு.**

# ஆசிரியர் உரை

தமிழ்க்கும் தமிழ்நாட்டிற்கும் பல வழிகளில் பாடுபடுவர்களின் பெருமையை நாடறியச் செய்யவேண்டும் என்பது எனது நெடு நாளைய அவா; கனவு கூட! இதன் ஒரு கூறே இவ்வரலாறு எழுத எனக்கு ஆர்வம் ஊட்டியது.

தமிழகத்திற்குப் புகழ்தேடித் தருபவர்களில் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் மிகவும் குறிப்பிடத் தகுந்தவராவர். அவர் எந்தத் தொடக்கப் பள்ளியிலும் படிக்காதவர். தமிழ் நாட்டுத் தலைவர்களுள் ஈ. வே. ரா. போன்ற ஒரு சிலராவது இரண்டாவது மூன்றாவது வகுப்பையாவது எட்டிப் பார்த்திருக்கிறார்கள்! ஆனால் அன்பர் விசுவநாதமோ நிழலுக்காகக்கூட சிறுவயதில் தொடக்கப் பள்ளியிலும் ஒதுங்கியது கிடையாது. அவர் தமது சொந்த முயற்சியாலும் ஊக்கத்தாலும் தமிழை நன்கு கற்றுத் தேர்ந்து, ஆங்கில அறிவும் போதிய அளவு பெற்று, தந்தையிடம் தொழில் பயின்று, படிப்படியாக முன்னேறி தமிழ்த் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார்; தென்னாட்டு வணிகர்களில் புகழ்மிக்க ஒருவராக உயர்ந்துள்ளார். இன்று உயிருடன் இருக்கும் அரசியல் தலைவர்களில்—நீண்டகால அரசியல் அநுபவமிக்கவர்களில்—விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரில்—திரு. வி. இரண்டாவதாக இருக்கின்றார். நாவன்மையிலோ தமிழ் நாட்டின் மிகச் சிறந்த பேச்சாளர்களில் நாடறிந்த நாவலராகப் பாராட்டப்பட்டு வருகின்றார்.

அவரது அடங்காத் தமிழ்ப் பற்றும், காலத்தை வீணாக்காது உழைக்கும் குணமும், தொழில் திறமையும், நாணயமும், நேர்மையும், ஒழுக்கமும், எதனையும் செவ்வனே செய்து முடிக்கும் அமைப்புத்திறன் மிக்க ஆற்றலும் அவருடன் மாறுபட்ட கருத்துடையவர்களையும் கவர்வனவாகும்.

இங்ஙனம் பல துறைகளிலும் பயிற்சியும் அநுபவமும் மிக்க அன்பர் கி. ஆ. பெ. வி. தம்முடைய வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதி தமிழகத்திற்குத் தந்தால், பலர்க்குத் தெரியாத பல விவரங்கள் கிடைக்கும். இது

வரை அந்நல்வாய்ப்பு முகிழ்க்கவில்லை. இனியேனும் ஏற்படவேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன். விசுவநாதத்தின் வரலாறும் தொண்டும் தமிழ்மக்கள் அனைவரும் படித்து இன்புற்று பின்பற்றக்கூடியனவாக இருப்பதால் இந்நூலை நான் எழுத முற்பட்டேன்.

இவ்வரலாறு எழுத பண்டித எஸ். முத்துசுவாமி அவர்கள் எழுதியிருந்த வரலாற்றுக் குறிப்பு உறுதுணையாக இருந்தது. நண்பர் சி. ர. பழனியாண்டி அவர்கள் திரு. வி.யைப்பற்றி சேகரித்து வைத்திருந்த சில குறிப்புகளைத் தந்து உதவினார். திரு. த. சிவசிதம்பரம் எம். ஏ. அவர்களிடமிருந்து சில தகவல்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

கையெழுத்துப் படியைப் படித்துப் பார்த்து ஊக்கி, நல்ல திருத்தங்களைச் செய்த எனது அருமைத் தோழர்களான மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), ஊ. ஜெயராமன், மு. ராமதாஸ், அ. ச. புஷ்பரத்தினம் ஆகியோர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். பாரி நிலைய உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பன் அவர்களின் உதவியும் ஒத்துழைப்பும் இல்லாதிருந்தால் இந்நூல் இப்பொழுது வெளிவந்திருக்கவே முடியாது. மேலும் இந்நூலுக்கு முன்னுரை அளிக்கும்படி பழுத்த அரசியல்வாதியும் பழம் பெரும் விடுதலை வீரருமான டாக்டர் பி. வரதராஜலு நாயுடு எம். எல். ஏ. அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவரும் தமது அருமையான நேரத்தில் சிறு பொழுதை ஒதுக்கி வரலாற்றை முற்றும் படித்து அரிய முன்னுரை அளித்திருக்கிறார்கள். அன்னாருக்கு என் இதயங்கனிந்த வணக்கத்தையும் நன்றியையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் உருவாவதற்குப் பல வழிகளிலும் துணை புரிந்த அன்பர்களுக்கு மீண்டும் எனது நன்றி உரியதாகுக.

அன்பன்,

**மா. சு. சம்பந்தன்.**

மதுரை காமராசர் பல்கலைக்க
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# பொருளடக்கம்


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| | முன்னுரை | | iii |
| | ஆசிரியர் உரை | | v |
| 1. | திருச்சி விசுவநாதம் | ... | 1 |
| 2. | கல்வியும் கேள்வியும் | ... | 7 |
| 3. | தொழிலில் மேன்மையடைதல் | ... | 10 |
| 4. | இல்லற வாழ்வு | ... | 13 |
| 5. | தொண்டுள்ளம் | ... | 18 |
| 6. | நீதிக்கட்சியுடன் தொடர்பு | ... | 2 |
| 7. | இந்தி எதிர்ப்புப் போர் | ... | 25 |
| 8. | நீதிக் கட்சியைத் திருத்த முயற்சித்தல் | ... | 42 |
| 9. | சீர்திருத்தக்காரர் | ... | 51 |
| 10. | தன்மான இயக்க வீரர் | ... | 61 |
| 11. | வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் | ... | 65 |
| 12. | தமிழர் கழகம் காணுதல் | ... | 68 |
| 13. | போராட்ட வீரர் | ... | 80 |
| 14. | நாடறிந்த நாவலர் | ... | 89 |
| 15. | எழுத்துத் திறமை | ... | 103 |
| 16. | குண நலன்கள் | ... | 117 |
| 17. | திரு. வி.யின் நூல்கள் | ... | 135 |
| | கருத்துரைகள் | ... | 142 |

# பட விளக்கம்

**1. திரு. வி. யின் உருவ வளர்ச்சி**—12 முதல் 53 வயது வரை.
முகப்புப் படத்தின் வயது 55.

**2. தொழிலாளர் பொதுக்கூட்டம்**

1930-ல் நாகை அவுரித்திடலில் நடந்த தொழிலாளர் பொதுக்கூட்டம். நடு வரிசையில் இருப்பவர் (இடமிருந்து வலம்) என். தண்டபாணி, கி. ஆ. பெ. வி, ஜி. வி. நாயுடு, ஜே. எஸ். கண்ணப்பர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, கார்குடி. சின்னையா பிள்ளை முதலியோர்.

**3. சென்னை மாகாண நீதிக்கட்சி மாநாடு**

1935-ல் திருச்சியில் திரு. வி. செயலாளராக இருந்து நடத்திய மாநாடு. படத்தில் டாக்டர். மதுரம், திருமதி மீனும் பாள் சிவராஜ், பெரியார் ஈ. வே. ரா, டாக்டர். சி. நடேச முதலியார், பொப்பிளி அரசர், குமாரசாமி ரெட்டியார், மீனும்பள்ளி ஜமீந்தார், திரு. வி. முதலியோர் உள்ளனர்.

**4. சென்னை மாகாண தமிழர் மாநாடு**

1937-ல் திரு. வி. செயலாளராக இருந்து திருச்சியில் நடத்தியது, திருவாளர்கள் கி. ஆ. பெ. வி, பரவஸ்து ராஜ கோபாலாச்சாரியார், பெரியார் ஈ. வே. ரா, பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், உமாமகேசுவரனுர், சர். ஏ. டி. பன்னீர்செல்வம், என். தண்டபாணி, பேராசிரியர் கா. சுப்பிர மணிய பிள்ளை முதலியோரைக் காணலாம்.

**5. சென்னை மாகாண தமிழ் இசை மாநாடு**

1941-ல் திருச்சியில், திரு. வி. செயலாளராக இருந்து நடத்தியது. படத்தில் பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், ராஜா சர். மு. அண்ணுமலை செட்டியார், தி. இலக்குமணப் பிள்ளை, கி. ஆ. பெ. வி, எம். கே. தியாகராஜ பாகவதர், பேராசிரியர். பொன்னையா பிள்ளை, திருச்சி நகரசபைத் தலை வர் சிதம்பரஞ் சேர்வை முதலியோர் உள்ளனர்.

**6. திருவண்ணுமலை நீதிக்கட்சி மாநாடு**

1950-ல் திருவண்ணுமலையில் திரு. வி. தலைமை வகித்து நடத்தியது. திருவாளர்கள் எஸ். முத்தையா முதலியார், சர். பி. டி. ராஜன், திரு. வி, எஸ். ராமநாதன், பி. பாலசுப்பிர மணியம் முதலியோரைக் காணலாம்.

**7. திருவள்ளுவர் படிப்பக விழா**

1952-ல் கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் "கோபால் பாக்" கில் நடந்தது. திரு. வி. யின் வலதுபுரத்தில் டி. டி. ஆர். பிள்ளை, ஜே. எஸ். கண்ணப்பரையும், இடதுபுரத்தில் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரையும் காணலாம்.




திருச்சி விசுவநாதம்
வயது 55

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# திருச்சி விசுவநாதம்

## 1. திருச்சி தந்த செல்வம்

சென்னை மாநிலத்திலுள்ள மாவட்டங்களில் திருச்சிராப்பள்ளியும் ஒன்று. இதன் தலைநகர் திருச்சி. இது தமிழகத்தின் சிறந்த நகரங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. திருச்சியை நினைக்கும்பொழுது, அந்நகர வழியாக ஓடும் காவிரியாறும், மலைக்கோட்டையும், பொன்மலைத் தொழிற் சாலையும், 'சிமின்'டுக்குப் பெயர் பெற்ற கல்லக்குடியும், பழஞ்சிறப்பு வாய்ந்த உறையூரும், இதை யடுத்திருக்கும் திருவரங்கமும், இயற்கைச் சூழல் மிக்க அமைப்பும் நினைவிற்கு வராமல் போகாது.

திருச்சியில் ஒரு பெரிய இருப்புப்பாதைக் கூடல் நிலையம் (Railway Junction) இருக்கிறது. இது தரை மட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. தரை மட்டத்திற்குக் கீழிருந்து மக்கள், சரக்குகள் வரபோக வசதி செய்யப் பெற்றுள்ளது. தொடர் வண்டிகள் இங்கிருந்து பல பகுதிகளுக்கும் ஐந்து திசையில் பிரிந்து செல்கின்றன. அண்மையில் இங்கு விமான நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு சிறப்புக்களுடன் மற்றொரு விதத்திலும் இந்நகரம் பெருமை பெற்று விளங்குகின்றது. அது நாடறிந்த நாவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதத்தைத் தமிழகத்திற்கு அளித்துப் புகழ் பெற்றதாகும்.

## பெற்றோர்

திருச்சி மணியக்காரத் தெருவில் "மணிவாசகத் தமிழகம்" எனும் இல்லத்தில் ஒரு பெருங் குடும்பம் இருக்கிறது. இது திருச்சிராப்பள்ளியிலே உள்ள குடும்பங்களில் மிகப் பெரியது. ஏன் சென்னை மாகாணத்திலேயே இதுதான் பெரிய குடும்பம்! இவ்வளவு பெரிய எண்ணிக்கையுள்ள குடும்பம் இந்தியாவிலேயே எங்கும் இல்லையென்று ஏழெட்டு வெளிநாட்டுக்காரர்கள்கூட எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட புகழ்பெற்ற குடும்பத்தின் முன்னாள் தலைவர் திரு. கி. ஆ. பெரியண்ண பிள்ளை. அவர் திருச்சியில் பெருஞ் செல்வராகவும் சிறந்த வணிகராகவும் விளங்கியவர். புகையிலைக் கடை பெரியண்ண பிள்ளை என்றால், திருச்சி மாவட்டத்தில் அறியாதவர் இருக்கமாட்டார்கள்.

அவர் தொடங்கிய புகையிலை வாணிபம் செழித்து, நாளடைவில் தென்னாடு முழுவதும் பரவி, வெளி நாடுகளிலும் நற்புகழைத் தேடிக்கொடுத்தது. 'பாங்கி'யில் பணம் சேர்த்து வைப்பதைக் காட்டிலும் பொதுமக்களின் நம்பிக்கைக்கு உரியவராவதே மேலென மதித்த செல்வர் பெரியண்ண பிள்ளை. அவர் தமது நாணயத்தைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்து, பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். ஆகவேதான் அவரது செல்வாக்குத் திருச்சி மாவட்டம் முழுவதும் வெளியூர்களிலும் பரவ முடிந்தது. அவர், தாம் பாடுபட்டுத் தேடிய செல்வத்தைத் தம் சொந்த நலன்களுக்காக மட்டும் பயன்படுத்தினாரில்லை. சைவப் பற்றுமிக்க சோழிய வேளாள மரபைச் சேர்ந்தவரானதால், அவர் பல சிவன் கோயில்களுக்கு தர்மகர்த்தாவாக இருந்து சிவத்தொண்டு புரிந்து வந்தார். மேலும் தமது சொந்தப் பணத்திலிருந்தும்

அறம்பல செய்துவரலானூர். இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகள் வாய்ந்த பெரியண்ணனுருக்கு, சுப்பு லட்சுமி அம்மையார் மனைவியாக அமைந்து, சீருஞ் செட்டு மாகக் குடும்பத்தை நடத்தி வந்தார்கள்.

மணமக்களை, 'பதினறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க' என்று வாழ்த்துவது உலக வழக்கு. இதன்படியே எல்லோருக்கும் பெருவாழ்வும் பெரும்பேறும் கிடைப்ப தாகச் சொல்ல முடியாது. ஆனுல் பெரியண்ணர்-சுப்பு லட்சுமியைப் பொருத்தவரை இது நூற்றுக்கு நூறு பொருந்தி வந்திருக்கிறது! இவ் விருவருக்கும் பலவித செல்வங்களுடன் அடுக்கடுக்காக 16 குழந்தைகள் பிறந்தன. இதில் 9 ஆண், 7 பெண். ஒரு குழந்தையைப் பெற்று வளர்ப்பதே 'போதும் போதும்' என்ருகிவிடும் இக் காலத்தவர்க்கு, மேற்சொன்ன 16 குழந்தைகளையும் பெற்று வளர்ப்பதில் எவ்வளவு சிரமம் இருந்திருக்கும் என் பதை நாம் விளக்கத் தேவை இல்லை.

ஒரு குழந்தை வளர்வதும் ஒரு கோபுரம் கட்டி முடிப் பதும் ஒன்று என்று பாட்டிகள் சொல்வதுண்டு. ஆகவே பதினறு குழந்தைகளையும் பேணி வளர்த்த பெற்ருேர் களின் பொறுமையையும் திறமையையும் எவ்வளவு பாராட்டினுலும் தகும் அல்லவா? நாட்டு நிர்வாகத்தை நடத்துவதைவிட ஒரு பெரிய குடும்பத்தை நடத்துவது சிக்கலும் தொல்லையும் நிரம்பியதாக இருக்கும்.

மேற்சொன்ன பெரியண்ணர் – சுப்புலட்சுமிக்குப் பிறந்த 16 குழந்தைகளில், கடைக்குட்டிதான் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆவர். அவருக்கு முன் பிறந்தவர்களில் அண்ணன்மார் எட்டுப் பேர், அக்காள் ஏழு பேர். ஆகவே அவருக்குத் தம்பியுமில்லை; தங்கையுமில்லை. இது ஒரு வகையில் அவருக்குக் குறைதான்!


'கழுதையாகப் பிறந்தாலும் கடைக்குட்டியாகப் பிறக்காதே' என்பது பொது வழக்கு. கடைக் குட்டியாகப் பிறப்பவர், தம் மூத்தோர் ஆணைக்கும் அதிகாரத்துக்கும் ஆட்பட்டு உழல வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படும் என்று அனுபவபூர்வமாக உணர்ந்தே இப்படிச் சொல்லியிருப்பார்கள். ஆனால், திரு. விசுவநாதம் சம்பந்தப்பட்ட மட்டில் இவ்வுரை அவ்வளவு ஒத்துவந்ததாகச் சொல்ல முடியவில்லை. காரணம் அவரது மூத்தோரான திருவாளர்கள் காத்தபெருமாள், நாகரத்தினம், பஞ்சரத்தினம், ஆறுமுகம், நவகோடியா, பரமசிவம், நல்லதம்பியா, கல்யாணசுந்தரம் என்போர் தம் கடைக்குட்டித் தம்பிக்கே சகல அதிகாரங்களையும் மனமுவந்து வழங்கி, அவருடைய விருப்பப்படியே வாழ்க்கையையும் குடும்பத்தையும் நடத்தி வந்திருக்கிறார்கள்.

தமது குடும்பத்தைப்பற்றி திரு. வி. அவர்களே ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார் :

"எங்கள் அப்பாவுக்குப் பதினாறு பிள்ளைகள். நான்தான் பதினாறாவது ஆள். எனக்குப் பதினான்கு குழந்தைகள். எனக்கு அண்ணா எட்டுப்பேர். அக்காள் ஏழுபேர். ஒவ்வொருவருக்கும் குழந்தைகள் நிறைய இருக்கின்றன. எங்கள் அண்ணன் ஒருவருக்குப் பதிமூன்று குழந்தைகள். கதை வேண்டாம். எங்கள் நகராட்சியிலே, எங்கள் பிரிவிலே அதிக வாக்குரிமைகள் எங்கள் இல்லிற்குள்ளேயே இருக்கின்றன. இது ஒன்றும் பொய்யல்ல. அவ்வளவு பெரிய குடும்பம்"

உண்மையிலே ஒரு சிறிய நகராட்சி மாதிரி நடைபெறும், தமது பெரிய குடும்பத்தில் தகராறுகள் வராமல் விசுவநாதம் எப்படிக் காத்துவருகின்றார் என்பது மிகவும் வியப்பாகத்தான் இருக்கும். அவர் ஒவ்வொருவரின் குணத்

# திரு. வி. யின் உருவ வளர்ச்சி





தொழிலாளர் பொதுக்கூட்டம்



சென்னை மாகாண நீதிக்கட்சி மாநாடு

தையும் நன்கு அறிந்து, அவரவர் உரிமைக்குக் குந்தகம் வராமல், இதம் அறிந்து நேரிய வழியில் செல்லும் பண்பு படைத்தவராக இருக்கின்றார். எனவேதான், இவ்வளவு பெரிய குடும்பத்தைச் சிக்கலின்றி நடத்திச்செல்ல முடிந் திருக்கிறது.

## பிறப்பும் வளர்ப்பும்

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், விகாரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 26-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு (10-11-1899) சுப்புலட்சுமியம்மையின் வயிற்றில் பதினாரும் பிள்ளையாகப் பிறந்தார். மற்றக் குழந்தைகளைப்போல் கையும் காலும் ஆட்டி, கண் சிமிட்டி, தத்தித் தவழ்ந்து, யாழினும் இனிய குரல் எழுப்பித், தம் பெற்றோரின் உள்ளத்திலே பேரின்பத்தை உண்டாக்கி யிருப்பார் என்று சொல்லவா வேண்டும்? அது இயற்கை யில் நடைபெறும் தனி நியதி அல்லவா! தாயின் அரவணைப் பிலும், தந்தையின் கவனிப்பிலும், அம்மாயியின் செல்லத் திலும் குழந்தை விசுவநாதமும் அவரது உடன் பிறந்தோர் களும் இளஞ்சிறுர்களானார்கள்.

விசுவநாதம் கடைக்குட்டியாக இருந்ததால் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டார். அவருடைய அம்மாயி செல்வக் குடியில் வாழ்ந்தும்கூட, உடலுழைப்புச் செய்யா மல் வீணே நாளைக் கழிக்க விரும்பியதில்லை. அந்த அம் மாள், தன் மருகர்(பெரியண்ணர்)க்குத் தெரியாமல் ஒரு கலம் நெல்லைத் தனியாக உலக்கை எடுத்துக் குத்திப் புடைத்து எடுத்து, ஒரு ரூபாய் கூலி வாங்கி விடுவார் களாம். குழந்தைமையில் விசுவாதம், தன் அம்மாயியின் கையில் பணம் வந்துள்ளதைக் கண்டு, காசு தரும்படி மிரட்டுவார். அவர், "காசு இல்லை" யென்ருல், "அப்பா விடம் நீ நெல் குத்துகிறதாகச் சொல்லிவிடுவேன்" என

பயமுறுத்தி ஏமாற்றிக் காசு வாங்கிவிடுவாராம். இத்தகைய பிள்ளைக் குறும்புகள் எத்தனையோ செய்து படிக்கும் வயதடைந்தார் விசுவநாதம்.

உலக அனுபவமிக்க பெரியண்ண பிள்ளைக்கு, தம் மக்களை ஆங்கிலப் பள்ளியில் சேர்க்கத் தயக்கம் ஏற்பட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலப் படிப்பிலே தமிழர்களுக்கு ஓர் அலாதியான ஆர்வம் இருந்தது. அவர்களுக்குத் தம் பிள்ளைகளை ஆங்கிலத்தில் பட்டம் பெறச் செய்து, உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்தி, கண்குளிரக் காண்பதில் தணியாக் காதல்! இம்மாதிரி நடுத்தர வகுப்பினரே எண்ணினர்கள் என்ருல், செல்வக் குடியினரைப் பற்றிக் கூறவா வேண்டும்? இவர்களுக்கு முன் சொன்னவர்களைக் காட்டிலும் இரட்டிப்புப் பேராவல்! இந்தவிதம் நினைத்து அனுப்பிய பிள்ளைகளில் சிலர் பட்டம் பெறுவதையும், பலர் பட்டம் பெருமல் ஊதாரித்தனமாகச் செலவு செய்வதையும், பட்டம் பெற்றவர்களிலும் ஒரு சிலரே ஏற்றம் பெறுவதையும், பலர் ஏமாறுவதையும், மற்றும் சிலர் கிறிஸ்தவ மதம் தழுவி விடுவதையும் கண்கூடாகக் கண்டவர் பெரியண்ண பிள்ளை. ஆகவே, அவர் தமது பிள்ளைகள் ஒன்பதுபேரில் எவரையும் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்ப விரும்பாமல், தமிழ்ப் பள்ளியிலேயே படிக்க வைக்க முடிவு செய்தார்!

“உங்களைவிட ஏழ்மை நிலையில் உள்ளவர்களும் தம் மக்களை ஆங்கிலப் பள்ளிகளுக்கு ஆரவாரத்துடன் அனுப்புகிருர்களே! அவர்களைக் காட்டிலும் வாய்ப்பும் வசதியுமுள்ள நீங்கள் மட்டும் உங்களது பிள்ளைகளை ஏன் அங்கு அனுப்பவில்லை” என்று சிலர் அப்பொழுது அவரை வினவினர்.

அதற்கு அவர் சொன்ன விடை நாம் என்றும் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடியதாகும் : "என் மக்கள் அடிமைத்தொழில் செய்து வயிறு கழுவுவதை நான் விரும்பவில்லை. உரிமையுடன் பாடுபட்டு வாழ்க்கை நடத்துவதையே நான் விரும்புகிறேன்."

இதிலிருந்து பெரியண்ண பிள்ளையின் உரிமை யுணர்ச்சியை நாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். இத்தகைய உணர்ச்சியை இன்றும் கி. ஆ. பெ. விசுவநாதத்திடம் காணலாம்.

தமது தந்தையாரின் முடிவினுல், விசுவநாதம் ஆங்கிலப் பள்ளியின் அனுபவத்தையும், அதில் நுழைந்து அவதிக்குள்ளாகி அரசாங்க அலுவலகத்தில் வேலை தேடும் அவல நிலையையும் அடைந்தாரில்லை.

## 2. கல்வியும் கேள்வியும்

வழக்கப்படி, அவரது ஐந்தாவது வயதில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அங்குத் தமிழ் ஆசிரியர் திரு. மருதமுத்துக்கோனுர், ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தமிழ் எழுத்தும் கணக்கும் சொல்லிக் கொடுத்தார். விசுவநாதத்தின் உடன் பிறந்தவர்கள் சிலரும் அதே திண்ணைப்பள்ளியிலே கல்வி கற்றனர். சுட்டிகையாக இருந்த விசுவநாதம் வகுப்பிலே முதல் மாணவராக விளங்கியதால், ஆசிரியர், அவரையே சட்டாம்பிள்ளையாக ஆக்கினுர். வருங்காலத்தில் சிறந்த அறிஞனுகக்கூடிய தன் மாணவனிடம் இளமையிலேயே

அதற்குரிய அடையாளங்களைக் கண்ட ஆசிரியர் கோனார், மிகவும் மனப்பூரிப்படைந்து அவரிடம் முன்னிலும் அதிக அன்பு காட்டி வந்தார்.

பத்தாவது ஆண்டிற்குள்ளாகவே விசுவநாதம் ஒருவாறு தமிழ்க் கல்வியைப் பள்ளியிற் படித்து முடித்தார். இதற்குப் பின்பு சங்க நூற்களைப் படிக்கத் தொடங்கினார். தமிழ்ச் சுவையில் மிகவும் ஈடுபாடு கொண்ட விசுவநாதம் ஒரு தமிழாசிரியராக மாறினாரில்லை. வாழ்க்கை முழுவதும் பிறர்க்காக வருந்தி உழைத்து, தங்கள் வாழ்க்கையிலே வறுமையைத் தவிர வளப்பத்தைக் காணாத தமிழ் ஆசிரியர் பரம்பரையிலே ஒருவராக அவர் விரும்பவில்லை போலும்! ஆனால், அவரது தந்தையார் இதற்குள் அவரைத்தம் கடையிலேயே தொழில் பயில அமர்த்திக் கொண்டார்.

வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டதற்குப் பின்னர்தான், திரு. விசுவநாதம் சொந்த முயற்சியாலே ஆங்கிலத்தில் பதில் எழுதவும் பேசவும், கணக்கு எழுதவும் கையச்சு (டைப்) அடிக்கவும் கற்றுக்கொண்டார். அவரது இந்த முயற்சி அவரது தொழில் வளர்ச்சிக்குப் பிற்காலத்தில் பேருதவி புரிந்தது!

தந்தையிடம் தொழில் பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே அவர் பிறரிடமிருந்து கண்டு கேட்டு அறிந்துகொண்டவைகள் பலவாகும். எழுத்தறிவித்த திருச்சி மருதமுத்துக் கோனாரிடமிருந்து தமிழறிவைச் சுவையுடன் கற்றுத் தமிழைப் பேணி வளர்க்க வேண்டுமென்ற வேணவாக் கொண்டார் விசுவநாதம். தமது தந்தையார் திரு. கி. ஆ. பெரியண்ண பிள்ளையிடமிருந்து கணக்கு, கைத்தொழில், வியாபாரம், நாணயம், நடுவு நிலைமை ஆகியவற்றைத் தெரிந்துகொண்டார். இதன்

பிறகு உண்ணியூர். சபாபதி முதலியாரிடம் இலக்கணப் பயிற்சியும், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா விடமிருந்து இலக்கிய அறிவையும் அறிந்துகொண்டார். சாணக்கடை சையது உசேன் சாயபுவிடம் உடற்பயிற்சி பயின்று, உடலைக் கட்டு வனப்பாக்கிக் கொண்டார். வைத்தியம் பற்றி டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் கேட்டறிந்து கொண்டார். கட்டுரை எழுதுவதற்கு ஆரணி. குப்புசாமி முதலியாரையும், கவிதை புனைவதற்கு வித்துவான் அமிர்தம் சுந்தரநாத பிள்ளையையும் முன் மாதிரியாகக் கொண்டார். இவருக்குப் பத்திரிகை எப்படி நடத்துவது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தவர் ஜே. எஸ். கண்ணப்பர் ஆவர். அரசியல் துறையில் இறங்கு வதற்கு இவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் டாக்டர் சி. நடேச முதலியாராவர். மேலும், தனித் தமிழ்ப் பற்றுக்குப் பேராசிரியர் மறைமலையடிகளையும், தொண்டுக் குத் தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனாரையும், சமூக சீர்திருத்தத்திற்குப் பெரியார் ஈ. வே. ராமசாமியை யும், பேச்சுக்கு திரு. உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையையும் இவர் தமக்குரியவராகக்கொண்டார். சைவ சித்தாந்தத்தை கொரடாச்சேரி வாலையானந்த சுவாமிகளிடமும், சங்க நிர்வாகம் செய்வதை டி. ஆர். சுந்தரம் பிள்ளை பி.ஏ. பி.எல் அவர்களிடமும், பைபிளைப் பற்றி அருட்டிரு. ஜி. சாமி யல் நாட்டாரிடமும், குரானைப் பற்றி சையத் முர்த்துஷா ஹஜரத்திடமும், வேதாந்தத்தைக் குறித்து நீலகிரி டி. எஸ். பெரியண்ண பிள்ளையிடமிருந்தும் தெரிந்து கொண்டார். மிதிவண்டிகளைப் பழுதுபார்க்க முத்துக் கிருஷ்ண நாயுடுவிடம் கற்றுக்கொண்டார். பொருளா தாரம் பற்றி இராஜா. சர். மு. அண்ணாமலை செட்டியாரிட மிருந்தும், நூல் நிலையம் வைத்துக் காப்பாற்றுவதை வித்து வான் ம. பெரியசாமி பிள்ளையிடமிருந்தும், நேர்மையை

ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனாரிடமிருந்தும், அஞ்சா மையை ச. சோ. பாரதியிடமிருந்தும், இசை நுட்பத்தை திருவனந்தபுரம். தி. இலக்குமண பிள்ளையிடமிருந்தும், நடிப்புப் பற்றி இரங்கூன். இராஜபாபு பிள்ளையிடமிருந் தும் உய்த்து உணர்ந்துகொண்டார்.

விசுவநாதத்திற்குள்ள இயற்கை மதிநுட்பத்தினு லும், பெரியோர்களிடமிருந்து தமக்குவேண்டியவற்றை ஏற்றுக்கொண்டு முயற்சியுடையவராய் விளங்குதலினு லுமேதான், இன்று அவர் பல துறைகளில் அறிவு மிக்க வராய்த் திகழ்கின்றார். தமக்கு வழிகாட்டியாக இருந்த வர்களை அவர் என்றென்றும் நினைவில் வைத்துக்கொண்டு, தக்க சமயத்தில் அவரவர் பெருமையை எடுத்துரைத்து நன்றி செலுத்தி வருகின்றார்.

## 3. தொழிலில் மேன்மை யடைதல்

பெரியண்ணர் இருக்கும்பொழுதே விசுவநாதத்தின் சொந்தப் பெயராலேயே வர்த்தகம் நடைபெற்று வந்தது. தந்தையிடமிருந்து புகையிலைத் தொழில் நுட்பத்தையும் நாணயத்தையும் மிக உன்னிப்பாகக் கவனித்து, அவரைப் போல் தம்மையும் தகுதியுடையவராக ஆக்கிக்கொண்டார், விசுவநாதம்.

சிறிது காலம் வரை தமது தந்தையார் நடத்திய, சுமார் 200 பேர் வரை வேலை செய்துவந்த, சுருட்டுத் தொழிற்சாலையைத் திறம்பட நடத்தினார். பிறகு அதை அறவே நிறுத்திவிட்டு வெளிநாடுகளுக்குப் புகையிலை

ஏற்றுமதி செய்யும் தொழிலை மேற்கொண்டார். அவரது புகையிலை ஏற்றுமதித் தொழில்—இலங்கை, பர்மா, ஐக்கிய மலாய் நாடு, சிங்கப்பூர், ஜாவாதீவு, பிஜித்தீவு முதலிய பல்வேறு நாடுகளில் பரவி வெற்றிகரமாக நடைபெறத் தொடங்கிற்று. வர்த்தகம் செழிக்கச் செழிக்க தொழில் துறையில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு உண்டாயிற்று.

ஆகவே, அவர் சென்னை மாகாணத் தென்னிந்திய வர்த்தக சங்கத்தில் முதலில் ஒரு சாதாரண உறுப்பினராகச் சேர்ந்தார். பிறகு, தமது திறமையால் நிர்வாக உறுப்பினராக உயர்ந்தார். தென்னிந்திய வர்த்தக வளர்ச்சிக்காக அவர் அல்லும் பகலும் அயராது உழைத்த உழைப்பு, அவரைத் தொழில் நிபுணராக ஆக்கியதுமன்றி, முன்னணியிலே இருந்த வியாபாரிகளின் நன்மதிப்பையும் பெற்றுக் கொடுத்தது.

இம்மட்டும் அவர் நின்றுவிடவில்லை. திருச்சியிலே பீடி, பொடி, புகையிலை, சுருட்டு வியாபாரிகள் குறைகளையுணர்ந்து, அவைகளைப் போக்க, "திருச்சி புகையிலை வியாபாரிகள் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை முதன் முதலாகத் தோற்றுவித்தார். அச்சங்கத்தை உடனே பதிவு செய்து, அதன் மூலம் குறைகளையப் போராடி பலருக்கு நன்மைகளைத் தேடித் தந்தார். வியாபாரிகளுக்கென ஒரு சங்கம் கண்டதுடன் விசுவநாதம் வாளாயிருந்து விடவில்லை. திருச்சியில் சுமார் 10,000 பேர்களைக் கொண்ட பீடி, சுருட்டுத் தொழிலாளர்களுக்கென ஒரு கழகம் அமைத்து, அதற்குச் சரியாக 12 ஆண்டுகள் வரை அவரே தொடர்ச்சியாகத் தலைவராக இருந்து வந்தார். இந்த வகையில் அவர் தொழிலாளர் நலன் விழையும் வியாபாரியாகவும் விளங்கினார். மேலும், அவர் அவ்வப்போது

தொழிலாளர்களுக்காகப் போராடிய நேர்மையும், வேலை நிறுத்தக் காலங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குச் சொந்தத்தில் அரிசி வழங்கிவந்த செய்தியும், தொழிலாளர்களுக்காகப் பலமுறை கூலி உயர்வு வாங்கிக் கொடுத்த வெற்றியும் என்றும் மறக்கக் கூடியனவல்ல. எனவேதான், தென்னிந்திய வாணிப உலகிலும் தொழிலாளர் உலகிலும் திருச்சி விசுவநாதத்தை எல்லோரும் தெரிந்துவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

வர்த்தகத்தில் விசுவநாதம் தம் தந்தையைக் காட்டிலும் அதிகமான மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றிருக்கிறார் என்பது நான் கூறுவதல்ல. அது திருச்சி மக்களின் கருத்து—தீர்ப்புங்கூட! வர்த்தகத்தில் இவர் கையாளும் முறை வியந்து பாராட்டத்தக்கதாக இருக்கின்றது. பல ஊர்களிலிருந்து நாள்தோறும் வரும் விற்பனையாளர் கடிதங்களுக்கு அன்றன்றே பதில் எழுதிவிடுகிறார். அவர்கள் அனுப்பும் பணத்தை உடனே வரவு வைக்கின்றார். அவர்களுக்கு அனுப்பியுள்ள சரக்கின் மொத்த மதிப்பில் வரவுபோக எஞ்சிய பாக்கியையும் குறித்துக் கொள்கிறார். விற்பனையாளர்களிடம் மட்டுமல்ல, தமது சொந்தத்திற்கு ஆகும் சிறு செலவையும் அப்போதைக்கப்போதே குறித்துக்கொண்டு, அன்றிரவே கணக்கெழுதிவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்.

புகையிலை கொள்முதல், விற்பனை, இருப்பு முதலியன பற்றியும், கொடுக்கல் வாங்கல், பயிர்த்தொழில், குடிக்கூலி, குடும்ப வரவு செலவு முதலியன பற்றியும் இவர் கையாலே சென்ற 30 ஆண்டுகளாகக் குறிப்பும் பேரேடும் எழுதப்பட்டு வருகின்றன. சாவு செய்தி வந்தாலும் எழுதவேண்டிய கணக்கை எழுதிவிட்டே, அச்செய்தியைப் பற்றிக் கவனிப்பார் விசுவநாதம் என்று சொல்லப்படுவதிலிருந்தே

கணக்கு வழக்கில் அவருக்கிருக்கும் பிடிப்பை உணர்ந்து கொள்ளலாம்.

மற்றவருக்கு ஆறு நாள் பிடிக்கும் விற்பனைவரி, வருமானவரி கணக்கை, அரைமணி நேரத்திலேயே தணிக்கை அதிகாரிகளும் மலைக்கும்படி, மிகத் தெளிவாக விளக்கிக்கூறி ஒப்புதல் பெற்று வெளிவருவராம் விசுவநாதம். ஆங்கில அறிவுமிக்கவர்களும் இவர் கணக்கு வைத்திருக்கும் நேர்மை, ஒழுங்கு முறையைப்பற்றி வியந்து பாராட்டுவார்களென்றால், இது பற்றி இன்னும் என்ன சொல்ல வேண்டும்!

## 4. இல்லற வாழ்வு

திரு. விசுவநாதம் தமது இருபத்தோராவது வயதில், திருச்சிக்கு அடுத்த வாகனேரி கிலக்கிழார் திரு. நா. வீரபத்திர பிள்ளையின் புதல்வி செல்லக் கண்ணம்மாளை 15-9-1920-ல் திருமணம் செய்துகொண்டார். இவ்வம்மையாருடன் விசுவநாதத்தின் இல்வாழ்க்கைத் தேர் மூன்றாண்டுகள் வரை எவ்வித இடையூறுமின்றி ஓடியது. இதற்குள் செல்லக்கண்ணம்மாள் நிறை வாழ்வு வாழ்ந்து, கணவனை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்து, காமாட்சி என்ற பெண்மகவை ஈந்து, திடீரென இறந்து விட்டார். அவ்வம்மையின் நினைவுப் பொருளாகக்கூட இல்லாமல், அக்குழவியும் உடனே மறைந்துவிட்டது! "செல்லக்கண்! நீ விண்ணிற் செல்லக்கண்டெவர் சகிப்பார்? செப்புவாயே!" என்பது செம்பூர் வித்துவான். வி. ஆறுமுக சேர்வை அவர்களின் வாக்கு.

செல்வக் குடியில் பிறந்து, வருத்தம் இன்னதென்று அறிய முடியாத சூழ்நிலையில் வளர்ந்து வந்த விசுவநாதத்திற்குச் செல்லக்கண்ணம்மாளின் மறைவு பேரிடியைத் தந்தது. தம் மனைவியின் மீதிருந்த பற்றின் காரணமாக, வாழ்க்கையில் சலிப்புற்று, மூன்றாண்டுகள் வரை பலர் வற்புறுத்தியும் இரண்டாந் திருமணம் செய்து கொள்ளாமலே விசுவநாதம் காலங் கடத்தி வந்தார். இக்காலத்தில் அவர் தம் தொழிலைக் கவனிப்பதிலும், பொதுத் தொண்டுகளில் ஈடுபடுவதிலும் முழு கவனம் செலுத்தி, தம் துயரை மறந்து வந்தார். இதற்குப்பின் தமது பெற்றோர், உறவினர் வற்புறுத்தலுக்கு இணங்கி முசிரி தாலுகா சீனிவாசநல்லூர் நிலக்கிழார் கிருஷ்ணசாமி பிள்ளையின் தலைமகள் இராஜாம்பாளை 25-1-1926-ல் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். இந்த இரண்டாம் மனைவி நான்கு ஆண்டுகள்வரை நல்வாழ்வு நடத்தி, மங்கையர்க்கரசி என்ற ஒரு பெண் மகவையும், மாணிக்கவாசகம் என்ற ஓர் ஆண் மகவையும் முறையே ஈந்து, பின்னர் 19-3-1929-ல் இயற்கை எய்தினார்.

இவ்விரு குழந்தைகளும், 'தாயைப் பிரிந்து நெடுநாள் நிலைக்க மாட்டோம்' என்று கூறுவதுபோல், காலச்சதிக் கிடங்கில் கவலைக் குறிகளாக இருந்து, கனவாகப்போய் விட்டன! முதல் மனைவியுடன் இல்லற வாழ்வு மூன்றே ஆண்டுகள்; இரண்டாம் மனைவியுடன் நான்கே ஆண்டுகள். செல்லக்கண்ணம்மாளைவிட இராஜாம்பாள் நற்குண நற்செய்கைகளில் மிக்கு விளங்கியவர். இத்தகைய இரண்டாம் மனைவி இறந்தபோது தன்னிரண்டு, கண்களையும் இழந்ததாகவும், இவ்வுலகமே இருண்டுவிட்டதாகவும் விசுவநாதம் கருதினார். இவ்விருவர் மறைவுக்கும் இரங்கி, பல புலவர்கள் சரம கவிகள் பாடினார்கள். அவைகள் அவரது ஆருத்துயரை ஓரளவு ஆற்ற முயன்

றன! ஆனால் முற்றும் தணிக்க அவைகளுக்குச் சக்தியில்லை. தம்முடைய துன்பத்துக்கு தம் நெஞ்சம் துணையாவதைத் தவிர, வேறு நல்ல துணை ஏது? ஆகவே, விசுவநாதம் தம்மைத் தாமே தேற்றிக் கொள்ளவேண்டியவரானார்! காலச்சக்கரம் உருண்டோடிக்கொண்டிருந்தது.

விசுவநாதத்தின் தமக்கையருள் ஒருவரான பார்வதியம்மாளை, சோழவந்தான் புகைவண்டி நிலைய அதிபர் திரு. பெரியசாமிப்பிள்ளைக்கு மணம் செய்வித்திருந்தார்கள். நாளடைவில் அந்தம்மாள் கருவுற்று 19-6-1911-ல் ஒரு பெண் மகவை விசுவநாதம் வீட்டிலே ஈந்தாள். அன்றிரவே அன்பர் விசுவநாதத்தின் அருமைத் தாயார் இயற்கை எய்தினர். அப்பெண்ணிற்கு தம் தாயாரின் பெயரேயே சூட்டினார்கள். அப்பெண் (சுப்புலட்சுமி) 18 வயதானதும் விசுவநாதம் சுப்புலட்சுமியைத் தம் மூன்றாவது மனைவியாக ஏற்றுக்கொண்டார். சுப்புலட்சுமி அம்மாளுக்கு 6 பெண்மக்களும் 4 ஆண்மக்களும் பிறந்தனர். அவர்களில் கடைசி மகனான இராஜரத்தினம் என்பான் இந்தி எதிர்ப்பு இயக்கம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், திடீர் மரணமடைந்தான். மேலும் பூங்கொடி என்ற பெண்மகவும் இறந்து போயிற்று.

துயர ரேகை படராத விசுவநாதத்திற்கு இல் வாழ்க்கையில் எத்தனை சோதனைகள்! முதல் இரு மனைவிகளையும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளையும், அதற்குப் பின்பு இரண்டு குழந்தைகளையும், ஒன்றன்பின் ஒன்றாக இழந்து வந்திருக்கிறார். இவை நெஞ்சைப் பிளக்கும் சம்பவங்கள்தாம். வாழ்க்கையில் வேறு எத்தனை வசதிகள் இருந்தபோதிலும், சேய்ச் செல்வத்தையும் ‘இல்லற ஜோதி’களையும் இழப்பதென்றால், அவை அவரை வேதனை

யின் எல்லைக் கோட்டிற்கே இழுத்துச் சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. என்றாலும் மனத்திண்மை மிக்க விசுவநாதம் அவர்கள் இத்தனைத் துன்பங்களையும் தாங்கிக் கொண்டார். சிலர்போல் வாழ்க்கையை வெறுத்து ஓடாமல், இயற்கையின் உண்மையை உணர்ந்தவரின் உள்ளத்தைப் பெற்று, அமைதியாக தமது அன்றாட அலுவலைக் கவனிப்பதில் துயரத்தை மறந்து வந்தார். இச்சமயத்தில் கௌதமபுத்தர் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று நினைவிற்கு வருகிறது.

கருணைக் கடலான புத்தர், வடஇந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து தம் அன்புக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். அப்பொழுது ஓர் ஏழைப் பெண் அவரை அடைந்து, "பெரியவரே! என் ஒரே அன்புக் கண்மணி திடீரென இறந்துவிட்டது. அதை உயிர்ப்பித்தருள வேண்டும்" என முறையிட்டழுதாள். அவளது துயர் மொழி, புத்தரின் தூய உள்ளத்தையும் சுட்டது! மனிதர்களால் அடைய முடியாத பெருநிலையை அடைந்தவராக இருந்துங்கூட, தாம் அம்மகவை எழுப்ப இயலாதவராய், அவளது மனக் குறையை மாற்ற எண்ணி, "அம்மையே! சாகாதவர் வீட்டுக் கடுகாக ஒரு பிடி கொண்டுவந்தால் உமது குறையைப் போக்கிவிடுவேன்" என்று கூறினார். உடனே அப்பெண் மகிழ்ச்சியுடன் துள்ளி ஓடினாள். வீடு வீடாகச் சென்று கடுகு கேட்டாள். ஆனால், அவள் சென்றுகேட்ட இடமெல்லாம் செத்துப்போனவர் வீடாகவே இருந்ததை அறிந்தாள். ஆதலால் பிறந்தவர் இறப்பது இயற்கை என்ற பேருண்மையை உணர்ந்து கொண்டாள். அதனால் அவள் புத்தரிடம் சென்று, குழந்தையை எழுப்பித் தரவேண்டுமென்று கேட்கும் கோரிக்கையையே விட்டுவிட்டாள்.

திரு. விசுவநாதமும் தாம் கற்ற கல்வியாலும் கேட்ட கேள்வியாலும் இவ்வுண்மையை உணர்ந்து, 'இறப்பு வாழ்க்கையில் இயல்பு' எனத் தெளிந்தார். அதனால், அவர் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள் பலவும், அவர் தம் உள்ளத்தை பெருங் கலக்குக் கலக்கிவிட முடியவில்லை. தமது மகன் இராஜரத்தினம் மறைந்த காலத்தில், வீட்டில் இருந்து வருந்திக்கொண்டிராமல், தமிழ் நாடு முழுவதும் இந்தி எதிர்ப்பு முழக்கம் செய்து வந்தார். அருமை மகனின் மரணம் அவரது பொது ஊழியத்துக்குத் தடையாக நிற்கவில்லை. "இதெல்லாம் இயற்கை" என்று துணிச்சலுடன் மேற்கொண்டு நடைபெற வேண்டிய தொண்டில் ஈடுபடலானார்.

இந்த வகையில் விசுவநாதம், வங்காள நாவலர் சுரேந்திரநாத் பானர்ஜியுடன் ஒப்பு எண்ணத் தக்கவர். பானர்ஜியும் தம் மகன் இறந்த செய்தி கேட்டபோது, "முடிவு அவ்வளவுதான்" என்ற திடநம்பிக்கையுடன், தாம் மேற்கொண்டிருந்த கிழக்கிந்திய சங்கப்பணியிலே முன்னிலும் அதிகமாக ஈடுபட்டார். இருவேறு பகுதியிலுள்ளவர்களின் மனத்திண்மை ஒத்துப் போவது இங்கு நினைவு கூரத்தக்கது. செல்வன் இராஜரத்னம் மறைவுக்கு இரங்கி, "இராஜரத்னம் மறைந்தது" என்ற தலைப்பில் 'விடுதலை'யில் அக்காலத்தில் ஒருதுணைத்தலையங்கம் எழுதப்பட்டது. அதில் மேற்சொன்ன வங்க முடிசூடா மன்னன் பாபு சுரேந்திரநாத் பானர்ஜியின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்று, ஒப்புக்காட்டப் பட்டிருக்கிறது. கலங்கி வந்த கண்ணீர் வெள்ளத்துக்குக் கடமை எனும் அணை கட்டி, வேதனையுறும் உள்ளத்திற்குப் பொதுத் தொண்டெனும் மருந்திட்டு, கலங்காத உள்ளத்தினராய் புன்முறுவலை முகத்திலே ஏந்தி, இந்தி எதிர்ப்பு வேலையைத் தொடர்ந்தார் — நடத்தினார் — வெற்றி கண்டார் விசுவ

நாதம்! இதை நினைக்கும்போது, கொண்ட கொள்கைக் காகத், தம் ஆருத்துயரையும் அடக்கிக்கொள்ளும் மன வலிமைபடைத்த அடலேறு விசுவநாதத்தின் அக்கால வீரத்தோற்றம் நம் கண்முன் நிழலாடுகின்றது! என்னே அவரது கடமை உணர்ச்சி என்று வியப்பு மேலிடுகின்றது!!

## 5. தொண்டுள்ளம்

விசுவநாதத்தின் குடும்பமே சைவப்பற்று மிக்க குடும்பம். எனவே, அவர் இளமையில் சைவத்தொண்டில் ஈடுபட்டதில் வியப்பொன்றுமில்லை. மேலும் அவரது தமிழ் நூலாராய்ச்சி, சைவப் பெரியார்களின் கூட்டுற வைத் தேடித்தந்தது. இதனால் விசுவநாதம் திருசிரபுரம் சைவசித்தாந்த சபைக்குச் சிலகாலம் துணை அமைச்சராக இருந்து தொண்டு ஆற்றியுள்ளார். அவரது சைவப்பற்றும் தமிழ்க் காதலும் ஒன்றை யொன்று இளமைக் காலத்தில் தழுவி வளர்ந்ததால், தமிழ் நாடு முழுவதும் அவரது புகழ் பரவத் தொடங்கியது. தொடங்கவே, சைவசித்தாந்த சபைகளும், தமிழ்ச் சங்கங்களும் விசுவநாதத்தைச் சொற் பொழிவாற்ற வருந்தி அழைத்து மேடை ஏற்றி மகிழ்ந்தன. 1921-பிப்ரவரி 5-ந்தேதி திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப் பிடார சித்தி விநாயகர் சபை ஆண்டு விழாவில், வெள்ளக் கால் திரு. ப. சுப்பிரமணிய முதலியார் தலைமையில், "அன்பு" என்னும் பொருள் பற்றித் தமது முதல் சொற் பொழிவைச் செய்து, பேச்சரங்கம் ஏறினார் அறிஞர் விசுவ நாதம். இதுவே அவரது கன்னிப் பேச்சாகும் (Maiden speech). அந்நாள் முதற்கொண்டு அவரது நாவன்மையைத்

தமிழ் நாடு முழுவதும் நன்கு அறிய வாய்ப்புக் கிட்டியது. தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை முதலிய பல சைவ சபைகளிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்ற பல தமிழ்ப் பேரவைகளிலும் பல சொற்பொழிவுகளாற்றி, சைவப் பெருமக்களாலும், தமிழ்ப் பேரறிஞர்களாலும் நன்கு பாராட்டப்பெற்ருர் விசுவநாதம். இவைகளால், அவரது பேச்சாற்றல் பெருக ஊக்கமும் தூண்டுதலும் ஏற்பட்டது. சைவத் திருக்கூட்டத்துடன் நெருக்கம் அதிகமாக, சைவப்பற்றுப் பெருகி பஞ்சாட்சரபுரம் மறைத் திருவாளர் வாலையாநந்த சுவாமிகளிடம் “சிவ தீட்சை” பெற்ருர். இதன் பிறகு பல்லாவரம் மறைமலை அடிகளை சைவத்திற்கும், நாவலர் ந. மு வெங்கடசாமி நாட்டாரவர்களைத் தமிழுக்குமாக விசுவநாதம் பேராசிரியர் களாகக்கொண்டு, பெரு மதிப்புச் செலுத்தி வந்தார். தமிழையும் சைவத்தையும் போற்றுவதோடு விசுவநாதம் நின்றுவிட வில்லை. சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும் என்னும் உண்மையை உணர்ந்து உடலைப் பேணுவதிலும் கருத்தைச் செலுத்திஞர். உடற் பயிற்சிக்கு ‘வஸ்தாத்’ சையத் உசேனை ஆசிரியராகக்கொண்டு, உடற் பயிற்சி செய்து தம் உடலைப் பாதுகாத்து, கவர்ச்சியும், வலிமையும் மிக்கதாக ஆக்கிக்கொண்டார். இதே சமயத்தில் வர்த்தகத்திற்கு தம்முடைய தந்தையை ஆசிரியராகக்கொண்டு அத் துறையிலும் அருமையாக முன்னேறிஞர்.

சைவப் பற்றுள்ளவர்களும் வணிகர்களும் சாதாரணமாகத் தம்தம் எல்லைக்கோட்டினுள்ளே நின்று விடுவதைக் காண்கிரும். ஆஞல், விசுவநாதமோ இவ்வெல்லை விளிம்பிற்கு வெளியேயும் அடியெடுத்து வைத்தார். சமுதாயத்தில் காணப்படும் சாதி வேற்றுமை, பெண்ணடிமை தீண்டாமை முதலிய இழிவுகளைப் போக்கவேண்டுமென்று

கருதினார். இவ்வகையில் பெரியார் ஈ. வே. ராமசாமியைத் தலைவராகக் கொண்டு, தமது நாவன்மையாலும் செயலாற்றும் திறமையினாலும், நாடெங்கும் தன்மானஎழுச்சியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். இன்னும் அரசியலில் டாக்டர் சி. நடேச முதலியாரைத் தலைவராகக் கொண்டு அத்துறையிலும் தமக்கிருந்த ஆற்றலைப் புலப்படுத்தினார். இவை அனைத்தும் அவரது தொண்டு உள்ளத்தையும், துணிகரச் செயலையும் நமக்கு நன்கு விளக்கிக்காட்டுகின்றன.

## 6. நீதிக்கட்சியுடன் தொடர்பு

இந்தியாவின் விடுதலைக்காகத் தோற்றுவிக்கப்பட்டது இந்திய நாட்டுப் பேரவை (காங்கிரஸ்). ஆனால், இப்பேரவையில் தொடக்கத்தில் மிகவும் பங்குகொண்டிருந்தவர்கள் பணக்காரர்களும் வழக்கறிஞர்களுமே யாவர். பாமர மக்களுக்கு அதில் இடம்பெற வசதி கிடைத்ததெல்லாம், காந்தியார் அரசியல் நுழைவிற்குப் பின்னர்தான். தென்னாட்டிலிருந்து டாக்டர். டி. எம். நாயர், தியாகராய செட்டியார், எஸ். சீனிவாச ஐயங்கார், வ, உ. சிதம்பரனார், ஈ. வே. ரா, டாக்டர். வரதராஜுலு நாயுடு, திரு. வி. கல்யாணசுந்தரனார், உள்ளிட்ட பெருமக்கள் அவ்விடுதலை இயக்கத்தில் பெரும் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். ஆயினும் தென்னாட்டைப் பொறுத்தவரை இந்நாட்டுப் பெருங்குடிமக்களின் பெருவாழ்வை அசட்டை செய்யும் வழியில் அதன் போக்கு இருந்தது. அதில் தென்னாட்டுப் பார்ப்பன வழக்கறிஞர்கள் பெரிதும் இடம் பெற்றுத் தங்களது வைதீக வர்ணாச்சிரம தர்மத்திற்கு ஊறு

ஏற்படாத முறையில்—எவ்வித சீர்திருத்தமும் செய்யப் படாத வகையில்—கண்ணும் கருத்துமாய் இருந்து வந்ததோடு உத்தியோகங்கள் அனைத்தையும் தாங்களே கைப் பற்றி வந்தனர். இதை உணர்ந்த பார்ப்பனரல்லாத தலைவர்களான டாக்டர் டி. எம். நாயரும், தியாகராய செட்டியாரும் காங்கிரஸ் பார்ப்பனரின் கூடாரமாக இருப்பதால், இவர்களுடன் சேர்ந்து எவ்வித நன்மையும் தென்னாட்டிற்குச் செய்யமுடியாதெனை அறிந்து, அதைவிட்டு வெளியேறித் தென்னாட்டிற்கென ஒருதனியான விடுதலை இயக்கம் இருந்தால்தான், தம்முடைய கலை, கலாசாரம், நாகரிகம் முதலியவற்றைப் பாதுகாக்க முடியும் என்ற முடிவிற்கு வந்து, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (The South Indian Liberal Federation) என்ற பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். இம்மாதிரியான அமைப்பு ஏற்பட்டு வேலைசெய்ததால் பார்ப்பனர்களுக்குத் தாம் முன்போல ஏகபோக உரிமை அனுபவிக்க முடியாதென்ற மனக்குறையுண்டாயிற்று. அதனால் அவர்கள் தேசீயப் பேரவையின் மூலமாக, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை ஒரு 'வகுப்புவாத ஸ்தாபனம்' எனக் கூற ஆரம்பித்தனர்!

இந்தியத் துணைக் கண்டம் ஒரு விசித்திரமான நிலப் பகுதி. இங்குப் பலவித இனத்தினரும் மொழியினரும் சாதியினரும் இருக்கின்றனர். இப்படிப்பட்ட சிக்கலான நிலையில் சாதி வேற்றுமையை மதபேதத்தை மொழிச் சிக்கலை வைத்துக்கொண்டே, விடுதலை யார்வம் கிளர்ந்து எழ வேண்டுமானால் அது எப்படி எளிதில் முடியும்?

நீதிக் கட்சி ஒரு தனிப்பட்ட சாதியின் நலனுக்காகப் பாடுபடவில்லை. தென்னாட்டின் எல்லாமக்களுக்கும், அவரவர் விகிதாசாரப்படி உத்தியோகங்களிலும், கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இடம் பெற வேண்டுமென்ற நியா

யமான கோரிக்கையை உள்ளடக்கிப் போரிட்ட ஓர் உயரிய இயக்கம். அதன் தொடக்கக் காலத் தூண்களான டி. எம். நாயரும், தியாகராய செட்டியாரும் சிறந்த அறிஞர்கள். மக்களுடன் மிக நெருங்கிப் பழகி, அவர்களது குறைகளை நன்கு அறிந்தவர்கள். அதுமட்டுமல்ல, நாட்டு விடுதலை உணர்ச்சியில் மற்ற எவர்க்கும் சிறிதும் குறைந்தவர்களல்லர்.

ஒரு சமயம் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்த போது, அப்பொழுது நகராண்மைக் கழகத் தலைவராக மிகச் செல்வாக்குடன் விளங்கிய தியாகராய செட்டியார், தாம் எப்பொழுதும் அணியும் வெள்ளையுடையுடன் இளவரசரைக் காண விரும்பினார். ஆனால் வெள்ளையர்கள், அவர் வேறுவகை நிறத்தில் சிறந்த உடையைத் தரித்துக் கொண்டு செல்லவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். உரிமை உணர்ச்சியும், தன்மானமும் மிகுந்த 'வெள்ளுடை வேந்தரான' தியாகராய செட்டியார், "என்னுடைய இயல்பான போக்குப்படி வெள்ளுடை அணிந்துதான் போவேன். அப்படி அணியக்கூடாதென்றால், வேல்ஸ் இளவரசரைச் சந்திக்க எனக்கு விருப்பமில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார். அதிகாரிகள் அவரது உறுதியைக் கண்டு வியந்து, வேறு வழியின்றி, அவரது கோரிக்கையின்படி நடக்கச் சம்மதித்தார்கள்.

இச் சம்பவம் நடந்த பலவாண்டுகள் கழித்து, காந்தியார் லண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டிற்குச் சென்றபோது ஐந்தாம் ஜார்ஜ் அரசரைத் தமது எளிய உடையிலே கண்டுபேச விரும்பினதும், அதற்கு ஆங்கிலேயர் முதலில் தடைசெய்து பின்னர் ஒத்துக் கொண்டதும், இங்கு நினைவு கூர்ந்து ஒத்து எண்ணத்தகும். இவ்வகையிலும் தென்னாட்டுத் தலைவர், வடநாட்டுத் தலைவர்களுக்கு "முன்னோடியாக" விளங்கியுள்ளார்!

இப்படிப்பட்ட தன்மானமிக்க தலைவரின் கீழ் தென்னாட்டு விடுதலை இயக்கமான தென்னிந்திய நல உரிமைக் கழகம் (நீதிக் கட்சி) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வந்தது. ஏறக்குறைய 34 ஆண்டுகளுக்குமுன் (1920) நமது விசுவநாதம் அவர்கள் தமது வியாபார வசூலுக்காகச் சென்னைக்கு வந்த சமயத்தில், கடற்கரைக்குச் சென்றார், அங்கு வெள்ளம்போல் ஓர் கூட்டம் கூடியிருந்தது.


டாக்டர் நடேச முதலியார் அக்கூட்டத்திற்குத் தலைவராக வீற்றிருந்தார். சர். பி. தியாகராய செட்டியார் சொற்பொழிவாற்றினார். நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் கட்சி) யின் நோக்கம் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமேயன்றி பார்ப்பன துவேஷமல்லவென்று, தக்க காரணங்களுடன் அவ்விரு பெருந்தகைகளும் பேருரை செய்தனர். அவர்களது விளக்கவுரை விசுவநாதத்தின் உள்ளத்திற்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது.

பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்கு நீதிக்கட்சி இன்றியமையாததென்றும் அதன் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டியது பார்ப்பனரல்லாதாராய்ப் பிறந்தவர்களின் நீங்காக் கடமை என்றும் உணர்ந்தார் விசுவநாதம். ஒன்று உயரியதெனப் புலப்பட்டால், அதற்காகப் பாடுபட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொள்வது, விசுவநாதத்தின் இயல்பு. ஆகவே, அவர் உடனே நீதிக்கட்சியில் ஒரு சாதாரண உறுப்பினராகச் சேர்ந்தார். பின்னர் படிப்படியாக அதன் கிளை, தாலுகா, ஜில்லா சங்கங்களிலும் பொறுப்பான பதவிகள் பெற்றுத் திறமையாக உழைத்து வந்தார். கடைசியாக 1938-ல் சென்னை மாகாண நீதிக் கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

நீதிக்கட்சி, இரட்டையாட்சிமுறை காலத்தில், சென்னை மாகாணத்தின் அரசியலைக் கைப்பற்றிப் பற்பல சீர் திருத்தங்கள் செய்தது. அவற்றுள், இந்து அறநிலையச் சட்டமும், இந்திய மருத்துவப்பள்ளி ஏற்படுத்தியதும், வகுப்புரிமை சட்டம் வழங்கியதும், நிர்வாகம் ஒழுங்காக நடைபெற, லஞ்சம், ஊழல் முதலியவைகள் இல்லாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கனவாகும். இவை பிற்கால, அரசியலை நடத்துபவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவே இருந்துகொண்டிருக்கும்!

இப்படியெல்லாம் மக்களுக்கு இன்றியமையாத சட்டங்களையும் சீர்திருத்தங்களையும் கொண்டு வந்த நீதிக் கட்சியின் செல்வாக்கைக் கண்டு, படாடோபக்காரர்களும் பட்டம் பதவி விரும்பிகளும் அதில் சேரத்தொடங்கினர்.


தென்னாட்டு விடுதலை இயக்கமாக வளர்ந்துவந்த நீதிக் கட்சியை, இக்'கனதனவான்கள்' தங்கள் நலனுக்கு உகந்த முறையில் மாற்றி அமைத்துக்கொள்ள விரும்பினர். இந்த நிலையை இந்திய தேசீய பேரவையினர் நன்கு பயன் படுத்திக்கொண்டு, இல்லாததும் பொல்லாததும் கூறி, நடைமுறையில் வராத வாக்குறுதிகளைத் தந்து, பாமர மக்களை ஏமாற்றி தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகள் பெற்றனர்! பிற்போக்காளரால் நீதிக்கட்சி மெல்ல மெல்ல சரிந்துவரத் தொடங்கியது.




சென்னை மாகாண தமிழர் மாநாடு



சென்னை மாகாண தமிழிசை மாநாடு



திருவண்ணாமலை நீதிக்கட்சி மாநாடு



திருவள்ளுவர் படிப்பக விழா

# 7. இந்தி எதிர்ப்புப் போர்

காங்கிரஸ் முதன்முறையாக அரசாங்கத்தை ஏற்று நடத்த முன்வந்ததும், அது செய்த முதல் வேலை—இந்தியைக் கட்டாயபாடமாக்கத் திட்டமிட்டதேயாம். காங்கிரஸ்காரர்கள் பொதுமக்களிடம் தேர்தலுக்காகப் பேசிய போது இந்தியைக் கொண்டுவருவது பற்றிச் சிறிதும் குறிப்பிடவில்லை. ஆனால் அமைச்சரவை அமைத்ததும் அவசர அவசரமாக அதைத் திணிக்கவேண்டுமென்று முடிவு செய்தனர்.

எத்தகைய கொடுமைகள் இழைக்கப்பட்டாலும் அவைகளைப் பொறுமையுடன் சகித்துக்கொள்வார்கள் தமிழர்கள். ஆனால், தங்கள் உயிரினும் இனிய தாய்மொழியாம் தமிழுக்கு எவரேனும் ஊறு செய்வார்களே யானால், அதைத் தடுத்து நிறுத்த முன்வராமல் இரார்கள். 'தமிழினை இகழ்ந்தவரை எம் தாய் தடுத்தபோதிலும் விடோம்' என்ற சூளுரை எடுத்துக்கொள்ள அவர்கள் ஓடோடி வருவார்கள். இந்த அழியா உணர்ச்சியின் தொடர்காவியத்தை, ஆச்சாரியார் இந்தியைக் கொண்டுவர சூழ்ச்சி செய்ய திட்டமிட்டபோது— தமிழகம் முழுவதும் கிளர்ந்தெழுந்த பெரும் எதிர்ப்பு—நன்கு காண முடிந்தது.

தமிழையே சரிவர படிக்கத்தெரியாத கேவலநிலை தமிழகத்தில் இருக்கும்பொழுது, அதை உடனடியாய்ப் போக்க முன்வராத அதிசயமான அரசாங்கம், இந்தியைச் சந்தடிச் சாக்கில் நுழைக்க வருவது அடாதசெயல் என்று உணர்ந்துகொண்டனர் தமிழர்கள். அவர்களிடையே இருந்த ஆயிரஞ் சாதி வேற்றுமையையும், மதவேற்றுமையையும் கட்சிவேற்றுமையையும் மறந்து தமிழைப் பாதுகாக்க வேண்டிய பெரும்பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். அவர்களுக்குச் சரியான பாதை காட்டும் முறையில்,

அன்பர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை அமைச்சராகக் கொண்டு திருச்சியில் 26-12-1937-ல் சென்னை மாநிலத் தமிழர் மாநாடு கூடியது. இம்மாநாட்டைக் கூட்டுவதற்காக திரு. விசுவநாதம் அவர்கள் அரும்பாடு பட்டிருக்கிறார். அன்று அவர் வெளியிட்ட அறிக்கையைப் படிப்போமானால், அது எவ்வளவு உணர்ச்சியை ஊட்டியிருக்கும் என்பது தெரியும். அவ்வறிக்கை இதுதான் :

தமிழா உனக்கு என்ன மீதி! நீ ஏன் இன்னும் உயிர் வாழவேண்டும்?

## அன்றைக்கு

தமிழனுடைய நாடு படையெடுப்பால் அழிக்கப்பட்டது! தமிழனுடைய நூல் கடல்நீரால் அழிக்கப்பட்டது! தமிழனுடைய கல்வி பார்ப்பனரால் ஒழிக்கப்பட்டது! தமிழனுடைய அறிவு புராணங்களால் மழுக்கப்பட்டது. தமிழனுடைய ஒற்றுமை ஜாதியால் பிரிக்கப்பட்டது! தமிழனுடைய பொருள் புரோகிதரால் பிடுங்கப்பட்டது. தமிழனுடைய கட்சி உபாயத்தால் ஒடுக்கப்பட்டது. தமிழனுடைய பதவி வஞ்சனையால் கவரப்பட்டது. தமிழனுடைய வீரம் உபதேசத்தால் அடக்கப்பட்டது.

## இன்றைக்கு

தமிழனுடைய மொழியை இந்தியால் சூறையாடவும் தமிழனுடைய வாழ்க்கையை இந்தியால் அடக்கவும் தமிழனுடைய உத்தியோகத்தை இந்தியால் தடைப்படுத்தவும் இந்தி மொழி கட்டாயப் படிப்பின் மூலம் சூழ்ச்சி செய்யப்படுகிறது. தமிழ் மக்களே! விழித்தெழுந்து தலைநிமிர்ந்து வாழ எண்ணமா......?

அப்படியானால் டிசம்பர் 26-ந் தேதி காலை திருச்சி 'முனிசிபல் பப்ளிக் ஹாலில்' நடைபெறும் தமிழர் மாநாட்டுக்கு வந்து சேருங்கள். மற்றவைகளை மாநாட்டில் ஆலோசனை செய்யலாம்"

என்பதே அத்துண்டு அறிக்கையிலிருந்த வீர எழுத்துக்கள்! மேற்சொன்ன இடத்தில் சென்னை மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் பம்பாய், பர்மா, பினாங்கு, இலங்கை முதலிய பிறநாட்டுப் பகுதிகளிலிருந்தும்கூட செந்தமிழர் திரண்டு வந்திருந்தனர்.

இம்மாநாட்டிற்குப் பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமை வகித்து வெகு சிறப்பாக மாநாட்டை நடத்திக்கொடுத்தார். இங்கு தமிழ் மாகாணம் ஒன்று தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும், தமிழ் வளர்ச்சிக்காகத் தனியாக ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தவேண்டும் என்றும், இந்தியைக் கட்டாயபாடமாக்குவதை வன்மையாகக் கண்டித்தும் அரசியலாரை வற்புறுத்தும் தீர்மானங்கள் நிறைவேறியது மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். மேலும், 'இந்தியைக் கட்டாய பாடமாக்குவதைத் தம் தனி உரிமையைக் கொண்டு தடுத்து இம்மாநில மக்களுடைய மொழி கலை, நாகரிகத்தைக் காவாததால் சென்னை கவர்னர்மீது தமிழர் நம்பிக்கை இழந்துவிட்டனர்,' என்னும் புரட்சிகரமான தீர்மானத்தைப் பெரியார் ஈ. வே. ரா. கொண்டுவந்தார், ஆனால், இது தலைவரின் விருப்பத்திற்கிணங்க திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

எனவே, இந்தி எதிர்ப்புப் போருக்கு முதலில் பாசறை அமைக்கப்பட்டதும், கொடிமரம் நாட்டப்பட்டதுமான பெருமை திருச்சிக்கே கிடைத்தது.

"இந்தி ஒழிய வேண்டும் அல்லது நாங்கள் மடிய வேண்டும்' என்று செந்தமிழர் சூள் உரைத்ததும் திருச்சியில்தான்"

என்று எனது நண்பர் திரு. மா. இளஞ்செழியன் தாம் எழுதியுள்ள "தமிழன் தொடுத்த போர்" எனும் நூலில் சிறப்பாகக் குறித்திருக்கிறார்.

1937-1940 ஆண்டுகளில் தமிழரெல்லாம் 'திருச்சி திட்டம் தீட்டுகிறது' என்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். 'திரும்பிப் பார் திருச்சியை' என்ற தலைப்பில் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் 'விடுதலை'யில் ஒரு தலையங்கம் எழுதி ஆரிய வட்டாரத்தினரை அக் காலத்தில் எச்சரித்தும் உள்ளார்.

உண்மையிலேயே இவ்விதம் புகழுக்குரிய திருச்சியிலிருந்து 1938 ஆகஸ்டு 1-ம் நாளன்று தமிழர் பெரும்படை ஒன்று புறப்பட்டு, திருச்சி மாவட்டத்தைக் கடந்து செங்கற்பட்டு மாவட்டத்தைத் தாண்டி, செப்டம்பர் 11-ல் சென்னை மாவட்டத்திற்கு கால்நடையாக வந்து சேர்ந்தது.

அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் தலைமையில் இத் தமிழர் பெரும்படை 42 நாட்களில் 577 மைல்கள் கடந்து வந்தது. காந்தியாரின் தண்டி யாத்திரையும், ராஜகோபாலாச்சாரியாரின் வேதாரண்ய உப்பளப் படையும் இத் தமிழர் பெரும்படையின் நாலில் ஒருபங்குகூட நடக்கவில்லை என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. பாசறை அமைத்தும், போர்க் கொடி மரம் நாட்டியும், படை திரண்டு வந்தும்கூட ஆச்சாரியார் தமிழரின் உரிமை உணர்ச்சியை—கடும் எதிர்ப்பை—மதித்தாரில்லை. அவரது 21-4-1938ன் இந்திக்கட்டாய உத்தரவினால் தமிழகத்தில் 60, ஆந்திராவில் 54, கன்னட நாட்டில் 4,

மலையாளத்தில் 7, ஆக மொத்தம் 125 பள்ளிகளில் மட்டுமே முதல் மூன்று படிவங்களில் (பாரம்) படிக்கும் இளஞ் சிறுர்கள் மீது இந்தி திணிக்கப்பட்டது! இந்த அடாத உத்தரவைக் கண்டு, கல்வி நிபுணர்களும், பேராசிரியர் களும் நடுநிலையாளர்களும் அரசியல்வாதிகளும் மற்ற பொதுமக்களும் கட்டாய இந்திப் படிப்பை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பினர். இதற்கும் ஆச்சாரியார் அடங்கினரில்லை. அவருக்குத் தடிப்பு அளவுக்கு மீறி இருந்ததால், அவர் நல்லோரின் அறிவுரைகளை அசட்டை செய்தார்.

இதனால், இந்தியை எப்படியும் தமிழ் நாட்டைவிட்டு விரட்டியடிக்க வேண்டுமென்று தமிழ்ப் புலவர்கள் கிளம்பினர்; தன்மான இயக்கத்தினர் திரண்டெழுந்தனர்; துறவிகளும் புறப்பட்டு வந்தனர்; நீதிக் கட்சியினரும் விரைந்து வந்தனர். இவர்கள் அத்தனை பேரும் ஒன்றுகூடி சென்னை மாநில இந்தி எதிர்ப்பு வாரியத்தை (The Anti-Hindi High Command) அமைத்து, அதற்குத் தலைவராக திரு. ச. சோமசுந்தர பாரதியாரையும் செயலாளராக திரு. கி. ஆ. பெ. விசுவநாதத்தையும் தேர்ந்தெடுத்தனர். திரு. பாரதியார் அவர்கள் 28-5-1938 முதல் 1939 முடிய மேற்சொன்ன வாரியத்தின் தலைவராயிருந்து, ‘இந்தியை ஒழிக்க சத்தியாக்கிரகம்-அதில் வெற்றி இல்லையேல் சட்ட மறுப்புச் செய்யவேண்டியதுதான்’ என்ற போர் முறையை வகுத்துத் தந்தார். இந்தப் போர் திட்டப்படியே நாடெங் கும் வில், புலி, கயல் சின்னம் பொறித்த தமிழ்க் கொடிகள் பறக்க விடப்பட்டு, இந்தியால் விளையும் கொடுமைகள் நன்கு விளக்கப்பட்டு, போர்ப்பரணி ஆற்றப்பட்டது. இதன் ஒரு கூறே, தமிழர் பெரும்படை ஆங்காங்கே தமிழுணர்ச்சியைக் கிளப்பி, சென்னைக்குக் கால் நடை யாக வந்ததாகும்.

பெரியார் ஈ. வே. ராமசாமியை இந்தி எதிர்ப்புப் போர்த் தலைவராகக்கொண்டு போர் முழக்கம் வெகு மும் முரமாக நடத்தப்பட்டது. இந்த இந்தி எதிர்ப்பு இயக்கம், வணிகர், பேச்சாளர், தன்மான இயக்க வீரர், நீதிக் கட்சியாளர் என்ற அளவில்மட்டும் தெரிந்திருந்த கி. ஆ. பெ. விசுவநாதத்தை, ஒரு பெரும் போராட்டத்தைத் திறம் படக் கட்டிக்காத்து நடத்தும் ஓர் அரிய போராட்ட வீரர் என்பதையும் தமிழகம் முழுவதும் அறியச் செய்து வைத்தது.

அவரது இளமை முறுக்கு, ஆழ்ந்த கல்வி கேள்வி, நீதிக் கட்சியில் அவருக்கிருந்த செல்வாக்கு, எல்லாவற்றை யும்விட அவரிடம் மண்டியிருந்த திட்டமிட்டுப் பணியாற் றும் அமைப்புத்திறன், சுடச்சுட எதிரிகளுக்குப் பதில் தரும் கூர்மைக் குணம்—இவையத்தனையும் அன்று அவரை அவ்வியக்கத்தின் முன்னணியில் கொண்டு போய்ச்சேர்த்து விட்டன!

நீதிக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது, விசுவநாதம் தமிழ் நாடு முழுவதும் தம் சொந்தப் பணத்தைச் செலவு செய்து, பம்பரம் போல் சுற்றிச்சுழன்று, 100க்கு மேற்பட்ட கிளைச் சங்கங்களை ஏற்படுத்தி ஆங்காங்கே சொற்பொழிவுகள் செய்து வந்தார்.

சிறப்பாகக் குறிக்க வேண்டுமென்றால் இந்தி எதிர்ப்புப் பிரசாரத்தின் போதுமட்டும் திரு. விசுவநாதம் தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களிலுமுள்ள 314 ஊர் களில் 480 நாட்களில் 617 சொற்பொழிவுகளைச் செய் திருக்கிறார். இதிலிருந்து அவரது தமிழ்ப் பற்றையும் பேச்சுத் திறனையும் இந்தியை ஒழிக்கவேண்டு மென்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் ஓயா உழைப்பையும் கண்டு

எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். அப்பொழுது அவர் அதிக மான சொற்பொழிவுகள் நிகழ்த்திய ஊர் தூத்துக்குடி ஒன்றே. அங்கு ஒரே நாளில் ஏழு சொற்பொழிவுகள் ஏழுவிடங்களில் நடைபெற்றிருக்கின்றன!

இதே காலத்தில், "ஓடிவந்த இந்தி பெண்ணே கேள்! நீ தேடிவந்த கோழை நாடிதல்லவே" என்ற புரட்சி கீதம் பாடிக்கொண்டு தமிழர் அறப்போரில் இறங்கினர்.

சென்னையில் முதலமைச்சர் ஆச்சாரியார் வீட்டு முன் மறியலும், இந்து தியாலஜிகல் பள்ளிமுன் இந்தி எதிர்ப்புப் பிரசாரமும் செய்ய புற்றீசல்போல் தமிழர் கிளம்பி வந்த னர். இந்திக்கு தென்னாட்டில் இவ்வளவு எதிர்ப்பிருக்காது என்று தப்புக் கணக்குப்போட்ட ஆச்சாரியார் ஏமாந்தார்! இந்தி எதிர்ப்புக்காக கைதாகி சிறை சென்றவர்களின் தொகை தலைவர் பெரியார், சர்வதிகாரிகள், தொண்டர்கள் உட்பட மொத்தம் 1271. இதில் ஆண்கள் 1166; பெண் கள் 73; இவர்களுடன் சென்ற குழந்தைகள் 32. போராட் டத் தலைவர் கைது செய்யப்பட்டதும், இந்தி எதிர்ப்பு வாரியத்தின் செயலாளரான விசுவநாதம் அவர்கள் பல ஊர்களில் சுற்றுப் பயணம்செய்து உணர்ச்சிமிக்க சொற் பொழிவுகளாற்றி, இந்திப்போர் தொடர்ந்து நடப்பதற்கு வேண்டிய ஆக்க வேலைகள் அனைத்தும் செய்துவந்தார். மற்றும் பெரியாரை பெல்லாரி சிறையில் சர். பன்னீர் செல்வத்துடன் சென்று பேட்டிகண்டு, நிலைமையை விளக்கிக்கூறி, நலன் விசாரித்துத் திரும்பினார். இதே சமயத்தில் நீதிக் கட்சியின் 14-வது மாநாடு சென்னையில் (29,30-12-1938) நடைபெற்றது. அம் மாநாட்டின் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியார் ஈ. வே. ரா. சிறையி லிருந்ததால் அவரது தலைமையுரையை சர். பன்னீர்செல்வம் படித்தார். பின்பு திரு. விசுவநாதம் உருக்கத்துடன் தலைவ

ருடன் பேசிய பேச்சைக் குறிப்பிட்டு, கூட்டத்தினரைத் துக்கக் கடலில் ஆழ்த்தினார்.

மறைமலையடிகளால் முதல் முதலாக எழுப்பப்பட்ட "தமிழ் நாடு தமிழர்க்கே" என்ற உரிமை முழக்கத்தை முழக்கிக்கொண்டு, தமிழ்க்கொடி ஏந்திச் சிறை சென்ற வீரர்களில் தாளமுத்துவும் நடராசனும் இந்தி அழிப்பதற்காகவும், தமிழைக் காப்பதற்காகவும் வேண்டி, தம் இன்னுயிரைக் களபலியாகக் கொடுத்தனர். இவ்விரு இளைஞர்களின் உயிர்த் தியாகத்தால் தமிழர் அறப்போர் முன்னிலும் தீவிரமாக நடைபெறத் தொடங்கியது. இப்போரின் மும்முரத்தைக் கண்டஞ்சிய ஆச்சாரியார், போர்த் தலைவரை நிபந்தனையின்றி விடுதலை செய்து விட்டார்.

விடுதலையான தலைவரைக் கண்டு தமிழகம் மகிழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் இந்தியை அடியோடு விரட்டியடிக்கவும் துடி துடித்தது.

இதற்குள் 31-12-1939-ல் காஞ்சிமா நகரில் நடைபெற்ற பாசறையில் இந்தி எதிர்ப்பு வலுவை அடைந்தது. சென்னை அரசியலிலும் ஒரு பெருமாற்றம் ஏற்பட்டது. யுத்த காரணமாகக் காங்கிரசுக்கும் வெள்ளை ஆட்சியாளருக்கும் கருத்து வேற்றுமை எழவே, காங்கிரஸ், அமைச்சர் அவையிலிருந்து வெளியேறியது. இதனால் சென்னை மாகாணத்தின் ஆட்சியை கவர்னரின் ஆலோசகர்கள் கவனிக்க வேண்டியதாயிற்று. இவர்கள் தென்னாட்டில் இந்திக்கிருந்த கடும் எதிர்ப்பைக் கண்டு, ஆச்சாரியார் போல் வீண் பிடிவாதம் காட்டாமல், விவேகத்துடன் மக்கள் கருத்துக்கு பெருமதிப்புக் கொடுத்து, இந்தியைக் கட்டாய பாடத்திலிருந்து விருப்பப் பாடமாக இறக்கச் சம்மதித்தனர். இதைக் கண்டு தமிழகமும் தென்னாடும்,

'கட்டாய இந்திச் சனியன் ஒழிந்தது' என்று வெற்றிவிழா கொண்டாடின. பிள்ளைகளும் பெற்றோர்களும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தினருக்கு தங்கள் கிளர்ச்சி—போராட்டம்—வெற்றி பெற்றதுகண்டு தோள்கள் விம்மிப் பூரித்தன! அனைவரின் முகமும் அன்றலர்ந்த செந்தாமரை மலர்போல் காட்சியளித்தது!

வீரமுழக்கமும் வெற்றி முழக்கமும் வானைப் பிளந்தன; அவை மாற்றாரின் மனத்தைக் குலைத்தன.

வரலாற்றில் இடம் பெற்றுள்ள இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நம் விசுவநாதத்தின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

"தமிழ்நாடு தமிழர்க்கே" என்று தமிழ் மக்கள் உரிமைக்குரல் எழுப்பியபோது, அதைக் கேட்க மனம் பொறாத தமிழ்ப் பகைவர்கள் 'எலிவளை எலிகளுக்கே' என்று கேலிசெய்தனர். இந்தியை ஆதரித்துக் குட்டிக் கதைகள் சொல்லிப் பாமர மக்களை ஏமாற்றப்பார்த்தனர். இவர்களின் பொருந்தாப் புளுகுகளை விசுவநாதம் மேடை மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அம்பலப்படுத்தி, எதிரிகளுக்கு நல்லறிவு கொளுத்தினார்.

ஒரு சமயம் இந்தி ஆதரவு பிரசாரத்திற்காக இராஜகோபாலாச்சாரியார் திருச்சி வந்தபோது, அவரிடம் கேள்விகளைக்கேட்டு திணறும்படி செய்திருக்கிறார். சேலம் தர்மபுரியில் இதேமாதிரி நேருக்கு நேர் ஆச்சாரியாரைச் சந்தித்து, இந்தி ஆதரவின் மாய்மாலங்களைப் புட்டு விளக்கினார். திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒருபொழுது அவருடைய வாதத் திறமைமிக்க பேச்சைச் சுமார் ஒரு லட்சம் மக்கள் அமைதியாகக்கேட்டு, இந்தியை எதிர்க்கவேண்டிய அவசியத்தை யுணர்ந்தனர்.

அக்காலத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் காரர்களால், அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் நேர்ந்த தொல்லைகள் பலவாகும். காங்கிரஸ் கட்சியைக் கண்டித்துப் பேசுவோரின் கூட்டத்தைக் கலைக்க முற்படுவர் காலிகள். கருத்து வேற்றுமைக்கு இடந்தருவது தான் நல்லாட்சிக்குச் சிறந்த இலட்சணம் என்பதை மறந்து, காந்தியடிகளின் அகிம்சை போதனையையும் அன்றே கைநழுவ விட்டுவிட்டு, பலாத்காரத்தை எதிரிகள் மீது பயன்படுத்தவும் அக்கால காங்கிரஸ்காரர்கள் தயங்கவில்லை !

திருநெல்வேலி நகரத்திலும், அந்நகர சந்திப்பிள்ளை யார் கோவில் முக்கிலும் எட்டயபுரத்திலும் நடந்த நிகழ்ச்சிகளை மட்டும் படித்தாலே போதும், காங்கிரஸ்கார ருக்கு 'நற்சான்று' எளிதாக வழங்கிவிடலாம் !

(1) திருநெல்வேலி நகரத்தில் அவர் இந்தி எதிர்ப்புப் பிர சாரம் செய்துகொண்டிருந்தபோது, காலிகள் கற்களை வீசினர். அதைக்கண்டு சிறிதும் அஞ்சாமல், கல்லடி களால் ஏற்பட்ட இரத்தத்தைத் துடைத்துக் கொண்டு, "நான் வீட்டிலிருந்து புறப்படும்போது திரும்பி வருவதாகச் சொல்லிப் புறப்பட்டு வரவில்லை. நான் உயிரோடு இருந்து தமிழை வளர்ப்பதைவிட எனது புதைகுழி அதிகமாக வளர்க்கும்" என வீர வுரையாற்றினர். இவ்விடத்தில் மட்டுமல்ல இன்னும் பலவிடங்களில் ஏற்பட்ட தொல்லைகளுக்கும் கல்லடிகளுக்கும் அவர் பயப்படாமல் சொற்பொழிவு கள் ஆற்றியிருப்பது தமிழகத்தின் உண்மையான வரலாற்றில் பொறிக்கத் தகுந்த நிகழ்ச்சிகளாகும்.

(2) திருநெல்வேலி சந்திப்பிள்ளையார் கோவில் முக்கில் சுமார் 7,000 பேர்கள் அடங்கிய பெருங் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, எதிரிகளால்

இரண்டு வண்டி கருங்கல் சல்லி தொடர்ந்து வீசப் பட்டது. மேலும் போலீசார் குழப்பக்காரர்களை அடக்காமல் வாளாயிருந்து விட்டார்கள். ஆகவே அன்று கூட்டம் கலைக்கப்பட்டது. ஆனால் மறுநாள் அதே இடத்தில் கூட்டம் நடைபெறும் என முன்னறி விப்புக்கொடுத்து, தற்காப்புக்காகப் பல தொண்டர் களைப் பேட்டை,மேலப்பாளையம்,பாளையங்கோட்டை முதலிய இடங்களிலிருந்து வரும்படிச்செய்து, 20,000 பேர்கள் கொண்ட அக்கூட்டத்தில் நம் திரு.வி. சுமார் 6 மணி நேரம் வரை விடாமல் ஒரு அரிய சொற் பொழிவு நிகழ்த்தினர். திருநெல்வேலி மக்கள் திரு. வி. யின் அன்றைய அஞ்சாமைக் குணத்தை இன்றும் மறக்காமல் நினைவில் வைத்துக் கொண்டிருக்கி ருர்கள்.

(3) எட்டயபுரத்தில் அன்பர் விசுவநாதம் ஒரு கூட்டத் திற் பேசிக் கொண்டிருந்தார். பேராசிரியர். பசுமலை ச. சோமசுந்தர பாரதியார் அக் கூட்டத்தில் தலைமை வகித்திருந்தார். இந்திப் பிரியர்களின் கல்லெறி அளவு கடந்து போய்விட்டது. சுமார் அரைமணி நேரத்திற்கு மேல் கூட்டத்தை நடத்த முடியவில்லை. போலீசார் குறுக்கிட்டுக் கூட்டத்தைக் கலைக்கும்படித் தலைவரைக் கேட்டுக்கொண்டனர். தலைவரும் நிலை மையைக்கண்டு கலைக்க இணங்கினர். கூட்டம் கலைந் தும் கல்லடி நிற்கவில்லை. திரு. விசுவநாதம், பாரதி யார் ஆகிய இருவரையும் சுமார் 4, 5 போலீசார் சூழ்ந்து வளைத்துக்கொண்டு எதிரில் இருந்த ஒரு தகரத் தாழ்வாரத்திற் கொண்டுபோய்விட்டு, துப் பாக்கியுடன் முன்புறம் காவலாக நின்றனர். சுமார் 500 பேர்கள் வரை ஒரு கூட்டமாக நின்றுகொண்டு அரை பர்லாங்கு தூரத்திலிருந்து பேச்சாளர்கள் மீது

கற்களை விடாமல் எறிந்துகொண்டிருந்தனர். போலீசார்கள் முன்புற மிருந்ததால், அவர்களால் கல்லடிகளைத் தாங்க முடியவில்லை. ஆகவே துப்பாக்கிகளை அந் நால்வரும் நீட்டி கூட்டத்தை நோக்கிச் சுட முயன்றனர். அச்சமயத்தில் திரு. விசுவநாதம் அவர்களுக்கு முன் தாவிக் குதித்து "சுட வேண்டாம். அவர்களும் தமிழர்களே. இன்றில்லா விட்டாலும் பின்பு ஒரு காலத்தில் தம் தவறை உணர்ந்து திருந்தி விடுவார்கள்." எனக்கூறி உயிர்க் கொலை நடக்க இருந்ததைத் தடைப்படுத்தினர். கொல்ல வந்த மக்கள் மீது இரக்கங் காட்டி, அவர்களுக்கு நல்லபுத்தி வரும்படிச்செய்த திரு. வி. யின் பெருந்தன்மையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அவர் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. அன்று கலகம் செய்த அதே கூட்டத்தினர் 1949-ல் திரு. விசுவநாதத்தை எட்டயபுரத்திற்கு வரவழைத்து, மலர் மாலையிட்டு வாழ்த்தி, தங்கள் தவருன செயல்களுக்கு வெளிப்படையாக வருந்தி, கலைக் கழகத்தைத் திறந்து வைத்துப் பேசுமாறு வேண்டிக்கொண்டதும், திரு. விசுவநாதமும் முன்புவிட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பேசிமுடித்ததும் குறிப்பிடத் தகுந்த ஒரு நிகழ்ச்சியாகும். திரு. வி. யின் தெளிந்தவுரைக்கும், தேர்ந்த பண்புக்கும், அஞ்சா நெஞ்சத்திற்கும் மேற் சொன்ன நிகழ்ச்சிகள் தக்க எடுத்துக் காட்டுகளாகும்.

எதைப்பற்றிப் பேசினாலும் அது குறித்து நன்கு சிந்தித்து பதட்டமில்லாமல் சீர்தூக்கிப் பேசும் ஆற்றலில் விசுவநாதம் ஈடு இணையற்றவர். இந்தி எதிர்ப்புக் காலத்திலும் அவரது நிதான குணத்திற்குச் சான்றாகக் கீழ்க்கண்ட ஒரு நிகழ்ச்சியைத் தருகிறேன்.

1937-ல் சட்டசபை கூடியதும் வரவு செலவு (பட்ஜெட்) விவாதத்திற்கு வந்தது. அமைச்சர்களின் சம்பளத் தொகை மன்றத்தின் அனுமதிக்கு வந்தபோது சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அதை மறுத்து, "எட்டாயபுரம் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தைக் கல்லெறிந்து கலைத்த 32 பேர்கள் மீது போலீசார் தொடர்ந்திருந்த வழக்கை முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார் தலையிட்டு வழக்கைத் திரும்ப (வாபஸ்) வாங்கச் செய்து குற்றஞ் செய்தவர்களைத் தப்புவித்த செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்றார். அதற்கு முதலமைச்சர் பதில்கூறும் பொழுது, "பொதுமக்கள் முன்பு பேசுகின்றவர்கள் மரியாதையாகவும் அடக்கமாகவும் பேச வேண்டும்" எனத் துடுக்குத்தனமாகக்கூறினார். அதைக் கேட்டதும் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் ஆத்திரத்தோடு எழுந்து நின்று, "இது முழுப் பொய்! திருச்சி விசுவநாதத்தைப் போலவும், பசுமலை ச. சோமசுந்தரபாரதியாரைப்போலவும் ஆற்றல் உள்ளவர்களும், பேசும் முறை தெரிந்தவர்களும் இந்தச் சபையிலாவது வெளியிலாவது காங்கிரஸ் கட்சியில் ஒருவராவது உண்டா?" என ஒரு பெரும்போடு போட்டார். இதற்குக் கிடைத்த பதில் எல்லாம் சட்ட மன்றத்தில் சில நிமிடம் அமைதி நிலவியிருந்ததேயாகும்! அக்கால சட்டமன்ற நடவடிக்கைகளில் இந் நிகழ்ச்சி பதிவு செய்யப் பெற்றிருப்பதை இன்றும் காணலாம்.

ஆனால், இத்தனை தடபுடல்களுக்கும், பூச்சாண்டிகளுக்கும் சிறிதும் அஞ்சாமல், விசுவநாதம் தமது கடமைகளை உறுதியுடனும் சலியாமலும் நிறைவேற்றி வந்தார்.

இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட வேண்டியது இன்றியமையாதது என்றுணர்ந்து, அவர் தமது கட்சி வேலைகளிலே முழு கவனம் செலுத்தி வந்தார்.

இதன் காரணமாக விசுவநாதத்தால் தம் சொந்தத் தொழிலை மேற்பார்வையிட முடியவில்லை. இயக்கப் பணியே சிறந்த பணி என்று கருதி, மகன் இராஜரத்தினம் இறந்ததையும் அதிகமாகப் பொருட்படுத்தாமல், முன்னதின் வெற்றியிலே கருத்தாக இருந்ததால், அவருக்குச் சுற்றுப்பயணச் செலவும், காலாவதியான 'பாண்டு'களின் தொகையும் வியாபார நட்டமும் சேர்ந்து சுமார் 12,000 ரூபாய் வரை இழப்பு நேரிட்டது. இது குறித்துப் பலர்க்குத் தெரியாது. அவருடன் நெருங்கிப் பழகிய ஒரு சிலரே அறிவர்.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் அவர் திரட்டிய பணத்திற்கும், ஆகிய செலவிற்கும், அவர் வைத்திருந்த தனிக் கணக்குப் புத்தகத்தைக் கண்டு வியந்து போற்ருதவரில்லை! அவ்வளவு ஒழுங்காகவும் நேர்மையாகவும் விசுவநாதம் போராட்ட வரவு செலவு கணக்கைத் துல்லியமாக வைத்துக்கொண்டிருந்தார்.

அக்காலத்தில் அவர், சென்னை சட்டமன்றத்திற்கு வெளியே இருந்த எதிர்ப்பாளர்களில் மிகவும் குறிப்பிடத்தகுந்தவர் எனவும், கொள்கையில் நேருபோன்று அழுத்தமான பற்றுடையவரெனவும் நீல்கண்ட பெருமாள் என்பவர் தாம் எழுதிய "இந்தப் பதினெட்டு மாதங்கள்" என்ற ஆங்கில நூலில் குறித்திருக்கிருர். திரு. வி. க தமது 'வாழ்க்கைக் குறிப்புக்களில்' "இந்திக் கிளர்ச்சி வீறிட்டது, நாயக்கர் சிறைபுகுந்தார். அவ்வேளையில் அக்கிளர்ச்சியை விசுவநாதம் நடத்திய முறையும் ஒழுங்கும் நேர்மையும், திறமும் என்னை வியக்கச்செய்தன. விசுவநாதம் ஓர் இயக்கத்திற்குத் தலைமைபூண்டு, அதை நடத்தும் ஆற்றுடையவர் என்பது நாட்டுக்குச் செவ்வனே புலப்பட்டது." என்று அன்றைய விசுவநாதத்தின் அமைப்பு முறைத்

திறனை வியந்து பாராட்டியுள்ளார். இன்னும் பெரியார் ஈ. வே. ராவே "தோழர்கள் சோமசுந்தர பாரதியார், உமா மகேசுவரம் பிள்ளை, கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றவர்கள் கீழிறங்கி வந்து வினைஞர்களாகி மற்ற வாலிபர்களுக்கு வழிகாட்டிகளாகச் செல்லவேண்டும்"—என்று தலையங்கம் எழுதி, விசுவநாதம் போன்றவர்கள் இறங்கி வந்து வினையாற்ற வேண்டுமென்று சிறப்பித்துள்ளார்.

"தமிழன் தொடுத்தபோர்" என்ற நூலில் விசுவநாதத்தைப்பற்றி திரு. மா. இளஞ்செழியன்,

> "ஒல்லியான உருவம், நல்ல உயரம், கண்ணியமான பேச்சு, ஒழுங்காக வாரிவிடப்பட்ட தலை, மேலே ஒரு நீளமான சால்வை. இளஞ்சிங்கம் போன்ற தோற்றம்—இவர்தான் திருச்சித் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம். இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது அங்கும் இங்கும் ஓடி, அரிய பேச்சு நிகழ்த்தி போர் முறைத் திட்டம் வகுத்து, இயக்கவேலையை இவர் பலப்படுத்தினார். அன்பும் பிரியமுமுள்ள தோழர்களே என்று தொடங்கி, உங்கள் பொன்னடிகட்கு என் போற்றுதல் என்று சொல்லிவைத்து, தெளிவான நல்ல தமிழில் வாதப் பிரதிவாதங்களுடன் ஒருவர் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்தான் கி. ஆ. பெ. வி. என்று நீங்கள் தயக்கமின்றி சொல்லிவிடலாம்.

பெரியாரும் தளபதியும் சிறையிலிருந்தபோது இந்தி எதிர்ப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி வைத்த பெருமை தோழர்கள் பாண்டியனுக்கும் கி. ஆ. பெ. விசுவநாதத்துக்குமே உண்டு.

பெரியார் சிறைபுகுந்த அன்று சென்னைக் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் திருச்சி விசுவநாதம் பேசிய பேச்சு மிக அரிய தொன்று. "இன்று ஜஸ்டிஸ் கட்சி தன் ஒப்பற்ற தலைவரை இழந்து நிற்கிறது. சுயமரியாதை இயக்கம் தன் தந்தையைப் பிரிந்து நிற்கிறது. சென்னை மாநிலப் பகுத்தறிவாளர் ஒரு பகுத்தறிவுப் பெரு நிதியைப் பறிகொடுத்து விட்டனர். உடலும் உயிரும் போல் இருந்த தமிழர்களும் பெரியாரும் ஆச்சாரி ஆட்சியினரால் பிரிக்கப் பட்டுவிட்டனர். இந்தி எதிர்ப்பு இயக்கம் தன் தனிப் பெருந்தலைவரை இழந்துவிட்டது, ஆம்! உயிரோடு இழந்து விட்டது!!" என்று அவர்பேசியது கேட்டு கண் கலங்காத தமிழர் அங்கில்லை.

தமிழ் நாட்டையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்ட ஈ. வே. ரா. என்னும் அந்த மூன்றெழுத்துக்களை விட்டுவிட்டால் உள்ளபடியே இந்தி எதிர்ப்புக் காலத்தில் தமிழர் உள்ளந்தோறும் ஒளி வீசிய வேறு இரண்டு வாசகங்கள் அண்ணாதுரை விசுவநாதம் என்பவைதாம். சுயமரியாதை உலகம் இந்த இரண்டு காளைகளையும் தனது செல்வப் பிள்ளைகளாகக் கொண்டு மகிழ்ந்தது. தலைவர் பெரியாருக்கு இருவரும் இரண்டு கரங்கள் போல் விளங்கினர்.

தளபதி அண்ணாவின் சொற்பொழிவைப் பாறைகளையும் பெருமரங்களையும் புரட்டித் தள்ளிக்கொண்டு பேராவேசத்துடன் மலைமீதிருந்து ஓடோடி வருகின்ற காட்டாற்று வெள்ளம் போன்றது என்று சொன்னால், திருச்சி விசுவநாதனின் பேச்சை நாம் கடலோரம் நடந்து செல்கிறபோது, நிதானமாக— ஆனால் அடுக்கடுக்காக எழும்பி வந்து நம் கால்களை

முத்தமிட்டுச் செல்கின்ற அழகிய கடல் அலைகளின் தன்மைக்கு ஒப்பிடலாம்.

இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் இந்த இருவேறு சொற்சுவையும் தமிழர்க்கு மாறிமாறிக் கிடைத்து வந்தன, ஒரே மேடையில்—ஒன்றன்பின் ஒன்ருக, எதிரிகள் திகைக்கும் விதமாக"

என்று திரு. வியின் அன்றைய தோற்றம் பற்றியும், ஆற்றிய கடனைப்பற்றியும் பொருத்தமாகக் கூறியுள்ளார்.

"மொழிப் பிரச்சினை அறிஞர் குழுவில் மட்டும் விவாதிக்கப்படவில்லை விவாதம் மக்கள் மன்றத்திற்கும் இழுத்துச் செல்லப்பட்டது. பெரியார் ஈ. வே. ரா, அறிஞர் சி. என். அண்ணுதுரை, தமிழ் வீரர் கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றவர்கள் மக்கள் மன்றத்தின் நடுவில் நின்றனர். கல்வி முறையில் ஏற்பட்ட மொழிப்பிரச்சினை படிப்படியாக அரசியல் உலகில் தலை தூக்கியது. புயல் வீசத் தொடங்கியது..." என்று "மொழிப் போராட்டம்" என்ற நூலில் திரு. இரா. நெடுஞ்செழியன் திரு. விசுவநாதத்தின் பங்கை ரத்தினச் சுருக்கமாக எழுதியிருக்கிருர்.

இத்தனைபேரின் புகழுக்கும் விசுவநாதம் உரியவரானது எதனுல்? அவரது தமிழ்ப் பற்றும் அமைப்புத் திறனும், வாதத்திறமையும், பொதுவாழ்வில் அவர் காட்டிய நேர்மையுமே என்று சொன்னுல் அவ்வளவும் சொல்லுக்குச் சொல் உண்மைதானே?

# 8. நீதிக்கட்சியைத் திருத்த முயற்சித்தல்

தென்னாட்டு மக்கள் அனைவருக்கும் சரிசம சந்தர்ப்பம் தந்து அவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்ற உயரிய எண்ணத்துடன் தோற்றுவிக்கப்பட்டதல்லவா நீதிக் கட்சி? இக்கட்சி முதலில் வெகுவேகமாகப்பரவி, மிகுந்த செல்வாக்குப்பெற்று இருமுறை சென்னை மாகாண அரசியலை ஏற்று நடத்தும் சக்திவாய்ந்ததாக இருந்தது. ஆனால் இப்படிப்பட்ட கட்சியில் பணம் பட்டம் பதவி விரும்பிகள் தன்னலங் காரணமாக நுழைந்து அதைத் தங்கள் உயர்வுக்காகப் பயன்படுத்தத் தொடங்கியது முதல் அதன் செல்வாக்கு மங்கலாயிற்று. இத்தகைய சமயத்தில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாக நீதிக்கட்சியன்பர்கள் பயன்படுத்திக்கொண்டு, கட்சியை வளர்த்து இருப்பார்களேயானால் அது இன்று மறைந்துபோயிருக்கும் அவலநிலை ஏற்பட்டிருக்கவே இருக்காது. இதைக் கட்சியின் கொள்கையில் உறுதியான நம்பிக்கைகொண்ட உண்மையான நீதிக்கட்சியாளர்கள் அன்றே உய்த்துணர்ந்தார்கள். இப்படிப்பட்டவர்களில் திருவாளர்கள். ஊ. பு. அ. சௌந்திர பாண்டியன், கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்களாக இருந்தனர். இவர்கள் அப்போதிருந்த கட்சித் தலைமைமாறி, புதுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், கட்சி நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக நடைபெறும் என்று நம்பினார்கள். நீதிக்கட்சியை ஆதரிக்கும் 'சண்டே அப்சர்வர்' 'தமிழ் உலகம்' போன்ற பத்திரிகைகள் இந்தப்படியே எழுதவும் செய்தன.

நீதிக்கட்சிக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, ஆங்காங்கே கிளைக்கழகங்களையும் மாவட்டக் கழகங்களை

யும் அமைத்து, அவ்வப்போது கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, கட்சியின் கொள்கைகளை விளக்கி, பிறகு மாநாட்டைக் கூட்டித் திட்டம்வகுத்து, ஆதரவுதேடி தேர்தலில் நின்று வெற்றிபெற்று, நாட்டிற்குவேண்டிய நல்ல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று நீதிக்கட்சி ஆதரவாளர்கள் தனித்தனியே எண்ணினர்; கூடிப்பேசினர்; வெளியில் வெளிப்படையாக எடுத்துக் கூறவும் முற்பட்டனர்.

கட்சிக்குள்ளும் வெளியிலும் காணப்பட்ட இவ்விழிப்புணர்ச்சியை அறிந்து, அதன்படி செயலாற்ற வேண்டுமென்று கருதி, தலைவரிடம் நிலைமையை விளக்கிக்கூறினார், பொதுச்செயலாளராக இருந்த திரு. விசுவநாதம். ஆனால் தலைவரோ சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு ஒன்றிலேயே பெரிதும் நாட்டம் செலுத்தினாரேயன்றி, கட்சியின் கட்டுக்கோப்புக் குலைவதைத் தெரிந்தும் கவலைப்பட்டாரில்லை.

ஆயினும் நீதிக்கட்சியை ஒரு பலம்வாய்ந்த கட்சியாகத் திருத்தியமைப்பதற்கு விசுவநாதம் பெருமுயற்சி செய்தார். ஆனால் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை. காரணம் கட்சித் தலைவர் அவருடைய கோரிக்கையை ஏற்று நடத்தத் தடையாக இருந்ததேயாம்.

"நான் இதுபோது சிறையில் இருக்கிறேன். சிறையிலிருந்து வெளிவரும் வரையில் கட்சி சம்பந்தமான என்னுடைய வேலைகளை எனது நண்பர்களான திரு. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகிய இருவரும் பார்த்து வருவார்கள்" என்று முன்பு விசுவநாதம் போன்றோரிடம் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த அதே தலைவர், தாம் சிறையிலிருந்தபோது கிளை அமைப்பு, கட்சி நிர்வாகம், பணவசூல் வேலை, மறியல்முறை, கணக்கு,

வேலை, பத்திரிகை ஆசிரியர் வேலை முதலிய பல பொறுப்பு களையும் ஏற்றுத் திறமையாக நிர்வகித்த திரு. கி. ஆ. பெ. விசுவநாதத்தின் கட்சி நடைமுறை வேலைத் திட்டங்களுக்கு ஆதரவு கொடுக்க முன்வந்தாரில்லை. ஆகவே தம்மை நன்கு அறிந்த தலைவரே, கட்சி வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருப்பதைக் கண்டு விசுவநாதம் மனச்சோர் வுற்றுத் தமது பொதுச் செயலாளர் பதவியைவிட்டு விலகி ஞர். இவரது விலகல் கடிதத்தை நீண்ட நாள்வரை தலைவர் வெளியில் தெரிவிக்கவில்லை. அதனால் விசுவநாதம் தாம் அப்பதவியிலிருந்து விலகியதற்கு காரணங்காட்டாத ஓர் அறிக்கையை மட்டும் பொதுமக்களுக்காக வெளியிட்டு விட்டு, ஒரு சாதாரண உறுப்பினராக என்றும்போல் கட்சிப் பணியாற்றி வந்தார்.

இதற்கிடையில் 1940-ல் திருவாரூரில் நடந்த நீதிக் கட்சியின் 15-வது மாநாட்டில் மீண்டும் அவரையே பொதுச் செயலாளராக அம்மாநாட்டினர் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தனர். மக்கள் விருப்பத்திற்கிணங்கி மறு படியும் பொதுச் செயலாளர் பதவியை ஏற்ருர் விசுவ நாதம். தமது முன்னுள் திட்டத்தையே கட்சி நலனுக் காக அமுலுக்குக் கொண்டுவந்து, ஆங்காங்கே கிளைக் கழகங்களை நிறுவி உறுப்பினர்களைச் சேர்க்க விரும்பினுர். இப்பொழுதும் தலைவரிடமிருந்து ஒத்துழைப்புக்குப் பதிலாகத் தடை ஏற்பட்டதால், தாம் விலக வேண்டியதற் குரிய காரணங்களை விளக்கமாக எழுதி, ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டு பொதுச் செயலாளர் பதவியி லிருந்தும் விலகிக் கொண்டார்.

அவரது விலகல் நீதிக்கட்சி வரலாற்றிலே முக்கிய இடம் பெறத்தக்க ஒன்ருகும், அவரது அறிக்கையைப் படிப்பவர்களுக்கு நீதிக்கட்சியின் சரிவு நிலைக்குரிய கார ணங்கள் நன்கு விளங்காமல் போகா. அவர் பொதுச்

செயலாளர் பதவியிலிருந்து விலகிக்கொண்டும், சாதாரண உறுப்பினராக இருந்து தம்மால் இயன்ற கடனை ஆற்றி வந்திருக்கிருர். நீதிக்கட்சியை விட்டு வேறு எக்கட்சியிலும் அவர் சேரவில்லை. கட்சி மாறுதல் என்பது அவரிடம் காணமுடியாத ஒன்று.

## 'ஜஸ்டிஸ்' இளைஞர் சங்கம்

இதற்குப் பின்பு அவர் 1942 மார்ச்சு 15-ந்தேதி சென்னையில் நடைபெற்ற ஜஸ்டிஸ் இளைஞர் மாநாட்டில் தலைமை வகித்தார். அம் மாநாட்டிலே, சென்னை மாகாண ஜஸ்டிஸ் இளைஞர் சங்கத்துக்குத் தலைவராக ஒருமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த ஜஸ்டிஸ் இளைஞர் சங்கத்தோற்றமும் வரலாறும் நீதிக் கட்சியின் அன்றைய நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுவதால், அது குறித்துச் சிறிது அறிவோம்.

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் காங்கிரசிலிருந்து விலகி, நீதிக் கட்சித் தலைவரான பிறகு, கட்சியின் ஆக்க வேலைகள் சரியான முறையில் நடைபெறவில்லை என்ற குறை ஏற்பட்டது. மேலும் கட்சி அமைப்புச் சீர்குலைந்துபோய் கட்சிக்குள்ளே மிகுந்த அதிருப்தியை உண்டாக்கி வந்தது. விசுவநாதம் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதும் இதன் பயனுகக் கட்சியின் நடைமுறை வேலைகள் ஒழுங்காய் நடைபெறவில்லை.

நீதிக் கட்சியின் சொந்த பத்திரிகையாக இருந்த "விடுதலை". ஈ. வே. ரா. நிர்வாகத்தின் கீழ் சென்றது. அவருக்கு உதவியாக இருந்த தோழர்கள் அ. பொன்னம்பலனும், சி.என். அண்ணுதுரையுங்கூட, தலைவரின் தவருன போக்கினுல் தமது பதவிகளை விட்டுவிலக நேரிட்டது. மேலும், திருவாரூர் மாகாண மாநாட்டிற்குப் பிறகு,

வேறிடத்தில் மாகாண மாநாடு கூட்ட முயற்சி செய்யப் படவே இல்லை. நிர்வாகக் குழு கூட்டங்களும் முறைப்படி நடைபெறவில்லை. கட்சித் தலைவர்களின் இடையறுத நெருக்குக் காரணமாக மசூலிப்பட்டினத்தில் பெயரளவில் ஒரு நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற்றது. அங்குச் சில இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றியதைத் தவிர, வேறு உருப்படியான திட்டங்கள் தீட்டப்படவில்லை. ஆகவே நீதிக்கட்சி அன்பர்கள் அதிருப்தியும் மனக்கொதிப்பும் அடைந்ததில் ஆச்சரியமில்லை, யல்லவா? சென்னையில் நடைபெற்று வந்த 'சண்டே அப்சர்வர்' பத்திரிகையில் இது குறித்துக் கண்டனக் குறிப்பு ஒன்று அப்பொழுது வெளியிடப்பட்டது. பின்னர் சென்னையில் ஜஸ்டிஸ் இளைஞர் சங்கச் சார்பில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் மாகாண மாநாடு கூட்டவும், கட்சி வேலைகளை ஒழுங்காக நடத்தவும் கட்சித் தலைவர் தேவையான ஏற் பாடுகள் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறை வேற்றி, நீதிக் கட்சித் தலைவர் பார்வைக்கு அனுப்பப் பட்டது.

இதே சமயத்தில் 'விடுதலை'யிலிருந்து விலகிய திரு. பொன்னம்பலனாரும், தாம் விலகியதற்குரிய கார ணங்களை ஆராய, நிர்வாகக் குழு கூட்டம் கூடவேண்டு மென்று ஓர் விண்ணப்பம் செய்திருந்தார். இவைகளுக்குப் பதில் தரும் முறையில் 1942 ஜனவரி 24-ந்தேதி மதுரையில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டப் போவதாய் நீதிக் கட்சித் தலைவர் 'விடுதலை'யில் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அக் கூட்டத்திற்குப் பிறகாவது கட்சி வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமென்று, கட்சி அன்பர்களும் தென்னாட்டுப் பழங்குடி மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அவர்கள் எதிர் நோக்கியது எதுவும் நடைபெற

வில்லை. மதுரை நிர்வாகக் குழு கூட்டத்தில், ஒரு செயற் குழு அமைக்கப்பட்டதைத் தவிர, வேறு எவ்வித மாற்றமோ, திட்டமோ செய்யப்படவில்லை.

“விடுதலை” பத்திரிகைக்கும் நீதிக் கட்சிக்கும் எத் தகைய சம்பந்தமுமில்லை யென்றும் அதன் உரிமையும், பொறுப்பும் தம்மையே சேர்ந்ததென்றும், இந்தி எதிர்ப்புக் காலத்தில் வசூலான பணமுடிப்புத் தொகைக்குக் கணக்கு கேட்க நீதிக் கட்சி நிர்வாகக் குழுவுக்கோ இதரர்க்கோ அதிகாரமில்லை யென்றும், கட்சித் தலைவர் மதுரைக் கூட்டத்தில் ஒளிவு மறைவின்றிக் கூறிவிடவே, கட்சியி லுள்ளவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். கட்சிக் குள் மனக்கொதிப்பு அதிகரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாகக் கட்சிக்குள்ளே ஓர் இடது சாரிக் கட்சி, கட்சி நன்மையின் பொருட்டு ஏற்பட வேண்டியது இன்றியமை யாததென ‘சண்டே அப்சர்வர்’ தலையங்கம் எழுதியது. அதை ஆதரித்துத் ‘தமிழ் உலகம்’ எனும் பத்திரிகையில் ஒரு துணைத் தலையங்கம் வெளியாயிற்று.

இம் முயற்சிகளின் விளைவாகத்தான் 1942 ஜனவரி 15-ந்தேதி சென்னையில் விசுவநாதம் தலைமையில் ஓர் ஜஸ்டிஸ் இளைஞர் மாநாடு கூட்டப்பட்டது. இதற்கு அன்று வரவேற்புக் குழு தலைவராக இருந்தவர் திரு. சி. என். அண்ணாதுரையாவர். ஜஸ்டிஸ் இளைஞர் சங்கத்தின் சுருக்க வரலாறு இதுவேயாகும்.

இந்த இளைஞர் மாநாட்டுத் தீர்மானங்களினாலும் பத்திரிகைகளில் வெளிவந்த கருத்துரையினாலும் எவ்விதப் பயனும் உண்டாகவில்லை.

ஆகவே, சென்னை ஜஸ்டிஸ் இளைஞர் சங்கத்தினர், சென்னை மேல் சபை உறுப்பினராக இருந்த இராவ் பகதூர் எம். ராமன் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டி,

நீதிக் கட்சித் தலைவர் ஈ. வே. ரா. மாற வேண்டுமென்றும் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் கட்சித் தலைவர் பதவியை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானம் செய்தனர்.

சில நாட்களுக்குள், நீதிக் கட்சி யன்பர்கள் சிலர் சேர்ந்து, சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரிடம் தூது சென்று, நீதிக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் போவதாய் "திராவிட நாடு" பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று.

இன்னும் சிலர் கட்சித் தலைமைப் பதவிக்குத் தம்மை தயார் செய்து கொண்டும் இருந்தனர். இத்தகைய நிலையைப்பற்றி, சிறந்த ஆங்கில எழுத்தாளரான நில்கன் பெருமான் 'ஃபிரி இந்தியா' என்னும் பத்திரிகையில் (5-3-1944) இன்றைய நீதிக் கட்சிக்கு உள்ளே (Inside the Justice Party to day") என்ற தலைப்புள்ள ஒரு கட்டுரையில் அலசி எழுதியிருக்கிறார். அதில், அன்று கட்சித் தலைமைப் பதவிக்கு தகுதியுள்ளவர்களில் பொப்லி ராஜா, பெரியார் ராமசாமி, ஆர். கே. சண்முகம் செட்டியார், திவான்பகதூர் ராமச்சந்திர ரெட்டி, குமார ராஜா (இப்போது ராஜா) முத்தைய செட்டியார், அண்ணாதுரை, கி. ஆ. பெ. விசுவநாதம், பி. பாலசுப்பிரமணியம் முதலியோரின் பெயரைக் குறியிட்டு, அவர்களது குண நலன்களையும் தகுதி திறமையையும் எடுத்தியம்பியுள்ளார். பெரியாருக்கு அடுத்தபடியாக நீதிக் கட்சியின் தலைமைப் பதவியை வகிக்கக்கூடிய இளந் தலைவர்களில், விசுவநாதமும் அண்ணாதுரையும் மிகவும் பொருத்தமானவர்கள் என்பதைக் குறிப்பாகத் தெரிவித்துள்ளார். அன்று விசுவநாதம், நில்கன் பெருமானுக்கு எப்படித் தோன்றினார் என்பதை மட்டும் இங்குத் தந்துவிட்டு மேலே செல்வோம்:

"...திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதத்தின் பெயரைக் குறிக்காமல் விட்டுவிடுவேனாயின், எனது கடமையி லிருந்து தவறியவனாவேன். மனங்கவரும் தோற்ற முடைய இவர், தமிழகத்திலுள்ள பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்குகின் றார். இவர் தமது பேச்சு வன்மையால் செல்வாக்குப் பெற்றவராவர். தனிப்பட்ட வாழ்வில் இவர் ஒரு புகையிலை வியாபாரியாக இருந்துங்கூட, நாட்டுப் பற்றின் காரணமாக பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கி றார். இவரது பெருகிவரும் செல்வாக்கைக் கண்டு அஞ்சிய நாய்க்கர், இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குப் பிறகு இவரைத் தனியாகத் துண்டித்துவிட்டார். மனிதர் என்ற அளவில் நாய்க்கரை இவர் நேசிக்கின் றார்; ஆனால் அவர் ஒரு சர்வாதிகாரியாக இருப்பதைக் கண்டு வெறுக்கின்றார். இவருக்கும் தலைமைப் பதவி யில் நாட்டமில்லை."

நீதிக் கட்சிக்கு வெளியிலிருந்த பார்வையாளரான நில் கன் பெருமானுக்கு அன்பர் விசுவநாதம் எந்த விதமாகத் தென்பட்டார் என்பதை அறியும்போது, பின்னவரின் அக் காலச் செல்வாக்கும், நீதிக் கட்சித் தலைமைப்பதவிக்கு உரியவராக இருந்தும், அவருக்கு அதில் நாட்டமில்லா திருந்ததும் நமக்கு நன்கு விளங்குகின்றதல்லவா?

இதற்குள், தலைமை மாற்றத்தைக் கோரிய அன்பர் களின் கருத்துக் கிணங்கி,நீதிக் கட்சித் தலைமைப்பதவியை ஏற்க திரு. சண்முகம் செட்டியார் என்ன காரணத்தினா லோ மறுத்துவிட்டார். நீதிக் கட்சியில் மாற்றம் விரும்பி களுக்கும்,மாற்றம்விரும்பாதவர்களுக்கும் ஏற்பட்ட இந்தச் சிக்கலைத் தீர்க்குமுறையில் சேலத்தில் நீதிக் கட்சி மாநாடு கூட்டப்பட்டது! அங்கு இருதரப்பினரும் சென்றிருந்த னர். அம் மாநாட்டிற்குப் பெரியார், ஈ. வே. ராமசாமியே

4

தலைமை வகித்தார். அதைத் திறந்து வைத்தவர் திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாதம். இதுவரை தென்னிந்திய நல உரிமைக் கழகம், 'நீதிக்கட்சி' என்ற பெயரில் இயங்கி வந்தது. சேலத்தில் இது பெரும்பான்மையோர் விருப்பத் திற்கிணங்கி "திராவிடர் கழகம்" எனப் பெயர் மாற்றப் பட்டது. மேலும் அரசாங்கம் தந்த பட்டம் பதவிகளையும், ஜில்லா போர்டு, தாலுகா போர்டு பதவிகளையும் விட்டுவிட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறை வேறியது. விசுவநாதம் பேசுகையில் தென்னிந்திய நல உரிமைக் கழகத்தை, "தமிழ்நாடு நீதிக்கட்சி" என்ற பெயரில் மாற்றி அமைத்து ஆதரவு திரட்ட வேண்டு மென்ற தமது கருத்தை அம் மாநாட்டில் தெரிவித்து விட்டே, அதைத் திறந்து வைத்தார்.

இதன் பிறகு சிலநாள் கழித்து மேற்சொன்ன 'சேலம் மாநாட்டு முடிவுகள் செல்லாது' என்று, சர்.பி.டி. ராஜன் தலைமையில், 'சன் தியேட்ட'ரில் தனியாகக்கூடிய 'ஜஸ் டிஸ்' கட்சிக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. திராவிடக் கழகம் என்பது வேறு அமைப்பு என்றும் தாங்களே உண் மையான நீதிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் கள் கூறினார்கள். இது குறித்து வாதப்பிரதி வாதங்கள் நாட்டில் எழுந்தன. பிறகு திராவிடர் கழகத்திற்குத் தமிழ் நாட்டில் மாவட்டந்தோறும் கிளைகள் ஏற்பட்டன. ஆனால் பின்சொன்ன நீதிக் கட்சியினர் வேறு எவ்வித அமைப்பு முறை காணாமல், திட்டம் தீட்டாமல், மக்கள் முன் தங்கள் கருத்தை விளக்கி ஆதரவு தேடாமல் வாளா யிருந்து விட்டார்கள். எனவே திராவிடர் கழகமே தொடர்ந்து இயங்கி வளர்ந்தது.

சில ஆண்டுகளுக்குள் தலைவர் ஈ.வே. ராவின் பொருந் தாத் திருமணங்காரணமாகத் திராவிடர் கழகத்தில் பிளவு ஏற்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் என்றதோர்

அமைப்பு காணப்பட்டது. இதற்குள் பொதுத் தேர்தல் வந்தது. திராவிடர் கழகமும், தி. மு. கழகமும் தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை. நீதிக் கட்சியின் சார்பில் மட்டும் ஒரு சிலர் நிறுத்தி வைக்கப்பட்டனர். ஆனால், அதன் தலைவரான திரு. பி. டி. ராஜன் ஒருவரே தேர்தலில் வெற்றி பெற்றார்; மற்றவர் தோல்வி யடைந்தனர்.

"தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற பழைய முழக்கத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர் திரு. விசுவநாதம். ஆயினும் திராவிட இனம் என்பதிலோ, 'திராவிட நாடு' பெறுவது என்பதிலோ கருத்து வேற்றுமை கொண்டவரல்லர். ஆனால், 'திட்டமிட்டு மலையாளம் கன்னடம் தெலுங்கு முதலிய இடங்களில் பிரசாரஞ்செய்து, திராவிட நாடுகளின் கூட்டாட்சிக்கு ஆதரவு தேடுவதுதான் முறை; தமிழ் நாட்டில் மட்டும் திராவிட நாடு பேசுவது சரியல்ல' என்று கூறி திராவிட இயக்கத்தில் அவர் பங்கு பெறவில்லை.

## 9. சீர்திருத்தக்காரர்

விசுவநாதம் எப்படிப்பட்ட குடும்பத்தில் தோன்றினர் என்பதைத் தெரிந்து கொண்டால்தான், அவர் எப்படி சீர் திருத்தக்காரராக மாறினர் என்பது புரியும். விசுவநாதத்தின் குடும்பம் பழுத்த சைவ மரபைச் சேர்ந்ததாகும். அவரது முன்னோர்களில் ஒருவரான முத்துப்பிரமநாத பிள்ளை மணமுடியா முன்பே துறவு பூண்டவர். இவர் இவ்வுலக வாழ்வை நீத்த பிறகு, இவரது உடலம் அணைக்கட்டிற்குக் கிழக்கே 5 மைல் தொலைவில் உள்ள கச்சமங்கலம் கிராமத்தில் 1764-ல் அடக்கம் செய்யப் பெற்றது.

இவரையே குலதெய்வமாக இக் குடும்பம் வழிபட்டு வருகிறது. மேலும் இக்குடும்பத்தின் முத்துக்கருப்பப் பிள்ளை அவர்களின் மனைவியார் காத்தாயி அம்மாள், இக் குடும்பத்தினரில் கடைசியாக 1792-ல் உடன்கட்டை ஏறி இக் குளித்தவர். இந்த அம்மையையே குடும்பத் தெய்வமாக இன்றும் கொண்டாடி வருகின்றனர்.

இப்படிப்பட்ட சைவப் பற்றும், பழமைக் கருத்துக்களில் பெரும் நம்பிக்கையும் கொண்ட பெரும் குடும்பத்தில் தான், விசுவநாதம் பிறந்து வளர்ந்து பெரியவராகியுள்ளார். என்றாலும், இளமைக் காலம் முதற்கொண்டே இவர் சாதி வேற்றுமையை ஒப்புவதில்லை. மனிதர்க்குள் பார்ப்பான் என்றும் பறையன் என்றும் பேதம் பாராட்டுவது இவருக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. இவரது கல்வி கேள்விகளால் "சாதி" என்ற சொல்லே தமிழில் கிடையாது என்பதை அறிந்தார். தமிழ் நாட்டில் 18 வகை குலங்கள் தொழில் அடிப்படையில் இருந்தனவே ஒழிய அவை சாதியை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவல்ல என்று தெளிவாக உணர்ந்தார். உணரவே, சாதிக்கொடுமையால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளையும் கொடுமைகளையும் போக்க எண்ணினார். இதைச் சைவ சங்கங்கள் மூலம் எடுத்துக்கூறி, மக்களின் மனதை மாற்ற, தொண்டு புரிந்து வந்தார்.

இதே நேரத்தில் சைவம், வைணவம் போன்ற நெறிகளை உள்ளடக்கிய இந்து மதத்திலிருந்த சீர்கேடுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் தங்கள் மதங்களை வளர்க்க முயற்சித்த பிற மதக்காரர்களின் தொண்டுள்ளத்தையும், உள்ளார்ந்த எண்ணத்தையும் தெரிந்துகொண்ட விசுவநாதம், தாமும் அவர்களைப் போல் சைவத் திருத்தொண்டு செய்ய முற்பட்டார். அக் காலத்தில் சைவக்கோலம் பூண்டு, விசுவநாதம் ஆற்றிய

இடையறாத பணிகளைக்கண்ட திரு. வி. க. பெரியார் தமது வாழ்க்கைக் குறிப்பில் மனமாரப் பாராட்டியிருக்கிறார்.

மதத் துறையிலிருந்து கொண்டே, மதச் சீர்திருத்தம் செய்யலாமென்று கருதியிருந்த விசுவநாதத்தை, தென்னிந்தியாவில் எழுந்த தன்மான இயக்கம் ஈர்த்துவிட்டது. அதன் கொள்கைகள் அவருக்கு உடன்பாடாயின. எனவே அவர் சுயமரியாதைப் பிரசாரத்தில் வெகு தீவிரமாக ஈடுபட்டார்.

இந் நாட்டில் மக்கள் மனதில் வெகு ஆழமாகப் பதிந்துள்ள சாதித் திமிரின் ஆணிவேரை வெந்நீர் ஊற்றி அழிக்க அறைகூவல் விதித்தார்.

"ஜாதி முறையானது, ஜாதிக்கு ஒரு பட்டம்; ஜாதிக்கு ஒரு அடையாளம்; ஜாதிக்கு ஒரு தொழில்; ஜாதிக்கு ஒரு வழக்கம்; ஜாதிக்கு ஒரு நீதி; ஜாதிக்கு ஒரு தெரு; ஜாதிக்கு ஒரு கடமை; ஜாதிக்கு ஒரு உரிமை; ஜாதிக்கு ஒரு உணவு என்றுகூட வகுத்துப் பிரித்துவிட்டது. இதனால் மக்கள் உள்ளத்திலே தோன்றியிருந்த அன்பு உணர்ச்சி அழிந்தது; ஒற்றுமை யுணர்ச்சி குற்றுயிராய்க் கிடந்து மடிந்து போயிற்று. இந்நாட்டில் நடைபெறும் கலகங்களுக்கும் குழப்பங்களுக்கும் ஜாதி முறையே பெரிதும் காரணமாக இருந்து வருகிறது. முடிவாகக் கூறவேண்டுமானால், சமூகம் என்னும் நிலத்தில் சாதி என்னும் விதையூன்றி, வெறுப்பு நீர்பாய்ச்சி, வேற்றுமைச் செடி வளர்த்து, பொறாமை பூத்து, கலகம் காய்த்து, அடிதடி பழுக்கிறது' என்றே கூற வேண்டும்.

ஜாதி வேற்றுமையானது நாட்டு வேற்றுமையைவிட, மத வேற்றுமையைவிட, மொழி வேற்றுமையைவிட, நிற வேற்றுமையைவிட மிகப் பெரிதாக மதிக்கப் பெற்று வருகிறது."

என்று கி. ஆ. பெ. விசுவநாதம் தமது 'ஜாதிமுறை' என்னும் வானொலிப் பேச்சில் அழுத்தந் திருத்தமாகக் கூறி சாதிமுறையைக் கண்டித்துள்ளார்.

மேலும், "தீண்டாமை, கொள்ளாமை, கொடுக்காமை, உண்ணாமை, தின்னாமை, எண்ணாமை, இரங்காமை, பொறாமை, முதலிய எத்தனையோ ஆமைகள் ஜாதி முறைச் சேற்றில் வாழ்கின்றன. இந்த ஆமைகள் யாவும் உணராமைக் கிணற்றிலுள்ள அறியாமையின் குட்டிகள் ஆகும்" என்று பல ஆமைகளை அவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டு, சாதியால் ஏற்படும் வேதனைகளைப் போக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

இச் சாதி முறையை ஒழிக்க ஐந்து வழிகள் கூறுகின்றார். அவை முறையே (1) ஜாதி முறையை வெறுக்கக் கற்றுக்கொள்வது; (2) பெயர்களுக்குப் பின்னால் உள்ள பட்டப் பெயர்களை விடுவது, (3) எல்லோரிடமும் அன்பாய்ப்பழகுவது, (4) சுத்தமாக இருக்கும் எவரோடும் எவ்விடத்தும் மகிழ்ச்சியோடு உண்பது, (5) கலப்பு மணம் செய்வது.

அவர், மேற்சொன்ன 5 வழிகளின்படி சாதியை, அடியோடு வெறுத்து வருகிறார். தம் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரைக் குறிப்பிடுவதில்லை. எவரிடத்தும் அன்பாய்ப் பழகும் இயல்புடையவராக விளங்குகிறார். சுத்தமாக இருக்கும் எவ்விடத்திலும் எவருடனும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டும் அந்தப்படியே பிரசாரஞ் செய்தும் வருகின்றார். நாடெங்கும் பல கலப்பு மணங்களைச் செய்து வைத்துள்ளார்; செய்தும் வருகின்றார். அவர் புலால் உண்ணும் வழக்கமில்லாதவர். அப்படியிருந்தும் புலால் உண்பவர்கள் அனைவரும் நரகத்திற்குப் போவார்கள் என்று அச்சுறுத்துவதில்லை,

அவரவர் விருப்பப்படியும், வசதிப்படியும் உணவு உட்கொள்ள வேண்டும் என்ற மனப்போக்குள்ளவர். ஆயினும் புலால் உண்பவர் வீட்டிலும் மரக்கறி உணவு உட்கொள்ள அவர் என்றும் தயங்கியதில்லை.

அவருக்குச் சமூகத்தில் புகுந்துள்ள குருட்டுப் பழக்க வழக்கங்களும். மூடத்தனங்களும் பிடிக்கா. அது மட்டுமல்ல. மதமாறுவதும் மதமாற்றப்படுவதும் அவருக்கு ஒத்த கொள்கையன்று. அவரவர்க்குப் பிடித்தமான சமய வாழ்வில், மற்றவர் குறுக்கே நிற்பது அறமல்ல என்பது அவரது தீர்ப்பு. ஆகவே அவர் மதப் பூசலில் அகப்பட்டுக் கொள்வதில்லை. ஆனால் அதே சமயத்தில் மதங்கள் மனித சமுதாயத்திற்குத் தீங்கு செய்வதாக இருந்தால், அதை அகற்றவும், அவர் பின் வாங்குவதில்லை.

சாதியற்ற—ஏற்றத்தாழ்வற்ற—சமயபேதமற்ற—சமுதாயம் இந்நாட்டில் ஏற்படத் தன்மான இயக்கத்தில் கலந்துகொண்டு மிகுந்த தொண்டாற்றியுள்ளார்.

அவர் ஆயிரக்கணக்கான தமிழர் திருமணங்களை அறிவுக்குகந்த முறையில் முன்னின்று நடத்தியிருக்கிறார். மற்றும் சுயமரியாதை பிரசாரத்திற்காக வேண்டி சொ. முருகப்பாவால் திருச்சியில் தொடங்கப்பட்ட ‘சண்டமாருத’ப் பத்திரிகைக்குப் பலவகையில் உதவி புரிந்து இருக்கிறார். ‘சுயமரியாதைப் பஞ்சாங்கம்’ என்ற பெயரில் ஒரு பஞ்சாகத்தை அச்சடித்துத் தமிழ் நாடெங்கும் பரப்பியிருக்கிறார்.

தன்மான இயக்கத்தின் தொடக்க காலமுதல் தொண்டாற்றிய முன்னணித் தூண்களில் விசுவநாதமும் ஒருவராவர். அவரது நகைச்சுவை ததும்பும் நாவன்மையும், நேர்மையும், சொல்லியபடிசெயலாற்றும் குணமும் பல்லோரைத் தன்மான இயக்கத்தில் பற்றுக்கொள்ளச் செய்து

அவர்களை அதில் மிகவும் ஈடுபடத் தூண்டியுள்ளனவென்ருல், அது சிறிதும் மிகையாகாது.

அன்பர் விசுவநாதம் எதையும் காரணகாரியத் தொடர்பு படுத்திப் பார்த்து உண்மையிருந்தால் ஏற்றுக் கொள்வார். இல்லையெனில் ஒத்துக்கொள்ள மாட்டார். இதை அவரது ஒரு கூற்றிலிருந்தே உய்த்துணர்ந்து கொள்ளலாம். ஒரு சமயம் அவர் சொன்ஞர் :

" கடவுளாயிருந்தாலும் கருதிப்பார், காந்தியாயிருந்தாலும் அலசிப்பார் என்று கூறுவதோடு நின்றுவிடாதே. பெரியாராயிருந்தாலும் சிந்தித்துப்பார் என்றும் கூறு. இன்றேல் பகுத்தறிவைவிட்டு நாம் விலகிவிடுவோம்."

கடவுள், மதம், புராணம்—இவற்றைப் பற்றிக்கூறும் கருத்துக்களை இவர் இங்ஙனமே சிந்தித்து முடிவு காணுகின்ருர்.

இன்னும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு எவை எவை இடஞ்சலாய் இருக்கின்றனவோ அவை எல்லாம் நீக்கப்படவேண்டும் என்று கருதி, அதற்காகப் பாடுபட்டு வருகிருர்.

பொதுவாகப் பலவகையில் இவர் சீர்திருத்தத்தை விரும்பி வரவேற்பவராகவே விளங்கினர். ஆனல் சில வகையில் இவர் சீர்திருத்தத்தை ஏற்பதில்லை. சான்ருக தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பது இவருக்குப் பிடிப்பதில்லை. இப்பொழுதுள்ள தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்தால், தமிழ் எழுத்துக்களின் அழகிய வடிவங்கள் மாறி விடுமென்றும், அவை விகாரமாகப் போய்விடும் என்றும் இவர் கருதியதால், சென்னை அரசாங்கம் திரு. அவிஞசிலிங்கம் செட்டியார் தலைமையில் தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்யமுனைந்தபோது, மிகவும் வன்மையாகக் கண்டனக்குரல் எழுப்பிஞர். இவர்

போன்றோர் பலரின் எதிர்ப்பை உணர்ந்தே அரசாங்கம் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய அஞ்சியது. அதைக் கை நழுவ விட்டது என்றுங் கூறலாம்.

பெண் கல்வியைப்பற்றியும் இவர் மாறுபட்ட கருத்துடையவராகவே இருக்கின்றார். இது குறித்து அவரது கூற்றை அறிவோம்: "பெண்களுக்குக் கல்லூரிப் படிப்பு தேவையில்லை என்பது முடிந்த முடிபு. சீர்திருத்தக்கொள்கையுடைய நான் இதைத் துணிவாகக் கூறுவதைக் கண்டு வியக்கலாம். எனினும் இது எனது துணிந்த முடிபு, இதற்குக் காரணங்கள் :—

(1) நூற்றுக்கு எண்பத்தைந்து பேருக்கு கல்லூரிப் படிப்பினால் ஒரு பயனும் ஏற்படுவதில்லை! (2) கல்லூரியில் படித்த பெண்களுக்குப் பெரும்பாலும் திருமணம் நடைபெறுவதில்லை! (3) திருமணத்திற்கு முயன்றாலும் பெண்ணுக்கு மேற்பட்ட படிப்புடைய மாப்பிள்ளைகள் கிடைப்பதில்லை. (4) கிடைத்தாலும் பணம் வாங்காமல் மணஞ் செய்வதாக இல்லை. (5) அப்படிக் கொடுப்பதாயிருந்தாலும் பெண்களைப் பெற்ற பலருக்குப் பணங் கொடுக்க வழியில்லை. (6) பணம் உள்ள ஒருவன் தம் பெண்ணை படிக்கவைத்து, அறிவாளியாக்கி, ஒரு மணமகனிடம் ஒப்புவிக்கும் பொழுது அவன் அதற்கு திரும்ப நன்றி செலுத்தாமல் மணம் செய்ய பணம் கேட்பது 'ஏன் பெண்ணைப் படிக்கவைத்தாய்?' என்று அபராதம் போடுவதை ஒத்திருக்கிறது. (7) வரதட்சணை என்ற பெயரால் ஒரு குறிப்பிட்ட மக்களிடம் மட்டும் இருந்த இவ்வழக்கம், பெண்களின் கல்லூரிக்கல்வியினால் பிறமக்களிடமும் பரவி வருகிறது. (8) இப்படி வரதட்சணைக் கொடுத்தாலும் கல்லூரியில் படித்த பெண்களை கல்லூரியிற் படித்த மாணவர்கள் மணஞ்செய்ய விரும்புவதில்லை. (9) பெண்களுக்குக் கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு மணப்பருவம்

பெரும்பாலும் தாண்டிவிடுகிறது! (10) கல்லூரியில் படிக்கவைக்கும் பெற்ருேர்களுக்குத் தன் பெண்ணும், அதன் மணமற்ற வாழ்க்கையும் பெருஞ்சுமையாகப் போய் விடுகிறது. (11) 100-க்கு 90 படித்த பெண்களுக்கு நல்ல உடற்கட்டு இருப்பதில்லை. ஒருகால் இந்த படிப்பே அவர்கள் உடல் நலத்தைக் கெடுக்கிறதோ என்றுகூட எனக்குத் தோன்றுவதுண்டு. இப்படி வயதைக் கெடுத்தும், வாழ்க்கையைக் கெடுத்தும், பருவத்தைக் கெடுத்தும்—படித்துப் பெற்ற பட்டம் ஒரு பெண்ணின் வாழ்வுக்குப் பயன் படுவதாயில்லை. (12) இக்காலத்தில் கலைக் கல்லூரியில் படித்த சில பெண்களுக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்த சில பெண்களும் கூட வாழ்க்கை இன்பத்தை அனுபவிக்க முடியாமலே ஆண்களைப்போல தொழில் செய்ய நேரிடுகிறது, அல்லது சுற்றுச் சார்புகளால் ஒழுக்கம் தவறிப்போக இடமும் உண்டாகிவிடுகிறது.''

மேற்கண்ட 12 காரணங்களாலும் பெண்களுக்குக் கல்லூரிப் படிப்புத் தேவையில்லையென்பதும், குடும்ப வாழ்வுக்கு ஏற்ற உயர்நிலைப் பள்ளிப்படிப்பே போதுமானது என்பதும் அவரது துணிவான கருத்து.

இந்நாட்டில் பஞ்சத்தாண்டிகளுக்கும் பரம்பரை ஆண்டிகளுக்கும் குறைவில்லை. ''வறுமையால் இரந்து வாழவேண்டிய நிலையிலுள்ளவர்களுக்கு, அரசாங்கம் விவசாயமுறையிலோ தொழில் முறையிலோ அவர்கள் உழைத்துவாழ வழிவகுத்துக் கொடுக்கவேண்டும்' இன்றேல் பெற்ற சுதந்திரத்தில் பங்கில்லை என்ருகிவிடும். முதல் பிரிவினர்க்கு இதைச் செய்ய முடியாவிட்டால் அரசாங்கம் வெட்கப் படுவதோடு நின்றுவிடக்கூடாது. இரண்டாவது பிரிவினர்க்கேனும் (உறுப்பு இழந்தவர்கள் பெருநோய் கொண்டவர்களுக்கு) ஒருவிடுதியமைத்து அவர்

கள் அனைவரையும் அதில் வாழச் செய்வது, அவர்களுக்கு இலவச உணவளித்து கூடியவரை மருத்துவ உதவியும் செய்து காப்பாற்றியாக வேண்டும். இவ்வாறு செய்வதால் அவர்களுடைய பெருங்கவலையும் பெருங்குறையும் நீங்குவதோடு மக்களிடையே அவர்கள் நடமாடி நாடு முழுதும் பெருநோய்களைப் பரவிடாமல் தடுத்ததாகவும் முடியும்'' என்று பிச்சைக்காரர்களின் அவல நிலையைப் போக்க வழிசொல்லுகிறார் விசுவநாதம்.

இன்னும், உடன் கட்டை ஏறுதலைச் சட்டபூர்வமாகத் தடுத்து நிறுத்த போராடிய ராஜராம்மோகன்ராயின் சீர்திருத்தத் தொண்டை பாராட்டும் முகத்தான் திருச்சியில் ராயின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியதோடு, அப்போது பிறந்த தம் ஆண்குழந்தைக்கு இராஜாராம் என்ற பெயரையும் வைத்தார். ஆபாச நாடகங்கள் ஒழிந்து சமூகத்திற்கு நன்மைபயக்கும் நல்ல நாடகங்கள் வரவேண்டுமென்றும், நாட்டுக்குத் தீமை செய்யாத திரைப்படங்கள் பிடிக்கப்படவேண்டுமென்றும், நடிப்பவர்களிடத்தும் காண்பவர்களிடத்தும் ஒழுக்கத்தை வளர்க்கும் நடனக் கலைவளர வேண்டும் என்றும் அவர் விரும்புகின்றார். வானொலியில் தமிழகத்தின் உயர்வைத் தெரிவிக்கும் பாடல்களும் பேச்சும், நாடகமும் அறிவிப்பும் நடைபெறவேண்டும் என்று விசுவநாதம் மிகவும் பாடுபட்டிருக்கின்றார். ஆக, சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் சீர்திருத்தங்களைத் தட்டாமல் வரவேற்கும் உள்ளம் படைத்தவராக இருக்கின்றார். கல்வியில், கலையில், நாடகத்தில், திரைப்படத்தில், மக்கள் உள்ளத்தில், நல்ல சீர்திருத்தம் ஏற்படவேண்டும் என்று அவர் உள்ளபடியே விரும்புகிறார். அவரது சீர்திருத்தக் கருத்துக்கள் ஆக்க வேலைக்குப் பயன்படுவன. ஒரோவழி, அவை அழிவு வேலைக்குப் பயன்படுவதாக இருந்தாலும், அவையும்

வேண்டாதனவற்றை அடியோடு ஒழித்து, வேண்டிய வற்றுக்கு இடந்தருவதற்காகவே சொல்லப் படுவன வாகும்.

விசுவநாதம் அவர்கள் தம் சொந்த வாழ்க்கையில் நல்ல சீர்திருத்தக்காரராகவே என்றும் இருந்து வரு கிறார். அரசியலில் இப்பொழுது அதிகம் ஈடுபடுவதில்லை யென்றாலும், சீர் திருத்தத்திற்கு எதிராக எதையும் அவர் செய்வதில்லை. அவருடன் மாறுபட்ட கருத்துடையவரும் கட்சியினரும் அவரைப் பாராட்டியே வருகின்றனர்.

இன்றும் திருச்சியில் தம் வீட்டு மாடியில்நாள்தோறும் காக்கைக்குக் குறிப்பிட்ட காலை நேரத்தில் உணவு ஊட்டி வருகின்றார். இதைத் திருகாக்கைகுன்றம் என்று வேடிக்கையாக அழைப்பதுண்டு. திருக்கழுக்குன்றத்தில் மலைமீது நாள்தோறும் இரண்டு கழுகுகள் காசியிலிருந்து உணவு எடுத்துக்கொள்ள வருவதாக வைதீகர்கள் கதை கட்டியிருக்கும் போக்கிற்கு, முற்றுப் புள்ளி வைப்பதற் காகவே, பகுத்தறிவாளர் விசுவநாதம் மேற்சொன்ன பணி யைத் தொடர்ந்து செய்து, பழக்கத்தால் எதுவும் குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ள வரும் என்ற உண்மையை நாடறியப் பரப்பி வருகின்றார்.

அவருடைய சீர்திருத்தக் கொள்கை ஒரு தனிப் போக் கானது. மாற்றாரை நேரடியாகக் குறைகூறாமல், வேடிக் கையாக உண்மையை விளக்கும் போக்குள்ளவர் விசுவ நாதம். உதாரணத்திற்காக ஒன்றைக் கூறி இதை முடிக்க விரும்புகிறேன்.

"மேல் நாட்டில் பெண்கள் ஆகாய விமானிகளாக இருந்து உலகத்தைச் சுற்றிவருகின்றனர். நம் நாட்டுப் பெண்களும் அவர்களுக்குச் சளைத்தவர்களல்ல. எதில்? ஆலமரத்தை அரசமரத்தைச் சுற்றுவதில்" என்று சிரிக்கச்

சொல்லி அறியாமையைப் போக்க முனைகின்றார். இப்படி யெல்லாம் சொல்வதனால்தான், சீர்திருத்தம் பையப்பைய ஆனால் அதே சமயத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

விசுவநாதத்தின் சீர்திருத்த உள்ளத்தை—தொண்டை—இந்நாடு நன்கு அறிந்து, பயன்படுத்திக்கொள்கிறது. இனியும் பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் என்ன தடையிருக்கின்றது?

## 10. தன்மான இயக்க வீரர்

தென்னாட்டில் காங்கிரசை வேரூன்றச் செய்த பெரு மக்களில் தமிழ்ப் பெரியார் திரு.வி. கல்யாணசுந்தரனாரும், பெரியார் ஈ. வே. ராமசாமியும், டாக்டர் வரதராஜலு நாயுடுவும் குறிப்பிடத்தக்கவர். இவர்களுக்குக் காங்கிரசில் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில்தான், சேரமாதேவி குருகுலத்தில் "பார்ப்பனப் பிள்ளைகளுடன் பார்ப்பனரல் லாத பிள்ளைகளை ஒருங்கே வைத்து உணவு பறிமாற முடியா"தென்று காலஞ்சென்ற வ.வே.சு. ஐயர் கூறினார். இதன் காரணமாகக் "குருகுலப் போராட்டம்" தமிழ் நாடெங்கும் காட்டுத் தீபோல் பரவி, உயர்சாதித் திமிருக்குச் சாவு மணி அடித்தது! காங்கிரஸ் திரட்டிய பணத்திலிருந்து உதவுவதாகச் சொன்ன தொகையை, சாதி உயர்வு காட்டியதால் தரமுடியாதென்று இழுத்துப் பிடித்துவிடப்படவே, குருகுலம் வீழ்ந்தது! இதற்குப் பிறகு, நடந்த எத்தனையோ நிகழ்ச்சிகளால் மேற்சொன்ன 'மும்மூர்த்திகளும்' காங்கிரசிலிருந்து விலக நேரிட் டது.

காஞ்சிபுர மாநாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தீர்மானம் தள்ளிவிடப்பட்டதால், ஈ. வே. ரா. வெகுண் டெழுந்து வெளியேறினர். பிறகு அவர் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டார். அதன் கொள்கைக்காக வேண்டி "குடி அரசு" பத்திரிகையைத் தோற்றுவித்து, தமிழ்நாடு முழுவதிலும் ஒரு பரபரப்பை உண்டாக்கினர்.

தென்னட்டினர் (தமிழர்) வீழ்ச்சிக்கும், பார்ப்பனர் உயர்வுக்கும் வர்ணச்சிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து மதமே காரணமென்றும், மதத்தின் பேரால், புராணங்களின் பேரால், பார்ப்பனர்கள் பார்ப்ப னரல்லாத பெருங்குடி மக்களை அடக்கியாண்டு, நசுக்கி வருகிருர்கள் என்றும், திரு. ஈ. வே. ரா. தமது குடியர சில் எழுதி வந்தார்; வெளியிலும் பேசி வந்தார்.

அதைக் கண்ட விசுவநாதம் அக்காலத்தில் நடந்து வந்த 'திராவிடன்' பத்திரிகையில் "குடி அரசின் இடி முழக்கம்" எனத் தலைப்பிட்டு 1925–ல் திரு.ஈ.வே.ராவைப் பாராட்டி ஒரு கட்டுரை எழுதினர்.

பிறகு திரு. ஈ. வே. ரா. காங்கிரசை விட்டு அடியோடு விலகி 'ஜஸ்டிஸ்' கட்சிக்கு வந்து சேர்ந்தார். அப்போது அவரை வரவேற்று 'திராவிட'னில் விசுவநாதம் ஒரு கட்டு ரையும் எழுதியிருக்கிருர். அத்துடன் இன்றி வெளிப் படையாக முன்வந்து டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. வி. கல்யாண சுந்தரனர், திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகிய தலைவர்களை நீதிக் கட்சியில் வந்து சேர்ந்து, பார்ப்பனரல்லாத மக்களுக்காக திரு. ஈ. வே. ராவுடன் இணைந்து தொண்டு செய்யவேண்டுமென்று, அவர்களை நேரில் கண்டு பேசிக் கேட்டுக்கொண்டும் உள் ளார். அக்காலத்தில் திரு. ஈ. வே. ரா. விசுவநாதத்தின் வேண்டுகோளுக்கு இசைந்து வந்ததுபோல் மற்றத் தலை

வர்கள் இணங்கி வரவில்லை. கடவுளையும் மதத்தையும் ஈ. வே. ரா. வெளிப்படையாகத் தாக்கியதினால், மேற் சொன்ன தலைவர்கள் மூவரும் ஒத்துழைக்க இயலாது எனக் கூறிவிட்டனராம்.

ஆனால், விசுவநாதம் மட்டும் ஈ. வே. ராவைத் தலைவராக ஒப்புக்கொண்டு அவர் காட்டிய வழியைப் பின்பற்றித் தன்மான இயக்கத்தை வலுப்படுத்தத் துணை புரிந்து வந்தார்.

1927-ல் நடந்த கோவை மாநாட்டுக்குப் பிறகும் 1928-ல் நடந்த மதுரை மாநாட்டிற்குப் பிறகும், ஒரு பெரும் சுற்றுப் பிரயாணத்தைத் தன்மான இயக்கம் தொடங்கியது.

ராமநாதபுர மாவட்டம் சுக்கில நத்தம் கிராமத்தில் 28-5-1928-ல் திரு. என். எஸ். துரைசாமி ரெட்டியார் குமாரர் கோபால ரெட்டியாருடைய திருமணமே, இவ்வியக்கத்தின் பேரால் முதன்முதல் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணமாகும். இதை திரு. ஈ. வே. ராமசாமி, முன்னின்று நடத்தினார். அவருடன் சென்றவர்கள் விசுவநாதம், ஜெ. எஸ். கண்ணப்பர், என். தண்டபாணிப் பிள்ளை, அழகிரிசாமி ஆகியோராவர். இதற்குப் பின் சுயமரியாதைப் பஞ்சாங்கம் ஒன்றைத் தமது சொந்தச் செலவில் 1923-முதல் விசுவநாதம் அச்சிட்டுப் பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு முழுவதும் அனுப்பி வந்திருக்கிறார். இப்பஞ்சாங்கம் 12 தாள்கள் கொண்டது. சித்திரை முதல் பங்குனிவரை தமிழில் பெரிய எண்களும் ஆங்கிலத்தில் சிறிய எண்களுமாக அச்சடிக்கப்பட்டு, காலியாக உள்ள இடங்களில் தன்மான இயக்கக் கருத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது.

தன்மான இயக்கம் வேரூன்றி வளரவே அதற்காக ஒரு தினசரிப் பத்திரிகை தேவையெனத் தலைவர்களும் தொண்டர்களும் உணர்ந்தனர். அதனால், காரைக்குடி திரு. சொ. முருகப்பா முயற்சியினால், அவரை ஆசிரியராகக் கொண்டு திருச்சியிலிருந்து "சண்ட மாருதம்" தினசரி வெளி வந்தது. அப்பத்திரிகை வெளியீட்டுக்கும் அதன் நிருவாகத்துக்கும் விசுவநாதம் பெரிதும் உதவியாக இருந்தார். ஆயினும், அப்பத்திரிகைக்குச் சில இடையூறுகள் ஏற்பட்டதால், அதை நிறுத்த வேண்டியதாயிற்று.

இதற்குப்பின் திரு. ஈ. வே. ரா, எஸ். ராமநாதனுடன் ஐரோப்பாவுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் இங்கு இல்லாத சமயத்தில் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு மீறி சிலர் நடந்ததினால், திருச்சி விசுவநாதமும் விருதுநகர் வி.வி. ராமசாமியும் சொ. முருகப்பாவும், ஊ.பு.ஆ. சௌந்திரபாண்டியனும் ஓர் அறிக்கை வெளியிட்டு அதனை அடக்க வேண்டியதாயிற்று.

விசுவநாதம் ஈ. வே. ராவுடனும் தனியாகவும் தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, சுயமரியாதைக் கருத்துக்களை மக்கள் மனதில் பதியும்படியாயும் சொற்பொழிவு ஆற்றி வந்தார். அவரது வேடிக்கையான குட்டிக்கதைகள் மூலமும், காரண காரியத் தொடர்பு படுத்தி விளக்கும் விளக்கவுரையாலும், மக்களிடையே நெடுநாளாகப் படிந்துவிட்ட குருட்டு நம்பிக்கைகளும் மூடப்பழக்க வழக்கங்களும் நாளடைவில் மறையலாயின.

தமிழர்கள், தம் கோயிலில் தாய் மொழியில் மந்திரஞ் சொல்லப்படாததும், திருமணம் இழவு முதலிய காலங்களில் புரோகிதரின் புரியாத சொற்களைக் கேட்பதும், அவைகளை இனிமேல் நடைபெறவிடுவது இழுக்கு என்றும் உணரத் தொடங்கினார்கள். இதனால் திருமணங்

களுக்கு வரும் புரோகிதரைத் தள்ளிவிட்டு, தமிழ் அறிஞர்களை வரவழைத்துத் தமிழிலேயே திருமணம் செய்து கொள்ளும் புது வழக்கம் ஏற்படத் தொடங்கியது. மேலும், தொண்டு கிழங்கள் பொருந்தா மணங்கள் செய்து கொள்வது அடாது என்ற உணர்ச்சி பரவியது. கணவனை இழந்த பச்சிளங் குழந்தைகளும், கட்டிளம் பருவத்தினரும், மறுமணஞ் செய்துகொள்ள இடந்தருவதுதான் சாலச்சிறந்தது என்ற எண்ணம் எழுந்தது. சாதிப் பிரிவுகளும், கொடுமைகளும் ஒழியவேண்டும் என்ற நல்லுணர்ச்சி சிற்றூரிலும் பேரூரிலும் பற்றிக் கொள்ளத் தொடங்கியது. இதன் காரணமாக எண்ணற்ற விதவை மணங்களும் கலப்பு மணங்களும் நடைபெறலாயின. பகுத்தறிவு ஒளி தமிழ் நாடெங்கும் வீசத்தொடங்கியதும் சாதிக் கோட்டைகளும், குருட்டு வாதங்களும் சரியத் தொடங்கின. சுயமரியாதைச் சூறுவளியால் பழமை வீழ்ந்தது! வைதீகத்திற்கு வெடி வைக்கப்பட்டது. புராணப் புளுகுகள் வெளிக் கிளம்பின. தன்மானம் தலை தூக்கி நின்றது. சுயமரியாதை முன்னணி வீரர்களில் ஒருவராக விசுவநாதம் விளங்கினர்; இப்பொழுது விளங்குகிறர்; இனியும் விளங்குவார் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## 11. வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்

கிணற்றுத் தவளை ஊர் வளப்பம் அறியாது என்பது பொருள் பொதிந்த பழமொழி. திருச்சி தந்த செல்வம் தம் பெருங்குடும்பத்தைக் கவனிப்பதிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்திருப்பாராயின், அவருக்கு

ஊர் வளப்பமும், நாட்டு நிலைமையும் உலக முன்னேற்றமும் தெரிந்திருக்கமுடியாது.

அவர் வாணிபராக இருந்தும்கூட பொதுத் தொண்டில் எப்பொழுதும் ஈடுபாடுடையவராக இருக்கிருர். நீதிக் கட்சியாலும் தன்மான இயக்கத்திஞலும், தமிழ்ப் பற்றிஞலும் அவர் தமிழகம் எங்கும் பல தடவை சுற்றி, சொற்பொழிவுகள் ஆற்றி, தமிழ் நாட்டையும் மக்களையும் நன்கு அறிந்து கொண்டிருக்கிருர். இத்துடன் நில்லாது அவர் கடல் கடந்து வெளியூர்களுக்கும் சென்று அனுபவம் பெற்றிருக்கிருர்.

அவர் இலங்கை, பர்மா, சயாம், பிஞங்கு, கோலாலம்பூர், சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்குத் தமது வர்த்தகம் சம்பந்தமாகவே சென்ருர். எனினும், ஆங்காங்குள்ள நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பல ஊர்களிலும் பல சங்கங்களிலும் பொதுப் பொருள் பற்றியும் இயக்கம் சம்பந்தமாகவும் சொற்பொழிவுகள் நிகழ்த்திவந்திருக்கிருர்.

விசுவநாதம் இலங்கைக்கு எத்தனையோ முறை சென்றிருக்கிருர். அங்கு முதல் தடவை சென்றபோது இலங்கை அரசாங்கம் தடை உத்தரவு போட்டு அவரை இலங்கையுள் நுழைய அனுமதிக்கவில்லை. அப்பொழுது அவர் நீதிக்கட்சியில் பெரும் அங்கம் வகித்தும், தன்மான இயக்க வீரர்களில் ஒருவராக விளங்கியும் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார். ஆகவே, அவர் இலங்கையுள் நுழைந்தால் ஏதேனும் விபரீதம் ஏற்படலாம் என்று அதைக் கட்டி ஆண்ட வெள்ளை அரசாங்கம் அஞ்சியது போலும்! அதஞல் அவர் கப்பலிலேயே இருக்கும் படியான இக்கட்டு நேரிட்டது. கப்பல் இறுதியாகக் கரைக்குத் திரும்பிவந்தது. அவர் இங்கு இறங்க மறுத்துவிட்டார். கடைசியில் அப்பொழுது சென்னை முதன்

மந்திரியாகவிருந்த டாக்டர் ப. சுப்பராயன் அவர்களது முயற்சியினால், இந்திய அரசாங்கத்தின் தந்தி இலங்கை அரசாங்கத்தாருக்குக் கிடைத்தது. இலங்கைத் தீவில் இறங்கினார், ஏழுநாள் சொற்பொழிவு ஆற்றிவிட்டுத் தாயகம் திரும்பினார். இலங்கை அரசாங்கத்தார் எதிர் பார்த்த 'அசம்பாவிதம்' எதுவும் ஏற்படவில்லை. அக்கா லத்தில் பழைய கோட்டைப் பட்டக்காரரவர்களும், கோவை திரு. வெள்ளியங்கிரி கவுண்டரவர்களும் மற்றும் பல நண்பர்களும் விசுவநாதத்துடன் சென்றிருந்தார்கள். இலங்கை அரசாங்கம் இறக்க மறுத்துப் பிறப்பித்த தடை யுத்தரவை வன்மையாகக் கண்டித்தும், விசுவநாதத்தின் சொற்பொழிவை மிகவும் பாராட்டியும் கொழும்பு 'வீர கேசரி' பத்திரிகை அன்று தலையங்கம் எழுதியது.

வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணங் காரணமாகப் பர்மாவில் அவர் கண்ட அனுபவத்தைக் குறித்து 'பர்மா வும் அரிசியும்' என்ற தலைப்பில் திருச்சி வானொலியில் ஓர் அருமையான பேச்சைப் பேசியிருக்கிறார். அதிலிருந்து பர்மாவின் நில, நீர் வளத்தைப் பற்றியும், அங்கு சாகுபடி யாகும் நெல்லைபற்றியும், அது ஏற்றுமதி செய்யும் அரிசி யைப் பற்றியும் மிக விரிவாகத் தெரிந்துகொள்ள முடி கிறது.

மலேயாவில் சாதிக்கு முதலிடம் தராமல், செய்யும் தொழிலுக்கு மதிப்பு தருவதைப் பற்றியும், பெண்களுக் குத் தனிச் சலுகை காட்டுவதைப் பெண்களே விரும்பு வதில்லை என்பதையும், நல்ல சரக்குக்கு உயர்ந்த விலை வைக்கப்பட்டும் அதிகமாக விற்பனை யாவதையும், அவரிடம் உரையாடும் போதும், சில சொற்பொழிவுகளில் இருந்தும் நான் அறிய முடிந்தது.

வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தாலும் நல்லோர் கூட்டுறவாலும் உலக அறிவு பெற்று தொழில் நுட்

யமும் பெற்ற விசுவநாதம் அவர்கள், குறித்த காலத்தில் குறித்த வேலையை உடனே செய்ய வேண்டுமென்ற திட்டத்தைச் சிறிதும் பிசகாமல் அன்றாடம் செய்து வருகின்றார். அவரிடம் உடனுக்குடன் பதில் எழுதும் முறையையும், சொன்ன வாக்கை மீறாமல் அதைக் காப்பாற்ற முனையும் குணத்தையும், நாம் எவ்வளவு போற்றினாலும் தகும். இந்தியர்கள் காலந்தவறி நடப்பவர்கள் என்ற அவலச்சொல், விசுவநாதம் போன்ற ஒரு சிலரால் பொய்ப்பிக்கப்பட்டு வருகிறது. தமிழர்களிலும் காலத்தின் அருமையை உணர்ந்தவர் திருச்சியில் இருக்கிறார் என்று மலைமீது நின்றும் கூறலாம்!

## 12. தமிழர் கழகம் காணுதல்

திரு. விசுவநாதம் அவர்கள் தாம் மேற்கொண்ட பணிகளில் பலவற்றில் வெற்றி அடைந்திருக்கிறார். தொழிலில் தந்தையைக் காட்டிலும் ஒருபடி முன்னேறி, பல நாடுகள் புகழும் பெருஞ் சிறப்புப் பெற்றிருக்கிறார். தமிழ்ப் பற்றில் தணியாக் காதல்கொண்டு தமிழ் அறிஞராக உயர்ந்திருக்கிறார். நீதிக் கட்சியில் சேர்ந்து அதன் பொதுச் செயலாளராக இருமுறை தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அளவிற்குப் பெருங்கடனாற்றி யிருக்கிறார். நாவன்மையிலோ தமிழகத்தில் மிகச் சிறந்த பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். தன்மான இயக்க, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தி, வெற்றிகரமாக ஆக்கிய பெரும் வீரராகக் காட்சியளித்திருக்கிறார். ஆம் தொழிலில், நாவன்மையில், நாணயத்தில், பகுத்தறிவு

இயக்கத்தில், நீதிக்கட்சியில் திரு. விசுவநாதம் அவர்கள் முழுவெற்றி யடைந்திருக்கிருர் என்று கூறமுடியும். ஆனல் பொதுத் தொண்டில் அவர் போதிய அளவு வெற்றி பெற்ருர் என்று சொல்ல முடியவில்லை. அவரே ஓரிடத்தில் குறித்துள்ளார், "பொது நலத்திற்கு உழைக்கும் அறிஞர்களைத் தன் நலத்திற்கு உழைக்கும் மக்கள் விரைவில் வென்றுவிடுவார்கள். முன்னது ஆற்றின் ஊற்று நீர் போன்றது; பின்னது காட்டாற்றில் பெருகிவரும் வெள்ளத்தைப் போன்றது" என்று.

விசுவநாதத்தின் இந்த உள்ளக்கருத்து இன்று உருவம் பெற்றுவிட்டது. செல்வக் குடியில் பிறந்து சீரும் சிறப்புமாக வளர்ந்தும்கூட, உதகைமண்டிலக் குளிர்ச்சியையும், குற்ருல அருவியின் கவர்ச்சியையும், தென்றலின் இனிமையான உணர்ச்சியையும் அனுபவிக்கக்கூடிய வாய்ப்பையும் வசதியையும் குறைத்துக் கொண்டார். கல்லடி சொல்லடிகளுக்கெல்லாம் தமது நிமிர்ந்த மார்பையும், நேரிய தோற்றத்தையும், நிலையான குறிக்கோளையும் காட்டி தாய்மொழியைக் காத்தார். பல நூற்ருண்டுகளாய்ச் சாதிக்கும் சமயத்திற்கும் அடிமைப்பட்டுக், கண்ணிருந்தும் குருடர்களாய் காதிருந்தும் செவிடர்களாய் உணர்ச்சி யிழந்து தவிக்கும் தென்னுட்டு மக்களின் விடுதலைக்காகப்போராட-அவர்களுக்கு நேரிய பாதையைக் காட்டத் துணிந்து தமது ஊழியத்தைப் பணயம் வைத்தார். இன உணர்ச்சியால் நீதிக் கட்சி கூடாரம் நுழைந்தபோது, மாளிகை வாசத்தையும் மண் குடிசை வாழ்வையும் ஒன்ருக்க முயன்ருர். உழைப்பு இன்னதென்று அறியாது, பிறர் உழைப்பால் உயர்ந்துவிட்ட சரிகைக் குல்லாக்காரர்களையும் ஜமீன் மிட்டா மிராசுகளையும் கால வேகத்தை அறிந்து வறியவர்களைக் கை தூக்கிவிட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கட்சியில் போட்டியும் பூசலும் தலை

காட்டி, அதன் உயர்ந்த குறிக்கோளை அரித்துக்கொண்டிருக்கும்போது, கட்சி அன்பர்களுக்கு உண்மையை விளக்கி, "ஊரெங்கும் கிளைகள் அமைத்து, சட்ட திட்டங்கள் கண்டு, செவ்வனே நடக்கக்கூடிய வழிவகுப்போம்" என அறைகூவல் விடுத்தார். தலைவரின் 'ஏனோதானோ' என்ற குணத்தால் கட்சி நிலை கெட்டுப்போவதை அறிந்து, குறை தவிர்த்துக் குணம் காக்க முயன்றார். ஆனால் இவரை ஒத்தவர்கள் குற்றம் களைய முன்வராததினால், தன்னந் தனியரானார்!

குறுகிய நோக்கமுடையார் குண்டர்களை ஏவிய போது—இன உணர்ச்சியற்றோர் இதயமற்று இன்னல் விளைத்தபோது—திக்குத் தெரியாது திணரும்படிக் கல் மாறி பெய்தபோது—அஞ்சாத நெஞ்சுடையவராய், கடமை மறவாத செம்மலாய், கருதிய செயல் முழக்கும் வீரராய், பெருகிவரும் குருதி வெள்ளத்தையும் அசட்டை செய்து, 'தமிழ் வாழ்க' என்று பெரு முழக்கம் செய்தவர், அன்பர் விசுவநாதம்.

இப்படிப்பட்ட கொள்கை வீரரான, திரு. விசுவநாதம் "தமிழ்நாடு தமிழர்க்கே என்ற வீரமுழக்கம் வெறும் முழக்கமாய்ப் போய்விடக்கூடாது என்ற நல்லுணர்ச்சியால், தமிழர்க்கென்று "தமிழர் கழகம்" என்றோர் அமைப்பைக் கண்டார். அதற்கெனப் பட்டி தொட்டிகளிலும், நாடு நகரந்தோறும் கிளைக்கழகங்களை ஏற்படுத்தினர். "தமிழர் நாடு" எனும் பத்திரிகை மூலமாகத் தமிழர் குரலை எழுப்பி, தமிழ் ஆட்சியை ஏற்படுத்த விரும்பினர்.

திரு. விசுவநாதம் அவர்கள் "தமிழர் கழகம்" ஏற்படுத்தியதை அறிந்து மகிழ்ந்து வரவேற்ற தலைவர்கள் பற்பலர்; தமிழ் அன்பர்கள் ஏராளம். இவர்களில் சிலரது கருத்துரையை மட்டும் தருகிறேன். இவை

களிலிருந்து திரு. வி.யின் நல்லெண்ணத்தை நாடு எவ்வளவு போற்றியது என்பதை நன்கு உணரமுடியும்.

"தமிழர் நாடு வரப்பெற்றேன். திரு. விசுவநாதம் அறிக்கையைக் கண்டு மகிழ்ந்தேன். தமிழ் நாட்டுக்கு ஒரு தமிழர் கழகம் தேவையே. அது சிறந்து ஓங்கி வளரவேண்டும் என ஆசைப்படுகிறேன். தமிழுக்காகத் தமிழ் மக்களுக்காக என்னாலியன்றதை எப்போதும் செய்வேன்"

—சர். பி. டி. ராஜன், மதுரை.

"தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதை உணர்ந்து திரு. விசுவநாதம் அவர்கள் தோற்றியிருக்கும் "தமிழர் நாடு"வை ஆதரிப்பது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்"

—எஸ். முத்தையா முதலியார், சென்னை.

"அன்பர் விசுவநாதம் அவர்களின் முயற்சியால் தமிழ் நாடு ஒருமைப்படும் என்று நம்புகிறேன்."

—திரு. வி. க.

'தமிழ்நாடு தலை தூக்க ஒரு புத்தியக்கம் தேவை'

—ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி

"தமிழர் உள்ளங்களில் குமுறிக் கொண்டிருக்கும் கனவுகளை ஒரு பெரு நனவாக்க முனைந்துள்ள தங்கள் தமிழர் நாட்டுத் திட்டம் கண்டு பெருமகிழ்வெய்துகிறேன். இனித் தமிழ்நாடு தமிழர் நாடாகும் நாள் தொலைவிலில்லை எனலாம்."

—கா. அப்பாதுரைப் பிள்ளை, எம். ஏ. எல். டி.

"தமிழர்களை ஒன்று சேர்க்கத் தாங்களும் தாங்கள் பத்திரிகையும் செய்யும் முயற்சி வெற்றிபெற பெரிதும் விரும்புகிறேன். என்னுலான உதவிகளையும் செய்யத் தயாராயிருக்கிறேன்"

—ஊ. பு. அ. சௌந்திர பாண்டியன்.

"தெருவின் பெரியதனம் தெருவார்க்கு இருக்கவேண்டும் என்பவன், வீட்டின் பெரியதனம் வீட்டார்க்கு இருக்க வேண்டும் என்பதை மறுப்பானு? மறுக்க மாட்டான். சுயமரியாதைக்காரன், திராவிட கழகத்தான் ஆகிய நான் இத்தமிழர் இயக்கத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். 'தமிழர் நாடு'வையும் தமிழர் கழகத்தையும் வாழ்த்துகிறேன்."

—பாரதிதாசன்.

"தமிழ்நாடு தனியாகப் பிரிந்து தமிழ் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என ஆசைப்படுகிறேன். தமிழர் கழகம் முன்னேறி, தமிழ்த் தொண்டு செய்து, தமிழ் நாட்டைப் பிரித்து ஆள்வதற்கு ஆவன செய்து வாழ்க!"

—எஸ். தருமாம்பாள் அம்மாள்.

"தமிழர் நாடு வெளியீடு வரப்பெற்று மகிழ்ச்சியடைந்தேன். தமிழ் மக்களுக்கு இது ஓர் வழிகாட்டியாக இருக்கிறது."

—மீனும்பாள் சிவராஜ்.

"தமிழர் கழகம் தமிழன் விழிப்புக்கு அறிகுறியாகும். தமிழ் நாடு தமிழருக்கே. தலை நிமிர்ந்து நிற்போம். தமிழரசு புரப்போம்"

—வே. வே. இராமசாமி, விருதுநகர்.

"தமிழர் நாட்டிலே, தமிழர் அரசு செய்ய, தமிழர் கழகத்தை நிறுவி அதற்காவன புரியும் அன்பர்கள்

அனைவர்க்கும் எனது வாழ்த்துதல். இக்கழகத்தில் தாய்மார்களும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது என் விருப்பம்"

—வி. இராஜரத்தினம் அம்மாள், எம். ஏ. எல். டி.

இங்ஙனம் தமிழர் கழகத்திற்கு ஆதரவு காட்டியவர்கள் ஒரு கட்சியினர், ஒரு சாதியினர், ஒரு சமயத்தினர் என்றில்லாமல் தமிழர் அனைவரும் முன் வந்தனர். பழைய நீதிக்கட்சித் தலைவர் பி. டி. ராஜனும், சுயமரியாதை வீரர் சௌந்திர பாண்டியனாரும், திரு. வி. க. எஸ். முத்தையா முதலியார் போன்ற சுயேச்சையாளர்களும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்ற திராவிட இயக்கத்தவரும், டி. கே. சண்முகம் போன்ற நடிகர்களும், பள்ளி ஆசிரியர்களும், தமிழ் அறிஞர்களும், இன்னோரன்ன பிறரும்—ஒருங்கே தங்கள் வரவேற்பை நல்கி, தமிழர் நாட்டைக் காண துடிதுடித்தனர்.

இனித் தமிழர் கழகத்தின் கொள்கைகள் என்னென்ன வென்பதைத் தெரிந்து கொண்டால்தான் மேற் சொன்ன தலைவர்களின் பாராட்டுரையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

## உறுப்பினர் தகுதி

1. தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்களும் தமிழ் மொழியே எம்மொழியினும் சிறந்த மொழி எனும் உண்மையை ஒப்புக் கொள்ளுகிறவர்களும், தமிழ் நாட்டையே தங்கள் தாய்நாடாகக் கொண்டு, தங்களைத் தமிழரெனக் கொண்டவர்களும், பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை ஒப்புக் கொண்டு, தமிழர் யாவரும் ஒத்த உரிமையுடைய மக்கள் என்பதற்கு உடன்படுபவர்களும் இக்கழகத்தில் உறுப்பினர்களாகலாம்.

## எல்லைப் பாதுகாப்பு

2. மிகப் பழங்காலந்தொட்டே தமிழ்நூல்களி லும் வழக்காற்றிலும் தமிழ்நாட்டு எல்லையாக உள்ள வடவேங்கடந் தென்குமரிக்குட்பட்ட நிலப்பரப்பு முழுவதும் தனிநாடாகி, தமிழ் மக்களின் தனி அரசாக நடைபெற வேண்டும்.

3. அனைத்திந்தியப் பொது அரசுக்கு மாகாணங் கள் பொதுவில் விட்டுக்கொடுக்கும் ஆட்சி உரிமை கள் தவிர, மற்ற எல்லா உரிமைகளும் தமிழ் நாட் டிற்கே இருத்தல் வேண்டும்.

## ஆட்சிமொழி

4. தமிழ் நாட்டின் அரசியல் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.

5. தமிழ் நாட்டில் தமிழைத் தவிர, வேறு எந்த மொழியும் கட்டாயப் பாடமாக இருத்தலாகாது.

6. தமிழர் கழகம் சமயச்சார்புகளில் தலையிடாது. என்றாலும் நாட்டு நலனுக்கேற்ற சீர்திருத்தங்களைச் செய்யப் பின் வாங்காது.

7. தமிழ் மக்களின் வாழ்வு தாழ்வு, வழிபாடு முறைகளைத் தமிழ் மொழியில், தமிழர்களைக் கொண்டே நடத்த வேண்டும் என்பதைக் கழகம் வற் புறுத்தும்.

8. பதினெட்டு வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை இருத்தல் வேண்டும்.

9. தமிழ் மக்களில் 100க்கு 75 பேர் உடன் பட் டாலொழிய, அரசியல் முறையில் வேறுபாடுகள் செய்ய இயலாது.

10. தமிழ் நாட்டு உழவு, வாணிகம், கைத்தொழில் மருத்துவம், கல்வி, அறிவு, ஆராய்ச்சி, பொருளா தாரம் ஆகியவைகளின் வளர்ச்சிக்குக் கழகம் ஆக்கம் அளிக்கும்.

இது கழக இடைக்கால நிர்வாகக் குழுவினர்களின் 21-4-1947 திருச்சிக் கூட்டத்திலும் 9-2-1947 சென்னைக் கூட்டத்திலும் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப் பெற்றிருக் கிறது. இப் பத்துக் கொள்கைகளில் இருந்து தமிழர் கழ கத்தின் குறிக்கோள் என்ன வென்பதையும், அது பெரும் பான்மையோர் விருப்பத்திற் கிணங்கவே செயல்புரிய வேண்டுமென்ற குடியாட்சி முறையை வற்புறுத்தும் ஓர் அமைப்பு என்பதையும், எல்லோரும் தமிழர் கழகத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்பதற்காக, அனைத்திந்தியப் பொது அரசுக்கு மாகாணங்கள் பொதுவில் விட்டுக்கொடுக் கும் ஆட்சி உரிமைகளைமட்டும் விட்டுக்கொடுக்க இசைந் துள்ளதையும் நாம் தெள்ளத்தெளிய அறிய முடிகிறது.

தமிழர் கழகத்தின் கொடி, வெள்ளை நிறத்தில் வில், கயல்,புலி சின்னம் பொறித்ததாகும்.இக்கொடியை ஏந்தித் தான் இந்தி எதிர்ப்பு அறப்போர் வீரர்கள் முன்னாளில் சிறைசென்றனர். சேரனைக் குறிப்பது வில், பாண்டியனை நினைவு படுத்துவது மீன்; சோழனது வீரத்தைக் காண்பிப் பது புலி; இத்தகைய சின்னமே முன்பு இமயத்தில் பகையர சர்களை வென்று, பட்டொளி வீசிப் பறக்க விடப்பட்ட தமிழர் கொடியாகும்.

தமிழர் கழகத்தை விசுவநாதம்தான் மீண்டும் தொடங்கி வைத்தார் என்பது உண்மையானாலும் அது அவருடைய சொந்த நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட கழக மல்ல. இதை அவரே முன்பு ஓர் அறிக்கையில், "கழகம் அமைத்து வேலை செய்வது தனிப்பட்ட என்னுடைய செய லல்ல; அது தமிழ் நாட்டுத் தமிழ்ப்பெரு மக்கள் கூட்டத்

தின் வேலையும்,கடமையும், முடிவுமாகும்'' என்று வெளிப் படுத்தியிருக்கிறார். எனினும், அவருடன் தனிப்பட்ட முறையில் மனக் குறைபாடு உடையவர்களும், அவருடைய செல்வாக்கைக் கண்டு அஞ்சியவர்களும் ஆன ஒரு சிலர் தமிழர் கழகத்தைப்பற்றித் தவறாக, வீணாகத் தூற்றி வந்தார்கள்.

இதோடு, திராவிடக் கழகத்தலைவர், "தமிழர் என் போர் பித்தலாட்டக் கருங்காலிகளே என்றும், தமிழர் தமிழரசு என்பது ஒன்று அறியாமையாக இருக்க வேண் டும் அல்லது பித்தலாட்டமாக இருக்க வேண்டும் என்றும், இவர்களைக் கருங்காலிகளென்றே கூறுவேன்" என்றும் துணிந்து இழித்துக்கூறி வந்தார். இதைக் கண்டு சகியாத விசுவநாதம் மேற்சொன்ன வார்த்தைகளைத் திரும்பப்பெற வேண்டுமென்று உள்ளபடியே வருந்திக் கேட்டுக் கொண் டார். இத் தமிழ் உணர்ச்சியைப் பிறரிடம் காண முடிய வில்லை.

ஆனால் இதே சமயத்தில், கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்கனவே பெரியார் ஈ. வே. ராவுடன் பிணங்கி விலகி யிருந்தாலும், தாம் கொண்ட "தமிழ் நாடு தமிழர்க்கே" என்ற பழங்கொள்கையிலேயே உறுதியாக இருந்ததாலும் திராவிட இயக்கத்தவர்களுடன் சேராமல் ஒதுங்கி நின்றே தமிழர் கழகத்தைப் புதுப்பித்தார். இச் சூழ்நிலையை உணர்ந்தால்தான் விசுவநாதம் தொடங்கிய தமிழர் கழகம் நன்கு வேரூன்ற முடியாமற் போனதற்குக் காரணம் தெரி யும்.

தமிழர் கழகத்தின் கொள்கையும் கோட்பாடும் சரி யானதல்லவென்று எவரும் கூறார். ஆனால் அதே சமயத் தில் அக் கொள்கையை மக்களிடையே பரப்பி ஆதரவு தேடவேண்டுமானால், முன்னணியில் இருப்பவர்கள் துணிந்து பொதுவாழ்வில் முழுக்க ஈடுபட்டால்தான்

வெற்றி பெற முடியும். இதையும் விசுவநாதம் நன்கு உணர்ந்திருந்தார் என்பதை "பொதுவிலே பணம் வகுவித்து, பொது வாழ்விலே வாழ்ந்து முழுநேரத் தொண்டு செய்ய சிலருக்கு வாய்ப்பு இருக்கலாம். அவர்களைப்போல முழுநேர வேலை செய்ய எனக்கு வாய்ப்பில்லை. பெருங்குடும்பத்தின் தொல்லை, நிலச்சாகுபடி தொல்லை, வெளிநாட்டு வியாபாரத் தொல்லை, உடல்நலக்குறைவு ஆகியவைகளுடன் மருந்தருந்தி வருகின்ற நான் உண்ணவும் உறங்கவும்கூட ஓய்வில்லாமல் பொதுத்தொண்டு செய்யவேண்டியிருக்கிறது" என்று அவரே கூறியிருப்பதிலிருந்து நன்கு அறிய முடிகிறது.

தமிழ் நாட்டுக்கு என ஒரு வலுவான அமைப்பு ஏற்பட்டு, அதன் மூலம் தமிழ் மக்கள் ஒன்றுகூடி நாட்டுக்கும் மொழிக்கும், மக்களுக்கும் தொண்டு செய்ய முன்வர வேண்டுமென்று அவர் மனமார விரும்பினார். அவர் தலைவராக அல்ல, தொண்டராகப் பணியாற்றி வந்தார்.

இச்செய்கைக்கு அவர் அடைந்த இலாபமென்ன? ஒத்துழைக்க முன்வர வேண்டியவர்களெல்லாம், ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தனர். இதுதான் இவ்வொத்துழையாமைதான்—அவர் கைமேல் கண்ட பலன்! ஓராண்டுக் காலம்வரை கழகத்திற்காகப் பத்திரிகை நடத்தி பிரசாரமும் செய்தும்கூட போதிய ஆதரவு பெற்றாரில்லை. ஆகவே அவர் மனம் நொந்து, 'எனது தோல்வி' என்னும் உள்ளம் உருக்கும் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

அதில் "தமிழ் நாட்டிற்கென்று ஒரு வலுவான அமைப்பு வேண்டுமென்றும், தமிழர் கழகம் தமிழ் நாட்டில் ஆந்திரமகாசபை போல் நடைபெறவேண்டுமென்றும், தமிழ் மக்கள் அனைவரும் தமிழராக ஒன்றுபட வேண்டுமென்றும், தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும், தமிழ்

மக்களுக்கும் தமிழ்நாட்டு வர்த்தகக் கைத்தொழிலுக்கும் தொண்டுசெய்ய வேண்டுமென்றும், தமிழ்நாடு தனியே பிரிந்து ஒரு வல்லரசாகத் திகழ வேண்டுமென்றும், இன்றேல் தமிழ் மக்களின் வாழ்வு வீழ்ச்சியடையுமென்றும் எண்ணி தமிழ் மக்களுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டு 'தமிழர்நாடு'வையும், தமிழர் கழகத்தையும் தோற்றினேன் —முயற்சித்தேன்—ஏமாந்தேன்—தோல்வி அடைந்தேன்" என்று மிக கன்னியமாகக் கூறியுள்ளார்.

கட்டாய இந்தி நுழைப்பின்போது அதைக் கண்டிக்க முன்வராதவர்களும்—இந்தி விரட்டி அடிக்கப்பட்ட காலத்தில் எழுந்த 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற உயர்ந்த குறிக்கோளைக் கேலி செய்தவர்களும்—பிற்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, 'உறவுக்கு இமயம் உரிமைக்கு வேங்கடம்' என்ற சந்தர்ப்பவாதத்தைக் கையாண்டனர். இப்படிப்பட்ட சமயத்தில்தான் தமிழர் உயர்வுக்குக்காகப் பாடுபட்ட அன்பர் விசுவநாதம் "தமிழர் கழகத்தை" நிலைநாட்ட முயன்றார்; உழைத்தார், ஆனால் அவர் எதிர்பார்த்த அளவிற்குப் போதிய ஆதரவு பெற்றாரில்லை. ஆகவேதான், 'தமிழர் நலனுக்கென தமிழர் கழகம் பயன்பட வேண்டும். அப்படி அதன் பெருமையைச் சரிவர உணராத விழிப்பற்ற நாட்டில் அது இருந்து தொண்டாற்றுவதில் பயனில்லை" என்று கருதி கலைத்து விட்டார். அவர் மேலும் தொடர்ந்து அதை நடத்தியிருக்கலாம், பொதுவாழ்வைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக்கொள்பவராக இருந்திருப்பாரானால்! விசுவநாதம் அவர்கள் தமக்கென ஓர் அமைப்பு இருப்பதாகத் தவறாகவும் நினைக்கக்கூடாது என்று உய்த்துணர்ந்தே தமிழர் கழகத்தை வேறு எவரிடத்திலாவது ஒப்படைக்க முன்வந்தார். அப்படிப்பட்ட அமைப்பை ஏற்று நடத்த நல்லவர்

வாராததினுல் அதைக் கலைத்துவிட்டார். இவ்வகையிலும் அவர் பிறர்க்கு நல்லதோர் வழிகாட்டியாக விளங்குகின்ருர்.

தென்னுட்டு வரலாற்றிலேயே பொது வாழ்வில் ஈடுபட்டவர்களில் அறிவும் ஆற்றலும் செல்வாக்கும் செல்வமும் மிக்குள்ளவராகத் திகழ்ந்தவர்கள் வ.உ. சிதம்பரனுர், பி. தியாகராய செட்டியார், திரு. வி. கல்யாணசுந்தரனுர், ச. சோமசுந்தர பாரதியார், ஈ. வே. ரா, டாக்டர் நடேச முதலியார் உள்ளிட்ட மிகச் சிலரேயாவர். இவர்களில் பொது வாழ்வுக்காகத் தம் உடல் பொருள் அனைத்தையும் பாழ்படுத்திக் கொண்டவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் வ. உ. சிதம்பரனுர், தியாகராய செட்டியார், நடேச முதலியார் போன்ருேராவர்.

திரு. விசுவநாதம் அவர்கள் மேற்சொன்னவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே பொது வாழ்வில் இறங்கினுர். அவர் அரசியல் சமுதாயம், தமிழ்த்தொண்டு ஆகியதுறைகளில் பாடுபட்டுத் தமது சொந்த செல்வத்தைச் சிறிது இழந்திருக்கிருரேயன்றி, அவைகளால் அவர் பணம் திரட்டிவிட்டதாக எவராலும் சொல்ல முடியவில்லை.

பெரியார் ஈ. வே. ராமசாமியால் காணப்பட்ட தன்மான இயக்கத்தில் தொடக்கத்தில் சேர்ந்த நன்கு கற்றுவரில் நம் விசுவநாதமும் ஒருவராவர். அக்காலத்தில் அழகிரிசாமியும் ப. ஜீவானந்தமும், கி. ஆ. பெ. விசுவநாதமும்தான் முன்னணிவீரர்களாகத் திகழ்ந்தவர்கள். பெரியாருக்குப் பக்கபலமாக இருந்த இவர்கள் நாளடைவில் ஒருவர்பின் ஒருவராக அவருடன் எக்காரணத்தாலோ பிணங்கி வெளியேறினுர்கள். பெரியாருக்கு அடுத்தபடியாக மிகச் செல்வாக்குடன் பொதுத் தொண்டாற்றி வந்த கி. ஆ. பெ. வி—தளபதியாக இருந்த அவர்—பின்னர் அப்பதவியை இழக்கவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

திரு. விசுவநாதத்தின் ஒதுங்கலுக்குப்பின், திரு. அண்ணு துரையின் செல்வாக்கு உயரத் தொடங்கிற்று. அவர் நாளடைவில் தளபதியானூர்; பொதுச் செயலாளரானூர்.

தன்மான இயக்க வரலாற்றை அறிந்தவர்களுக்கு அது பல பருவங்களை—சகாப்தங்களை—கடந்து வந்திருப்பது தெரியும். முதலில் எஸ். இராமநாதன். அவருக்குப்பின் கு. அழகிரிசாமி. பிறகு ப. ஜீவானந்தம், விசுவநாதம், சி. என். அண்ணுதுரை. இவர்கள் ஒவ்வொருவராலும் ஒவ்வொரு விதமாகத் தமிழ்ப் பேச்சு நடை கையாளப் பட்டு, அழகுபடுத்தப்பட்டு, இன்று தன்மான இயக்கத் தினர்போல் அவ்வளவு எளிதாகவும் வீரமாகவும் தெளி வாகவும் பேசக்கூடியவர்கள் வேறு எவரும் கிடையாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதை யாராலும் மறுக்க முடியாது.

## 13. போராட்ட வீரர்

இம்மண்ணில் உள்ள சிறு புழுவும்தான் உயிர் வாழ துடியாய்த் துடித்துப் போராடுகிறது. அப்படியானுல் மற்ற உயிர்களைப் பற்றி—அதிலும் ஆறறிவு படைத்த மனிதர்களைப் பற்றிச்—சொல்லவேண்டியதே இல்லை. ஒவ்வொருவரது வாழ்க்கையும் ஏதாவது ஒருவகையில் போராடாமல் உயர்வு அடைவதில்லை. ஆகவே போராட் டம் வாழ்க்கையின் அடிப்படை என்பதாகிறது.

திருச்சி விசுவநாதமும் வாழ்க்கையில் பல துறைகளில் போராடியே வெற்றிப் பெற்றிருக்கிருர் என்பதை அவரது வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

தொழில் துறையை எடுத்துக்கொண்டால், நல்ல சரக்கை விற்று நேர்மையாக வாணிபம் நடத்தி 'நாணய மானவர்' என்ற பெயரை மிகவும் போராடியே பெற்றிருக்கிருர். இனி அவரது பொதுவாழ்வைக் கவனிப்போம். நீதிக்கட்சியில் சேர்ந்து உழைத்தபோது, அக்கட்சிக்காக ஊர்தோறுஞ் சுற்றித் திரிந்து அங்காங்கே கிளைக் கழகங்கள் தோற்றுவிக்கப் பெரும்பாடுபட்டார். அவருக்கும் தலைவருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையே, 'கட்சியைப் பலம் வாய்ந்ததாகச் செய்யவேண்டுமாளுல், உறுப்பினர்களை அதிகமாகச் சேர்த்து, சட்டதிட்டங்களை ஏற்படுத்தி, கிளைக் கழகங்களைக் கண்டு, கணக்கு வழக்குகளை ஒழுங்காக வைத்துக்கொள்ளவேண்டும்' என்பதால் எழுந்ததேயாகும். அதற்காகவும் அவர் தன்னந்தனியாகப் போராடி போதிய ஒத்துழைப்பு இல்லாததால், கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைவிட்டு விலகிளுர். ஆயினும் கட்சித் தொண்டராகக் கடைசிவரை இருந்து வந்திருக்கிருர்.

இம்மாதிரியே, தன்மான இயக்கத்தின் குறிக்கோள் உயர்ந்ததாக இருந்ததால், அதற்காக வேண்டி ஈ. வே. ராவுடன் பட்டிதொட்டிகளிலும், நாடு நகரந்தோறும், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப முற்பட்டார். இதன் விளைவாகச் சாணி அடியையும், கல்லடியையும், வசைவையும், எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மிகவும் போராடி வந்திருக்கிருர்; போராடியும் வருகிருர்.

தமிழரது அறப்போர் என்றும் இந்தி எதிர்ப்பு இயக்கம் என்றும் வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்ச்சியைத்தான் எடுத்துக் கொள்வோம். அதற்காக விசுவநாதம் எவ்வளவு போராடி இருக்கிருர்?

நாடெங்கும் கூட்டங்கள் கூட்டி இந்தியால் விளையும் கேடுகளைத் தெள்ளத் தெளிய விளக்கிளுர். அச்சமயத்

தில் இந்தி எதிர்ப்பு வீரர்கள்மீது வீசப்படும் பாணங்களைத் தமது சொல்மாரியால் பயனற்றதாகச் செய்து விட்டிருக்கிருர்.

சான்ருகச் சிலவற்றைத் தருகிறேன்: ‘பார்ப்பனர்களுக்குத்தான் நாட்டுப் பற்று உண்டு; மற்றவர்களுக்கு அது கிடையாது என்று பறைசாற்றப்படுவது பெரும் பிழையாகும். இந்திய வரலாற்றையே எடுத்துப் பாருங்கள். எத்தனையோ முறை படையெடுத்து வந்தவர்களையெல்லாம் கைலாகு கொடுத்து வரவேற்று, அவர்களுக்கு இந்நாட்டைக் காட்டிக்கொடுத்த வஞ்சகர்களுக்கும் தேச பக்திக்கும் உள்ள சம்பந்தம் ஏகாதசிக்கும் இன்ருசி முத்துவுக்குமுள்ள சம்பந்தமாகத்தான் இருக்கும்’ என்று ஒரு முறை விளாசிக் காட்டினர்.

மேலும் அவர் அரசியல் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதாரைக் குழம்பிற்கு கருவேப்பிலையைப் பயன் படுத்துகிற மாதிரி பயன்படுத்திக் கொண்டு பிறகு தூக்கி எறிந்து விடுகின்ருர்கள் என்று ஒரு உதாரணம் கூறியது பலரை விழிப்படையச் செய்தது.

அன்று ராஜகோபாலாச்சாரியார், தமது பேச்சுக்களில் அடிக்கடி அத்தைப் பாட்டிக் கதைகளையும் உவமானங்களையும் கூருமல் பேசமாட்டார். அவருக்குச் சுடச்சுட குட்டிக் கதைகளுடனும், அவருடைய உதாரணங்களைக் கொண்டும் உடனே பதிலிறுப்பார் விசுவநாதம்.

ஒரு சமயம் இந்தியின் அவசியத்தை வற்புறுத்த ஆச்சாரியார் “தமிழ் இட்லி போன்றது; அதற்கு இன்றியமையாத சட்னி போன்றது இந்தி’ என்று குறிப்பிட்டுப் பொதுமக்களை ஏமாற்றப் பார்த்தார். விசுவநாதமா இதை சும்மாவிட்டு விடுவார். அவர் உடனே சொன்னர்; “ஆச்சாரியார் தமிழை இட்லிக்கு ஒப்பிட்டதை அப்

படியே ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்று. வெறும் இட்லியைச் சட்னி இல்லாமல் தின்ன முடியும். இட்லி இல்லாமல் சட்னியை தின்ன முடியாது. ஆகவே தமிழே சரியாகத் தெரியாதவர்களுக்குத் தமிழ்தான் முதலில் கற்றுக்கொடுக்கப்படவேண்டும். அதைவிட்டுவிட்டு இட்லி யில்லாத வெறும் சட்னியை (இந்தியை) கொண்டுவருவதில் பயன் ஏதும் ஏற்படாது'' என்று பதில் கொடுத்தார்.

பிறிதொரு சமயம் குறும்புக்கார முதன் மந்திரி "தமிழ் வேட்டி போன்றது. இந்தி சட்டை போன்றது'' என்று உதாரணம் கூறி இந்தியின் அவசியத்தை வற்புறுத்தினர். இதற்கும் விசுவநாதம் உடனே விடை கொடுத்தார். "தமிழர்க்குத் தமிழ் வேட்டி போன்றது என்ற உண் மையை ஆச்சாரியார் தம்மையும் அறியாமல் கக்கி விட் டார்! ஆம் தமிழ் வேட்டிபோன்று மிகவும் இன்றியமை யாதது தான்; அதை அவர்கள் வைத்துக் காப்பாற்றி னலே அது அவர்களது மானத்தைக் காப்பாற்றும். அதை விட்டு அவர்கள் இந்தி எனும் மேல் சொக்காயைமட்டும் அணிந்து, தமிழ் வேட்டி இல்லாமல் இருப்பார்களானல், அதைவிட அவமானம் வேறு ஒன்றும் இல்லை!'' என்று சாணக்கியரையும் வெல்லும் சாணக்கிய முறையில் பதில் கூறினர் விசுவநாதம்! இதுபோல் மக்களிடம் எண்ணற்ற மறுமொழிகள் கூறி, இந்தியை வெறுத்து அதை விரட் டும்படி தூண்டினர்.

இந்தி கட்டாய நுழைவின் காரணமாகத் "தமிழ்நாடு தமிழர்க்கே'' என்ற பெருமுழக்கம், உயிர்ப்பசையுள்ள லட்சியமாக எழுந்தது. இந்த லட்சியம் சிதறிப் போகாமல் இருக்க வெண்ணி, "தமிழர் கழகம்'' என்ற பெயரில் ஊர்தோறும் 19 பேர்களைக்கொண்ட கிளைக்கழகங்களை அமைத்து, தன்னேர் இல்லாத வீரர் ச. சோமசுந்தர

பாரதியாரைத் தலைவராக்கி, அதைக் கட்டிக்காத்து வந்தார். இதிலும் அவர் தன்னந் தனியாகப் போராடினார்.

"தமிழ் நாடு" என்று பெயரளவில் பிறரால் அழைக்கப்படுகிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள், தங்களது கலை, பண்பாடு, முதலியவற்றைப் பறி போகாமல் காக்க, இப்போதுள்ள தமிழ் நாட்டைத் தனியாகப் பிரித்துத் "தமிழர் நாடாக"க் காணவேண்டுமென்று பெரிதும் போராடி வருகின்றார். இதில் முழு வெற்றி அடைய வேண்டுமானால், பொது மக்களும் அவரது குறிக்கோளை தமது குறிக்கோளாக நன்கு உணர்ந்து, அதற்காகப் பெரும் போராட்டம் நடத்தியாக வேண்டும். இன்றேல் அதுமுடியாத நிலையில் போய்விடும். அவரது எண்ணம் சரியானது. அதோடு அதற்கு ஒத்துழைக்க முன்வருபவர்களுடன் கலந்து பேசி, திட்டம் வகுக்க வேண்டும். மற்ற பணிகளை விட இதில் அதிக நாட்டஞ் செலுத்தினால், வெற்றி நிச்சயம்!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பின் தமிழில் ஏற்பட்ட மறு மலர்ச்சியின் காரணமாகத் 'தமிழ் நாட்டில் தமிழ் இசை வேண்டும்" என்ற உரிமைக் குரல் எழுப்பப் பட்டது. இதைக் கண்டதும், இதுவரை தமிழ்மொழி மீது கிஞ்சிற்றும் தமிழ்ப் பற்றிலாதவர்களும்—பிறமொழியிலே இசையைப் பாடி வந்தவர்களும்—ஆன சில பெருமக்கள், "தமிழில் இசையில்லை! தமிழில் சிறந்த பாடல்கள் இல்லை! தமிழில் என்ன இருக்கிறது?" என்ற திமிர் வாதங்களைக் கிளப்பினார்கள். இந்த 'ஐந்தாம் படைகளை' இனியும் வைத்திருப்பது ஆபத்து என்று "தமிழ் இசை இயக்கம்" என்ற கிளர்ச்சி ஏற்பட்டது, இக்கிளர்ச்சியிலும் விசுவநாதம் பெரும்பங்கு கொண்டார். அவரது பேச்சும், எழுத்தும் பயன்பட்டது.

தமிழகத்தில் எழுந்த உரிமை வேட்கையின் விளைவாகத் "தமிழ் நாட்டில் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்களே பாடவேண்டும்" என்ற முடிவு ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1941-ஆகஸ்ட் இறுதியில் நிறைவேறியது. அடுத்த நாள் (1–9–1941-ல்) அந்த முடிவைக் கண்டித்து 'இந்து' பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியிருந்தது. அதைக் கண்டதும் மறுநாள் (2-9-1941) திரு. விசுவநாதம் "தமிழ்ப் பாட்டுக்கும் முட்டுக் கட்டையா?" என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார். அது அன்று எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. திருச்சியில் மட்டும் 5000 இதழ்கள் தனியாக அச்சிட்டு பல பொது விடங்களில் வழங்கப்பெற்றன. இக்கட்டுரையைக் கண்ட செட்டி நாட்டரசர். சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், இதனை ஒரு இலட்சம் இதழ்கள் அச்சிடச் செய்து தமிழ் நாட்டின் எல்லா இரயில்வே நிலையங்களிலும் ஆட்களை நிறுத்தி இலவசமாக வழங்கச்செய்தார்.

தமிழ் இசை எதிர்ப்பாளர்களை எதிர்க்கப் புறப்பட்டார் விசுவநாதம். தமிழில் இசை நூல்களும், இசைப் பாடல்களும் இருக்கின்றன என்று மக்களுக்குச் சான்றுகளுடன் விளக்கினார். மேலும் அவர் எதிரிகளுக்கு வாத முறையில் உடனுக்குடன் பதில் சொல்லி வந்தார்.

'தமிழில் இசையில்லை' என்போர்க்கு 'இல்லை என்றால் "உண்டாக்குவோம், ஏற்படுத்துவோம்" என்று கூறுவார். பாடல்கள் பாடமில்லை என்றால்"பாடம் செய்து கொண்டு வாருங்கள்" என்பார். "பாடமுடியாது" என்று கூறும் கருத்துக் குருடர்களுக்கும், தமிழரின் உப்பைத் தின்று ஊனைச் சதையை—தொந்தியை வளர்த்துக் கொண்டவர்களுக்கு—தமிழில் பாடினால் அன்றி தமிழர் நாட்டில் இடமில்லை என்று அழுத்தத் திருத்தமாகச் சொல்லுவார். இப்படியாக தமிழ் இசை எதிர்ப்பாளர்

களின் வாதங்கள் விசுவநாதத்திடம் செல்லுபடியாகாமல் போய்விட்டன! இதனால், தமிழ் இசை இயக்கம் ஒரு வகுப்புவாத இயக்கம் என்ற பழைய பல்லவியைப் பாடத் தொடங்கினர், புல்லறிவாளர்கள். அதற்கும் சளைக்க வில்லை விசுவநாதம். பதிலுக்கு பதில், எழுத்துக்கு எழுத்து என்ற முறையில் எல்லாம் திரு. வி. பாடுபட்டு தமிழ் இசையை இந்நாட்டில் பரவச் செய்திருக்கிறார். இதிலும் அவருக்குத் தமிழ் இசைச் சங்கம் பெரும் நன்றி யறிதலைத் தெரிவித்திருக்கிறது. இன்னும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அவர் திருச்சியில் நடத்திய தமிழ் இசை மாநாடு எவராலும் மறக்க முடியாததாகும்.

திரு. வி. அவர்கள் தமிழ் இசை இயக்கம் பற்றி பல மாதங்கள் பல ஊர்களில் பல்வேறு மாநாடுகளில் பலநூறு சொற்பொழிவுகள் செய்து மக்களை விழிப்படையச் செய்திருக்கிறார். இவைகளில் குறிப்பிடத் தகுந்தது, திருச்சியில் அவர் தமிழிசை மாநாட்டை இராஜா சர். அண்ணாமலை செட்டியார் முன்னிலையில் வியக்கத்தக்க முறையில் நடத்திக் காட்டியதே. இம்மாநாட்டில் தமிழ் நாட்டிலுள்ள இசைவாணர்கள் அனைவருமே கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். ஏழிசை மன்னர். எம். கே. தியாகராஜ பாகவதர் வரவேற்புத் தலைவராக இருந்து அரிய சொற்பொழிவு செய்தார். இதற்குப்பின் திரு. வி. அவர்கள் மதுரை முத்தமிழ் மாநாட்டிற்குச் சென்று, "இசை", "நடிப்பு" என்ற தலைப்பில் இரண்டு நாட்களில் இரு அரிய சொற்பொழிவாற்றினர். இப்பேச்சுக்கள் அம்மாநாட்டு மலரில் வெளி வந்துள்ளன.

தமிழிசை இயக்கத்திற்கு ஆதரவு தருவதற்குப் பதிலாக எதிர்ப்புக் கிளப்பினர், கும்பகோணத்திலிருந்த சில 'தொந்தி பெருத்தவர்கள்' அதையடக்க எண்ணினர்.

அவ்வூர் வழக்கறிஞர் சி. எல். ஆராவமுத ஐயங்கார்; அங்கு ஒரு தமிழிசை மாநாட்டை கூட்டி, அதில் திரு. விசுவநாதம் அவர்களைச் சொற்பொழிவு நிகழ்த்தக் கேட்டிருந்தார். திரு. வி.யும் கும்பகோணம் சென்று $1\frac{1}{2}$ மணி நேரம் வரை அம்மாநாட்டில் தமிழிசை அன்பர்களையும் மாற்றார்களையும் கவரும் வண்ணம் உணர்ச்சி மிக்கதோர் சொற்பொழிவு ஆற்றித் திரும்பினார். அப்பேச்சை அடுத்த நாள் எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டி எழுதியிருந்தன. தமிழிசைக்கு ஆதரவாகப் போராடிய "கல்கி" யின் 10—5—1953 இதழில் திரு. விசுவநாதத்தின் படத்தைப் போட்டு கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"அன்று பேசியவர்களுக்குள் திருச்சி விசுவநாதம் அவர்கள் பேச்சுத்தான் காரசாரமாக இருந்தது. தமிழிசைக்குக் கூறப்படும் எதிர்ப்புகளையெல்லாம் அவர் ஒவ்வொன்றாகத் தம் முன்னே நிறுத்தி, கன்னத்தில் அறை கொடுத்து அனுப்பினார். 'எந்த இயக்கம் வளர வேண்டுமானாலும் எதிர்ப்பு அவசியம். தமிழ் இசை இயக்கத்துக்கு இதுவரை உள்ள எதிர்ப்பு போதாது. இன்னும் எதிர்ப்பை வரவேற்கிறேன். எங்கே இன்னும் கொஞ்சம் எதிர்ப்பு! எங்கே இன்னும் கொஞ்சம் எதிர்ப்பு!" என்று ஆவலாகக் கேட்டார். ஆனால் அவர் வரவேற்பை ஏற்றுக் கொள்ள மகாநாட்டில் யாரும் தயாராக இருந்ததாகத் தெரியவில்லை. இவர் பிரசங்கத்துடன் அன்றைய பிரசங்கக் கச்சேரிமுடிந்தது. மாலையில் இசைக்கச்சேரி ஆரம்பித்தது."

காரைக்குடியிலிருந்து வெளிவந்த "செட்டி நாடு" என்ற வார இதழின் ஆசிரியர் திரு. வியின் அன்றைய பேச்சு முழுவதையும் ஒரு தனி ஆளை அனுப்பி குறிப்பு எடுத்து எழுதி வரச் செய்து, தமது 'தமிழ் இசை மலரில்' வெளியிட்டு

தன் சொந்தக் கருத்தையும் தெரிவித்திருந்தார். அப் பேச்சு படித்துப் பார்க்கவேண்டிய ஒரு சிறந்த சொற் பொழிவாக இன்னும் காட்சியளிக்கின்றது. திரு. வியின் தமிழ்இசை ஆதரவுப்பேச்சுக்கள் "தமிழ்ப் பொழி"விலும் பிற பத்திரிகைகளிலும் எடுத்து வெளியிடப்பட்டுள்ளன. சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் இரண்டாவது இசை மலர் "தமிழில் பாடினால் தரம் குறையுமாம்!" என்ற திரு. வியின் மறுப்புரையைத் தாங்கி வந்துள்ளது. (இசைமலர் 2 நவம்பர் 1946).

தொழிலுக்காகவும், நீதிக்கட்சிக்காகவும், தன்மான இயக்கத்திற்காகவும், இந்தி எதிர்ப்புப் போருக்காகவும், தமிழ் இசைக் கிளர்ச்சிக்காகவும் திரு. விசுவநாதம் போராடி இருப்பதைச் சுருக்கமாகக் குறித்திருக்கிறோம். இன்னும் சில துறைகளிலும் அவர் போராடியதையும் பார்ப்போம். 'திருச்சி புகையிலை வணிகர்கள் சங்கம்' என்ற சங்கத்தை நிறுவி, வாணிபர்களின் குறைகள் நிங்குவதற்காக அவர் போராடியிருக்கிறார்; பலமுறை அரசாங்கத்திடம் தூது சென்றிருக்கிறார்.

மாணவர்களை கல்லூரியில் சேர்க்க தகுதி திறமை பார்க்கப்பட்டபோது, அதற்காக வானொலியில் நடை பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு, பின்தங்கியுள்ள சமுதாயத்தினரை முன்னுக்குக் கொண்டு வருவதற்கும், தகுதி குறைந்தவர்களைத் தகுதி பெறுவதற்காகவுமே பள்ளிகளும், கல்லூரிகளும், தொழிற்பயிற்சி நிலையங் களும் இருக்கவேண்டுமென்றார். அப்படியில்லாமல் தகுதி வாய்ந்தவர்களையே மேலும் தகுதி பெற ஏற்பாடு செய்வது தீட்டின கத்தியையே தீட்டி கொண்டிருக்கும் வீண் வேலை என்றும் கூறி, தகுதி திறமையின் கீழ் நடை பெறும் உள்ஞார்ந்த சூழ்ச்சியை வெட்டவெளிச்சமாக் கினார். பத்திரிகையிலும் தம் கருத்தை வெளியிட்டார்.

சாதிமுறை அமைப்பு இந்நாட்டுச் சமுதாயத்தைச் செல்லரித்து வருகிறதென்பதை யாவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் தெளிவுரையாற்றி, சாதி எந்த முறையிலும் எந்த உருவத்திலும் மக்கள் மனதில் இடம் பெருதபடி விளக்கம் கூறியிருக்கிருர்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமாளுல், தமக்கு நியாய மென்று தோன்றியதற்காக வேண்டி, எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் திரு. விசுவநாதம் தம் குரல் எழுப்பிப் போரா டியே வருகிருர். தீண்டாமை ஒழியவும், சாதி முறை யழியவும், தமிழ் மொழி வளரவும், தமிழ் நாடு தன்னுட்சி பெற்றுத் தமிழ் ஆட்சி மொழியாகவும், வாளெலி முதலிய பொது இடங்களில் தமிழுக்கு முதலிடம் வரவும் திரு. வி. நிரம்பவும் போராடியிருக்கிருர். இத்தகைய போராட்ட உள்ளம் படைத்தவரை இந்நாடு பெற்றிருப்பதைக் கண்டு, நாம் பெருமையடைய வேண்டும்.

## 14. நாடறிந்த நாவலர்

தமிழகம் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே ஈந்து வான் புகழ்'' கொண்டிருக்கிறது. அரசியல் அறிவும் நிர் வாகத் திறமை மிக்க ஆற்காட்டு இராமசாமி முதலியாரை வட்டமேசை மாநாட்டிற்கும், அமெரிக்காவிற்கும், ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும் அனுப்பிப் புகழ் அடைந்திருக் கிறது. பொருளாதார மேதையாக விளங்கிய ஆர். கே. சண்முகஞ் செட்டியாரை ஒட்டாவாவிற்கும், ஸ்டர்லிங் மாநாட்டிற்கும் அனுப்பிப் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க செய்து பெருமை பெற்றிருக்கிறது. பெரியார் ஈ. வே. ராம

சாமியின் சீர்திருத்தக் கொள்கையை ஏற்று, விழிப் புணர்ச்சி பெற்று வருகிறது, இம் மாதிரியே அரசியல் மேதை அறிஞர் அண்ணாதுரையையும், அகில உலக நாதஸ்வர வித்வான் இராஜரத்தினம் பிள்ளையையும், ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதரையும், நகைச் சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணனையும், இசை யரசு எம். எம். தண்டபாணி தேசிகரையும், முத்தமிழ்ப் புலவர் டி. கே. சண்முகத்தையும், தொழில் விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும், வணிகம், எழுத்து, பேச்சு, செயல்—துறைகளில் பெயர் பெற்ற கி. ஆ. பெ. விசுவநாதத்தையும் தந்து உதவியிருக் கிறது. இவர்கள் அத்தனை பேராலும் தமிழ் நாடு உயர்ந் திருக்கிறது என்று சொன்னால் அது உண்மையே தவிர புகழ் உரையாக இராது.

திருச்சி விசுவநாதம் அவர்கள் சிறந்த பேச்சாளராக எப்படி ஆக முடிந்தது என்பதை இனி இங்கு கவனிப் போம்.

இளமையில் அவருக்கு உண்டான தமிழ்ப் பற்று, சைவப் பெரியோர்களின் கூட்டுறவைத் தேடித் தந்தது. அதன் காரணமாக அவர் தமிழில் பேசவும் எழுதவும் வேண்டுமென்ற ஆவல் கொண்டார். மேலும் திருவாளர். உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையைப் பேச்சுக்கு ஒரு முன் மாதிரியாகக் கொண்டு, திருசிரபுர சைவ சபையின் மூல மாகப் பேச்சுப் பயிற்சி பெற்றார். இதுவரை, சைவ அறை யிலே தம் பேச்சாற்றலைக் காண்பித்துக் கொண்டிருந்த விசுவநாதம், வெளியில் பேச்சரங்கம் ஏறவேண்டிய சந் தர்ப்பம் நேரிட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடார சித்தி விநாயகர் சபை ஆண்டுவிழாவில் 1921-ம் ஆண்டு பிப்ரவரி 5-ந் தேதி காலஞ்சென்ற பெருங் கவிஞர் வெள்ளக்கால்

ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் 'அன்பு' 'மனதின் வலிமை' எனும் பொருள் பற்றி முதன் முதலாக மேடை ஏறிப் பேச முற்பட்டார் விசுவநாதம். அன்று அவருடன் பேசினவர்கள் மறைந்த மாவீரர் வ. உ. சிதம்பரனாரும், கவிராஜ ஜெகவீர பாண்டியனார்போன்ற பெரியோருமாவர். இத்தகைய பெரும் புலிகளுடன் தமது 22-ம் வயதில் பேச முன் வந்ததே, விசுவநாதத்தின் இளமைத் துடிப்பையும், துணிவையும் காட்டுகின்றது!

அந்நாள் முதல் சைவக் கூட்டங்களிலும், தமிழ் அவைகளிலும், நீதிக் கட்சியிலும், சுயமரியாதை மேடைகளிலும், நாடக அரங்குகளிலும், வானொலி நிலையங்களிலும், அயல்நாடுகளிலும் விசுவநாதம் பேசிக்கொண்டு வருகிறார்.

இலக்கியம், இசை, நாடகம், அரசியல், சமூகம், சீர்திருத்தம், கல்வி, சமயம், வாணிகம், தொழிலாளர், ஆராய்ச்சி மேடை, வானொலி நிலையம் ஆகிய பன்னிரு துறைகளிலும் அவர் எத்தனையோ முறை பேசி வந்திருக்கின்றார்.

அவரிடம் நல்ல பழக்கம் ஒன்றிருக்கிறது. எந்தப் பொருளைப் பற்றி பேசுவதற்கு முன்பும் அப்பொருளைப் பற்றி முதலில் நினைத்துச் சிந்தித்துக் குறிப்பெடுத்துக் கொள்கிறார். பிறகு முன்னே பேச வேண்டியதை முன்னேயும் பின்னே மொழிய வேண்டியதைப் பின்னேயும் ஒழுங்காப் பிரித்துக்கொண்டு, வகைப்படுத்திக் கோவையாகப் பேசத் தொடங்குவது அவரது இயல்பு.

"முக்கால் மணி நேரப் பேச்சுக்கு எடுக்கும் குறிப்பு ஒரு அஞ்சல் அட்டையில் (Post-Card) அரை அட்டை அளவிற்குதான் இருக்க வேண்டும்" என்று திரு விசுவநாதம் ஓரிடத்தில் கூறியிருப்பதிலிருந்தே, அவர் எவ்வளவு தூரம் அளந்து பேசக்கூடியவர் என்பது நன்கு புலனாகும்.

'உண்மையைப் பேச வேண்டும். உழைத்துச் சிந்தித்துப் பேச வேண்டும். உணர்ச்சியோடு பேச வேண்டும். பயன்தரத்தக்க விதத்தில் பேசவேண்டும்' எனும் உயரிய நோக்கத்துடன், 'பேச்சினைக் கலையாகப்பேணிக் கருத்துடன் பயின்று முறைமை சிறந்து உலையாத ஆர்வத்துடன் ஊழியஞ் செய்யும் கர்ம வீரராக'ச் சென்ற, 33 ஆண்டுகளாக திரு. விசுவநாதம் அவர்கள் பலவிடங்களில் பல பொருள்கள் பற்றி ஒழுங்காகவும் அழகாகவும் பொறுப்பாகவும் பேசி வந்துள்ளார்.

ஒரு நல்ல பேச்சாளர்க்கு முதலில் கவர்ச்சிகரமான தோற்றம் இருக்கவேண்டும். கணீர் கணீர் என ஒலிக்கும் குரல் இருக்கவேண்டும். அவையை யறிந்து உள்ளத் துடிப்புடன் உணர்ச்சிகரமாகப் பேசும் ஆற்றல் இருக்க வேண்டும். ஆழ்ந்த கல்வி கேள்வி இருக்கவேண்டும். இந்த அளவுகள் இருந்தால்தான் ஒருவர் தொடர்ந்து பேச்சாளராகப் புகழ் பெற முடியும்.

விசுவநாதத்தின் நெடிய உருவமும், அழகான முகப் பொலிவும், அடலேறு போன்ற கம்பீரமான தோற்றமும், எவரையும் தம்பால் இழுக்கக்கூடிய பேராற்றலை அளிக்கின்றன.

அவரது குரலோ எடுப்பானது. அவர், 'கேட்டார் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்பமொழியும்' சொல்லாற்றலைப் பெற்றவர். அவர் மேடை ஏறிப் பேசினால், கருத்து வேற்றுமையுள்ள மக்களின் உள்ளங்களையும் மிக எளிதில் கவர்ந்து விடுவார். பேசத் தொடங்கினாலோ, சொற்கள் தட்டுப்படாமல் பெருக்கெடுத்து வரும். கருத்து ஒன்றையடுத்து மற்றொன்று சரளமாக வெளிவரும். ஒரு வாதத்தையடுத்து மற்றொன்று அடுக்காக வரும்.

விசுவநாதத்தின் பேச்சில் செந்தமிழும் கருத்தாழமும், உணர்ச்சியும் தொடர்ச்சியும் உயர்ந்த நகைச் சுவையும் 'களிநடம்' புரிகின்றன. அவரது எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் தனிவகையானது.

தமிழும், தமிழரும், தமிழ் நாடும் முன்னேற வேண்டு மென்ற பெரு நோக்கோடு பேச்சுத்தொண்டு புரிந்து வருபவர் நம் கி. ஆ. பெ. வி. அவர்கள்.

அவர் சைவப்பணி புரிந்தபோது சைவக் கூட்டம் திரட்டினர். அப்போது அவர் தன்மான இயக்கத்தில் சேராத காலம். அன்று அவர் எப்படிக் காட்சி அளித் தார் என்பதை, தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் படப் பிடிப்பினுல் பார்ப்போம்.

> " 1924-ம் ஆண்டு யான் தூத்துக்குடி நோக்கினேன் திருச்சிப் புகைவண்டி நிலயத்தில் கி. ஆ. பெ. விசுவ நாதனைக் கண்டேன். அவரது செழுமை கொழித்த இளமையும் நெற்றியில் நீரும், கழுத்தில் மணிமாலே யும் மலர்ந்த முகமும், கண்ணுக்கு இனிமையூட்டின. அவர் ஒரு துண்டு வெளியீட்டை நீட்டினர். அதை அங்கும் இங்கும் பார்த்தேன், அதன்கண் கிறிஸ் தவர் செய்யும் மதம் மாற்றத்தைப்பற்றிய மறுப்பு கள் மலிந்திருந்தன. சைவர்கள் என்ன செய்கிருர் கள் என்று கேட்டேன், சைவர்கள் திருச்சியில் செய்யும் வேலேகள் அவரால் விளக்கப்பட்டன. வண்டி புறப்பட்டது. மீண்டும் இளைஞரை தூத் துக்குடியிற் பார்த்தேன். மீண்டும் அவரால் துண்டு வெளியீடுகள் வழங்கப்பட்டன."

இப்படியாக விசுவநாதம் திருச்சியில் சைவத்தொண்டு ஆற்றி 30 ஆண்டுகளாயின. இதன் பிறகு அவர் நீதிக்கட்சியில் இடம்பெற்று, பின் தங்கியுள்ள சமுதாயம்

முன்னேற வேண்டுமென்ற உணர்ச்சியால் நீதிக்கட்சி அன்பர்களைச் சேர்த்தார். அடுத்து தென்னாடெங்கும் ஓர் பெரும் சூறாவளியைக் கிளப்பிய பெரியார் அவர்களால் காணப்பட்ட தன்மான இயக்கத்தில் பங்கு கொண்டு, தமிழ் நாடெங்கும் சுற்றித் தன்மானச் சொற்பொழிவுகள் செய்து, அர்த்தமற்ற சடங்குகளையும் அறிவுக்கு ஒவ்வாத கொள்கைகளையும், மனிதனை மனிதன் ஏய்த்துப் பிழைக்கும் சூழ்ச்சிகளையும், கைம்மைக் கோலத்தின் பரிதாபக் காட்சிகளையும் தம் பேச்சாற்றலினால் விளக்கி, அவை இன்று ஓரளவு குறைந்துள்ள சூழ்நிலை ஏற்பட, பெரிதும் உதவி புரிந்தார்.

அக்காலத்தில் திரு. விசுவநாதமே பெரியாரின் இடது கைபோல் எங்கும் உடன் சென்று வந்தவர். அன்று அவரே தன்மான இயக்கத்திலிருந்த மற்றவர்களைக் காட்டிலும் மிகுந்த புகழ் பெற்ற பேச்சாளராக விளங்கியவர்.

இதற்குப் பின்னர், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், சென்னை மாநிலத்தில் முதன் முறை முதலமைச்சரானபோது, கொண்டு வரப்பட்ட கட்டாய இந்தித் திணிப்பை, மறைமலையடிகளின் ஆராய்ச்சியுரைகளின் துணைகொண்டும் தமக்கிருந்த வாதத்திறமையினாலும் நாடெங்கும் சென்று பேசிக் கண்டித்தார்.

ஆச்சாரியாரை திருச்சியிலும் தர்மபுரியிலும் நேருக்கு நேர் சந்தித்து, பொது மொழியாவதற்கு இந்தியின் இலக்கிய இலக்கண சிறப்பற்றத் தன்மையை புட்டு விளக்கும் கேள்விகளை விசுவநாதம் எழுப்பி, ஆசாரியாரைத் திணற அடித்தார்.அத்துடன் நில்லாது, ஆச்சாரியார் இந்தியைஆதரித்துக்கூறும் காரணங்களுக்கும், குட்டிக் கதைகளுக்கும், உபமான உபமேயங்களுக்கும் விசுவநாதம் உடனுக்குடன் சொன்ன மாற்றுரைகளையும், கதைகளையும், உபமான உபமேயங்களையும் இன்று நினைத்துக் கொண்டாலும்

உடல் குலுங்க நகைக்கச் செய்கிறது! 'ஆச்சாரியார் ஒருவருக்குத்தான் குட்டிக் கதைகள், உபமானங்கள் சொல்லும் ஆற்றல் உண்டு; மற்றெவர்க்கும் அவை இல்லை' என்ற எண்ணத்தைத் தவிடு பொடியாக்கிவிட்டார் விசுவநாதம்.

இந்தி எதிர்ப்பு இயக்கமே விசுவநாதத்தின் முழு ஆற்றலை நாடறியச் செய்தது. இதனால் தமிழ்நாடு முழுவதும் அவரது பெயரும் புகழும் முன்னைவிட அதிகம் பரவ வாய்ப்பு ஏற்பட்டது.

அச்சமயம் அவர் ஆற்றிய தொண்டையும் காட்டிய வீரத்தையும், செயலாற்றிய திறனையும் கண்டு வியக்காதவர் இத்தமிழ் நாட்டில் கிடையாது.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் திருநெல்வேலி நகரத்தின் மேலவீதி மூலையில் திரு. விசுவநாதம் 'தமிழ்வாழ்க'என்று சொற்பொழிவு செய்தபோது எதிரிகள் ஒரு மணி நேரம் கல்வீசியதால் அவர் உடம்பில் ஏழு கல்லடிகளை வாங்க நேரிட்டது! என்றாலும் தம் முழக்கத்தை மீண்டும் எழுப்பினாரே அன்றி, நிறுத்திக் கொள்ளவில்லை.

எட்டயாபுரத்தில் பேராசிரியர், ச. சோமசுந்தரபாரதியார் தலைமையில் விசுவநாதம் இந்தி ஒழிப்புப் பிரசாரம் செய்து கொண்டிருந்தபோது, அவ்வூர் காங்கிரஸ்காரர்கள் 3 வண்டி கருங்கற்களை வாரி, வீசி, அடித்தார்கள். இதனால் தலைவருடைய மண்டை வீங்கியது. திரு. வி. யின் மண்டையில் இரத்தம் வழிந்தது. அதைத் துடைத்துக்கொண்டு 'தமிழ் வாழ்க'வென்று கூறினார். மேலும் பலாத்காரத்தில் இறங்கிய எதிரிகளை நோக்கி போலீசார் சுடமுற்பட்டபோது, அதைத் தடுத்து, 'அவர்களும் தமிழர்களே இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் அவர்கள் திருந்துவார்கள்' என்று கருணையுள்ளத்துடன் மொழிந்தார்.

மேற்சொன்ன நிகழ்ச்சிகளில் இருந்து கல்வீச்சு நேரிட்டாலும் அஞ்சாமல் பேசும் மனத்திண்மை படைத்தவர் விசுவநாதம் என்பது நன்றாகத் தெரிகிறது. எத்தகைய சிக்கலான பொருள்களையும் தமது நுண்மான் நுழைபுலத்தால் அலசியாராய்ந்து ஒன்று இரண்டு மூன்று என்று பாகுபடுத்தி மக்களுக்குத் தெளிவாக விளங்கும் வண்ணம் எளிதாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் திரு. வி. யிடம் நிரம்ப இருக்கின்றது.

இவரது பேச்சாற்றலை வியந்து பலர் பாராட்டியுள்ளார்கள். அவர்களில் சிலரது உரையைக் கவனிப்போம்:

"இவர் தமிழிலே தான் கற்றாரென்றாலும் இவருடைய பேச்சு சுருக்கத்திலோ கேலியிலோ. கவர்ச்சியிலோ, வாதத்திறனிலோ எந்த விதத்திலும் குறைந்ததன்று. தமிழில் அவர் ஒரு சிறந்த பேச்சாளர். ஒரு பொருளைப் பற்றி அவர் சொந்தமாகச் சிந்தித்து நல்லமுறையில் கவர்ச்சிகரமாகப் பேசும் ஆற்றலைக் காணும் பொழுது, நாம் பெரும் இன்பம் அடைகின்றோம்."

—நீல்கண் பெருமாள்.

"தமிழகத்தைத் தட்டி எழுப்பிய தலை சிறந்த தலைவர்களுள் திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலை சிறந்தவர் என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவருடைய பேச்சு தமிழகத்திற்கு அருமருந்தாக இருந்தது மாத்திரமல்ல, இன்றைய தலை சிறந்த பேச்சாளிகள் சிலரை உண்டாக்கியுமிருக்கிறது. இப்பெருமை அவரைச்சாரும்.

—ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

"சொற்களை அளந்து கருத்துக்களை நிரல்படக் கோர்த்து, பெருமித ஓசையோடு மேடைத் தோற்

றத்தைச் சிறக்கச் செய்து பேசும் ஆற்றல் சொல்லின் செல்வர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களிடம் காணப்படுகின்றது.''

—இரா. நெடுஞ்செழியன் (வானொலிப் பேச்சு)

''குட்டிப் பாரதியார் என்று சொல்லத் தக்கவாறு வெட்டிப் பேசும் பண்பை இயற்கையாகப் பெற்றவரும், நகைச்சுவையாலேயே மக்களை உரிமை கொண்டெழச் செய்பவரும், அடுக்கு மொழி சொல்லி சிரிக்க வழி செய்பவரும், வெளிப்படையாகச் சொல்லப் போனால் வீண்பேச்சும் ஆரவாரமும் இல்லாதபடி குறித்த நாளில் குறித்த நேரத்தில் குறித்த வேலைகளைப் பொறுப்போடு செய்ய வேண்டும், குறித்தபடி முடிக்க வேண்டும் என்றுங் கடமைப் பொறுப்புணர்வுக் கொள்கை உடையவரும் ஆகிய கி. ஆ. பெ. வி.

—மு. அண்ணல்தங்கோ

''கேட்பவர் பிணிக்கும் தகையவராய், கேளாரும் வெட்ப மொழியும் இந்நாவலர் பிறவியில் பேச்சாளி; சிறந்த எழுத்தாளர். நகைச்சுவை ததும்ப ஆழ்ந்த கருத்துக்களைக் கேட்பவர் அகத்தூன்றப் பேசி, இன்பமும் பயனும் ஒருங்கெய்த வைக்கும் திறம் நிறைந்தவர். பொருளற்ற சொல்லடுக்கும் புலவர் அல்லர். இகலாது வெல்லும் சொல்வல்ல வித்தகர். எளிமையும் இனிமையும் மிளிரவைக்கும் சொல்லின் செல்வர்.'' —ச. சோமசுந்தர பாரதியார்.

''தமிழகத்தில் உள்ள பேச்சாளர்களில் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், அறிவோடும் முறையோடும் பேசுகின்றவராவர். நன்றாகச் சிந்தித்த பின்பு, முறைப்படுத்திக்கொண்டு திட்ட

மிட்டு ஒழுங்காகவும் தொடர்ந்தும் பேசுகின்ருர். ஒரு வாதத்தை அடுத்து மற்ருென்று வெளிவருகின்றது. ஒரு கருத்துக்குப் பின் மற்ருெரு கருத்து வெளியாகின்றது. தம் சொற்கள் மீது கவனம் செலுத்துவதுடன் தம் கைக்கடியாரத்தின் மீதும் அவர் கவனம் செலுத்த என்றும் தவறியதில்லை. தமக்குக் கொடுத்த காலவரம்புக்கு மேல் ஒரு நிமிடமும் அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பாத அரிய சொற்பொழிவாளர்களில் இவரும் ஒருவர். இவர் பேசுவதற்கு முன்னுலேயே கூட்டத்தில் இன்ன இடத்தில் கைதட்டல் கிடைக்கும் என்பதைச் சரியாக உய்த்துணர்ந்து, அப்படிப்பட்ட சமயத்தைச் சோடா நீரைப் பருகுவதற்குப் பயன் படுத்திக் கொள்வார் என்று சொல்லப்படுகிறது.''

—தென்னிந்தியப் பேச்சாளர்

(சுதந்திரா–8-11-1947)

இவ்வாறெல்லாம் பலரால், பல கோணங்களில் இருந்து பார்த்துக் கேட்டுச் சிறப்பிக்கப்பட்ட விசுவநாதம் அவர்கள், தமிழகத்தின் மிகச்சிறந்த பேச்சாளர்களில் முன்னணியின் நிற்பவராவர். ஆறுமுக நாவலர், ஞானியாரடிகள், திரு. வி. க, நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழ்ப் பெருநாவலர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெருமையுடையவராக அவர் விளங்குகின்ருர்.

இதுவரை அவர் பல்லாயிரக்கணக்கான கூட்டங்களில் பேசி வந்திருக்கிருர். அப்படி பேசின பேச்சுக்களில் ஒரு சிலவே அச்சு வடிவம் பெற்றுள்ளன. வாெனலியில் மட்டும் அவர் சுமார் 20 பேச்சுக்கள் பேசியுள்ளார். அவரது பேச்சுக்கள் சில சென்னையில் பேசப்பட்டு திருச்சியிலும், திருச்சியில் பேசப்பட்டு சென்னையிலுமாக ஒலி

பரப்பப்பட்டிருக்கின்றன. அப்பேச்சுக்களில் சிலவற்றை கல்கத்தாவிலுள்ள பத்திரிகாசிரியர்கள் சிலர் கேட்டுத் தங்கள் ஆங்கில-இந்தி முதலிய தினசரிப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். பம்பாயிலுள்ள தமிழ்ப்பெரு மக்கள் பலர் பாராட்டியிருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன் 'வானொலி' பத்திரிகையில் அவரது படம் பெரிய அளவில் முகப்புப் படமாக வெளியிடப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

வானொலியில் அவர் பேசும் பேச்சுக்கள் பெரிதும் போராட்டப் பேச்சுக்களாகவே இருக்கும். அத்தகையவற்றுள் மூன்று குறிப்பிடத்தக்கன. அகில இந்திய பிராம்மண வர்ணாசிரம மாநாட்டுத் தலைவர் ஒருவருடன் 'சாதிமுறை ஒழிய வேண்டும்' என்று போராடினார். பிறகு அரசாங்க கல்லூரித் தலைவருடன் "மாணவர்களைக் கல்லூரியில் சேர்க்க தகுதியும் திறமையும் தேவையில்லை" என்று அழுத்தம் திருத்தமாக வாதாடியுள்ளார். காங்கிரஸ் கமிட்டித் தலைவருடன் 'கதர் உடை பயனற்றது, என்று சொற்போர் செய்துள்ளார். இவரது வானொலிப் பேச்சுக்களில் 7 கொண்ட முதற்பகுதி 'வானொலியிலே' என்ற பெயரில் வெளியிடப்பெற்றுள்ளது. அடுத்து இரண்டாவது பகுதி வெளிவர இருக்கிறது.

வானொலியில் அடுத்தடுத்து பேசிக்கொண்டிருந்த விசுவநாதம், இப்பொழுதெல்லாம் ஏன் அவ்வாறு பேசுவதில்லை என்று கேட்ட பொழுது, அவர் கூறிய விடை இதுதான் :

"வானொலி மூலமாக இந்தியைப் பரப்புவதும், ஜெய்ஹிந் சொல்வதும், வானொலி என்று சொல்வதைக்கூட வெட்கமாகக் கருதி 'ஆகாசவாணி' என்று சொல்வதும் நிறுத்தப்பட வேண்டுமென்று வானொலி நிலையத்தாருக்கு எழுதினேன். அவைகள் நிறுத்தப்படவில்லை! எவர்

எவருக்கோ விழா நடத்தும் வானொலி நிலையம் திருவள்ளுவரைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களிடமிருந்து வந்த பதிலில் இங்கு நடக்கிறவைகளுக்குத் தாங்கள் யாரும் பொறுப்பாளிகள் அல்லவென்றும், டில்லியிலிருந்து வருகிற சட்டப்படி தாங்கள் நடந்து தீரவேண்டியிருக்கிறதென்றும், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்பது அவர்களின் கட்டளை யென்றும் தெரிய வந்தது. 'குறைகள் ஒழிக்கப்படாதவரை பேச இயலாது என்றும், அப்படிப் பேசினால் உங்கள் தவறான செயல்களுக்கு உடந்தையாக இருந்த குற்றம் என்னையும் சாரும் என்று பொது மக்களால் கருதப்பட்டு விடும்' என்றும் கூறி மறுத்து விட்டேன்."

என்றாலும், ஆகாசவாணி என்று நாள்தோறும் சொல்லப்பட்டு வந்த ஒன்று, இப்பொழுது வாரத்தில் 6 நாட்களில் நிறுத்தப்பட்டு, ஞாயிறு இரவு 8 மணிக்கு மட்டும் சொல்லுகிற அளவுக்கு வந்திருக்கிறது. நமஸ்காரம் அழிக்கப்பட்டு வணக்கம் சொல்லும் முறை கையாளப்படுவது இவருடைய பெருமுயற்சியில் ஒன்றாகும். இந்த ஆண்டு திருவள்ளுவருக்கு விழா நடத்த ஒப்பி, இவரை அதில் கலந்துகொள்ள அவர்கள் நேரில் வந்து அழைத்தது மகிழ்ச்சிக்குரிய வெற்றியாகும்.

பொதுவாகத் தமிழ் நாட்டின் நடுவில், தமிழகத்தின் சிறந்த நகரமாகிய திருச்சியில் இருக்கிற ஒரு தமிழ் நாட்டு வானொலி நிலையம், தமிழ்ப்பற்றற்ற சிலரால், வட இந்தியர் தலைமையில் இந்திப் பிரசாரத்தோடும், தெலுங்குப் பாட்டுக்களோடும் நடைபெற்றுக் கொண்டிருப்பது தமிழுக்கும் தமிழர் நாட்டுக்கும் ஒரு பெரிய இழிவாகும் என்பது அவரது முடிவு.

'வள்ளுவர் உள்ளம்', 'வள்ளுவரும் குறளும்' என்ற இரண்டு சொற்பொழிவுகள், "குறளெனும் கடலில் குளித்

துச் சிறந்த அறிவெனும் முத்தை அள்ளிப் பிறர்க்கு— வழங்கும் பெரும!" என்றும், "செம்மைத்தமிழின் உண்மை உணரார்— திருந்தும் வகையில் பெரும்பணி புரியும் விசுவ நாத! வீறுடைச் செல்வ!" என்றும் புகழ்வதற்கு ஏற்ற எடுத்துக் காட்டாய் இலங்குகின்றன.

சிறந்த பேச்சாளராக மட்டும் அன்றி, சைவம் தமிழ், அரசியல், சீர்திருத்தம், வர்த்தகம், தொழில் ஆகிய ஆறு துறைகளிலும் திரு. விசுவநாதம் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பாக நடத்திவைத்த கூட்டங்கள் பல. தமிழ் நாட்டுமக்கள் ஏராளமான வரவேற்பு இதழ்களை அவருக்கு எளிய உரை நடையிலும் கவிதையிலுமாக எழுதி வழங்கி பெருமைப் படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மொழிக்குக் கெடுதல் ஏற்பட்டபோதும், தமிழ் இசைக்கு எதிர்ப்பு உண்டான போதும், தமிழர்களின் நல உரிமைக்கு அழிவு வேலை நடைபெற்ற போதும் அவைகளை ஒழிக்கச் சிங்கம்போல் முழங்கி, பகைவர்மீது பாய்ந்து அவர்களை விரட்டியடிக்க விசுவநாதம் இதுவரை தயங்கினதுமில்லை; இனி தயங்கப் போவதுமில்லை.

பொதுவாக திரு. வி. யின் இலக்கியப் பேச்சுகளில் அமைதி நிலவுவதைக் காணலாம். ஆராய்ச்சியுரைகளில் அறிவின் மேன்மையைப் பார்க்கலாம். போராட்டப் பேச்சுக்களில் இயல்பான அமைதி இடம்விட்டு நகர்ந்து, கொதிப்பு தலைதூக்கி நிற்கும். நாடகப்பேச்சில் நடிப்புத் தென்படும். நகைச்சுவையை அவரது புன்சிரிப்பிலும், கிண்டலையும் நையாண்டியையும் பேச்சின் இடையிடையேயும், நாம் கண்டு அறிந்து மகிழமுடிகிறது.

தமிழ் நாட்டிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமிய மேடைகளில் காலம் இடம் நேரம்—இவற்றை அனுசரித்து மாற்றாரையும் கவரக்கூடிய விதத்தில் பேசும்

திறமை படைத்தவர் விசுவநாதம் என்பதை நாடறிந்து இருக்கிறது. அவர் பொதுத் தொண்டில் முழுக்க முழுக்க இறங்கி பணியாற்றிக் கொண்டிருந்தபோது, நாட்டின் நாளா பக்கங்களிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான அழைப்புகளுக்குத் தட்டாமற் சென்று, பேச ஒத்துக் கொண்ட பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றி வந் திருக்கிறார். பிறகு அவர் பல விதக் காரணங்களினால் அரசியலில் இருந்து ஒதுங்கி நின்று, தம் வாணிபத்தின் மீதே பெரும் கவனம் செலுத்தி வரலானார். இப்பொழுதும் தமது அலுவல்கள் குறைந்திருக்கும் நேரத்தில், வந்த அழைப்புக்களை ஏற்று, ஒப்புக்கொண்டபடி குறித்த காலத்தில் குறித்த பொருள் பற்றி பேசும் வழக்க முடையவ ராகவே இருந்து வருகிறார்.

கூட்டத்திற்கு வருகிறதாகக் குறித்துவிட்டு, அன்பர் கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது போகாமல் ஏமாற்றும் வழக்கம், அன்றுமில்லை, இன்று மில்லை.

கடைசியாக, விசுவநாதம் பேச்சுத் துறையில் இறங் கியதால், தமிழ்ப் பேச்சு நடை முன்னைவிட எளிதாகவும் கவர்ச்சியுடையதாகவும் மாறியது. தமிழ்ப் புலவர்களுக்கே உரிய பேச்சு மேடை, தமிழில் ஆர்வமுள்ளவர்களுக்கும் உரியதாக ஆகியது. முன்னேரே குறித்தவாறு, தன்மான இயக்கத்தின் சிந்தனை, பேச்சு, தமிழ்—இவை யத்தனையும் விசுவநாதத்தின் நுழைவிற்குப் பிறகு சீர்திருந்தி, கொச்சையற்ற அழகு தமிழாய், ஆணித்தரமான பேச்சாய், பகைவர் மனதையும் மாற்றக்கூடிய ஆற்றலுடையதாய் ஆகியது. அதோடு மேடைத் தமிழ் வளர்ந்து, பண்டிதத் தமிழுக்கும் பாமரர் தமிழுக்கும் இடைப்பட்டதோர் திருப் பம் ஏற்பட்டது.

தென்னாட்டுப் பேச்சாளர்களில், திருச்சி விசுவநாதம் 'நாடறிந்த நாவலர்' என்பது பசுமலைப் பேராசிரியர் நாவலர் திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் கருத்து.

# 15. எழுத்துத் திறமை

## எழுத்தாளர்

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இப்பொழுது உள்ளதுபோல் இத்தனை பத்திரிகைகள் கிடையாது. ஒரு சில பத்திரிகைகளே செல்வாக்குப் பெற்றிருந்தன. அக்காலத்தில் "ஆனந்தபோதினி" எனும் பத்திரிகை தான் மிகச் சிறந்த இலக்கியப் பத்திரிகையாகப் பலரால் மதிக்கப்பட்டு, தமிழ் நாட்டின் கற்றவர் இல்லந்தோறும் பரவியிருந்தது. அதனால் அப்பத்திரிகைக்கு மிகுந்த மதிப்பும் செல்வாக்கும் இருந்து வந்தது.

அன்று அப்பத்திரிகையில் தமது கட்டுரைகள், கதைகள் இடம் பெற்றால், அதைப் பெறும் பேறாகக் கருதிய இளம் எழுத்தாளர்கள் எத்தனையோ பேர்! இத்தகையவர்களில் சிலர் எழுத்து சொந்தச் சரக்காக இருக்கும்; சிலர் தழுவி எழுதியிருப்பர்; சிலர் 'இலக்கியத் திருடு' செய்திருப்பர். இத்தனையும் நாளடைவில் வெளிப்படுத்தப் படவே, 'ஆனந்தபோதினி'யின் அக்கால ஆசிரியராயிருந்த ஆரணி. குப்புசாமி முதலியார், மிகுந்த எச்சரிக்கையுடன் கதைகளையும் கட்டுரைகளையும் பரிசீலனை செய்து, சிறந்ததை வெளியிட்டு வந்தார்.

'ஆனந்தபோதினி'க்குச் சொந்தக் கட்டுரைகள் எழுதி அனுப்பியவர்களில் திரு. விசுவநாதமும் ஒருவர்.

இவர் ஆரணி. குப்புசாமி முதலியாரைக் கட்டுரை எழுது வதற்கு ஒருமுன் மாதிரியாகக்கொண்டு, கட்டுரைகளை வரையத் தொடங்கியவர். இவர் எழுதிய முதல் கட்டுரை ‘இந்துமதத்தினர்க்கோர் எச்சரிக்கை!’ என்பதாகும். பிறகு, ‘ஆனந்தபோதினி’க்குத் தொடர்ந்து எழுதும் கட்டுரையா ளர்களில் ஒருவரானார் விசுவநாதம். தொடக்கக் கால முதற் கொண்டே அவருடைய கட்டுரையைப்படித்து இன்புற்றுப் பாராட்டியவர்கள் பலராவர். அவர்களில் ஒருவரான பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை (முன்னாள் விடுதலை ஆசிரியர்) அவர்களின் நற்சான்றைப் பார்ப் போம்.

“விசுவநாதம் கட்டுரைகளை நான் தொடர்ச்சியாகப் படித்ததுண்டு. அக்கட்டுரைகளின் தமிழ் நடையும் சொல்லழகும் எனது மனதைப் பெரிதும் கவர்ந்தன. அப் பொழுது நான் திருவனந்தபுரம் அர்ச்சு. சூசையப்பர் உயர் நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்தேன். ‘ஆனந்தபோதினி’யில் விசுவநாதம் எழுதும் கட்டுரை களைப் படித்துத் தமிழ் நடை பயிலவேண்டுமென்று நான் என் மாணவர்களுக்குச் சிபார்சு செய்தேன். அதன்படியே பல மாணவர்கள் படித்து நல்ல தமிழ்நடை கற்றுக்கொண் டார்கள்.”

இது ஒன்றே போதும், விசுவநாதத்தின் கட்டுரை எழுதும் திறமையைப் புலப்படுத்துவதற்கு,

நாளடைவில் ‘ஆனந்த போதினி’க்கும் விசுவநாதத் திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு வந்தது. அதன் ஆசிரியராக இருந்த ஆரணி: குப்புசாமி முதலியார் திடீ ரென இறந்தபோது, விசுவநாதம் உடனே திருச்சியி லிருந்து சென்னைக்கு வந்து இரண்டொரு மாதம் ஆசிரிய ராக இருந்து, மேற்சொன்ன பத்திரிகையைத் திறம்பட

நடத்தி வந்தார். பிறகு செம்பூர், வித்வான் வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களை ஆசிரியராக அமர்த்திவிட்டுத் திருச்சி திரும்பினார்.

'ஆனந்த போதி'னிக்கு கட்டுரை எழுதி வந்ததோடு, விசுவநாதம் நின்றுவிடவில்லை. தமிழ்ப் பெரியார் திரு.வி.க. நடத்தி வந்த "நவசக்தி"க்கும், காரைக்குடியிலிருந்து வெளிவந்த "குமரன்" பத்திரிகைக்கும், திருச்சியிலிருந்து வெளியிடப்பட்ட—சொ. முருகப்பாவை ஆசிரியராகக் கொண்ட—'சண்டமாருத'த்துக்கும் அவ்வப்பொழுது கட்டுரைகள் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

அவற்றுள் சில :

(1) தேவலோகம் சென்னையிலிருந்து 1001 மைல்!
(2) அச்சுப் பேய்
(3) கந்தப்பன் காதல்
(4) அம்மாயி கும்பிடுதல்
(5) வகுப்புத் துவேஷம்
(6) நான் கண்ட கனவு
(7) தேசபக்தி எது?
(8) கிழக்கும் மேற்கும்
(9) எது தமிழ் மரபு?
(10) இரந்து வாழும் வாழ்வு

என்பன.

இக்கட்டுரைகளில் பல இலக்கியச் சுவை மலிந்துள்ளவை; பல அனுபவ அறிவு செறிந்திருப்பவை; சில அரசியல் நுணுக்கம் மிக்கவை; சில சீர்த்திருத்தப் போக்குடையவை. இவையனைத்திலும் விசுவநாதத்துக்கே உரியகைச் சரக்குகள் ஏராளமாக இருப்பதைக் காணலாம்!

விசுவநாதத்தின் கட்டுரைகள் நன்கு சிந்தித்துக் கோவைப்படுத்தி எழுதப் படுவனவாகும். அவரது நடையில் பண்டிதத் தமிழும் பாமரர் தமிழும் இல்லை. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு தனி நடையாக அது இருக்கின்றது. அதை முழு மறுமலர்ச்சித் தமிழ் என்றும் சொல்லமுடியாது, பிறர்க்கு விளங்காத கடின சொல் காணக் கிடைப்பதும் மிக அருமை. அவரது எழுத்தில் ஆழ்ந்த சிந்தனையும் அச்சிந்தனையால் ஏற்பட்ட தெளிவும், அழகுபட விளக்கும் திறமையும், நகைச்சுவை முத்திரையும் ஒருங்கே காணப்படுகின்றன.

## பத்திரிகாசிரியர்

எழுத்துத் துறையில் பயிற்சிபெற்றதன் காரணமாகவும், நீதிக்கட்சியிலும், தன்மான இயக்கத்திலும் முன்னணி வீரராக இருந்ததாலும், பற்பல சந்தர்ப்பங்களில் பல பத்திரிகைகளுக்குத் தற்காலிக ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். சான்றாக, ஆனந்தபோதினி, சண்டமாருதம், விடுதலை ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் முறையே இறந்தும், நோயிலும், சிறையிலும் இருந்தபோது, அவற்றிற்குத் தலையங்கங்கள் எழுதித் தந்துள்ளார். மேலும் வகுப்புத் துவேஷம் என்ற குற்றஞ்சாற்றப்பட்டு 'விடுதலை'யின் ஆசிரியரும், பதிப்பாளரும் கைது செய்யப்பட்டபோது, 'எது வகுப்பு துவேஷம்' என்ற தலைப்பிட்டு ஒரு அருமையான தலையங்கம் எழுதியிருக்கிறார். அதிலிருந்து சிற்சில குறிப்புகளை மட்டும் தருகிறேன். படித்துச் சீர்தூக்கிப் பாருங்கள்.

> "தமிழர் இயக்கத்திற்கோ, இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கோ, சுயமரியாதை இயக்கத்திற்கோ, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திற்கோ இந்த நாட்டின் எந்த தனிப்பட்ட மனிதன் மீதோ தனிப்

பட்ட சமூகத்தின் மீதோ துவேஷங் கிடையாது. அதற்கு மாருக இந்நாட்டின் வகுப்பு வேற்றுமையும், ஜாதி வேற்றுமையும் பூண்டோடு ஒழிய வேண்டுமென்று சொல்வது மட்டுமில்லாமல் செய்கையிலும் செய்து காட்டி வருகிறது என்பதை இயக்கத்தைப் பற்றி சிறிது கேள்விப்பட்டவர்களும் கூட நன்கறிந்திருக்கலாம்."

* * *

"எதிரில் தன்னைப் போன்ற ஒரு மனிதன் நடந்து வருவதைக் கண்டு துள்ளிக் குதித்துப் பன்றியின் மீதோ, நாயின் மீதோ, சாணியின் மீதோ, சாக்காடையின் மீதோ தவறி விழுந்தாலும் விழலாம். ஒருவன் நடக்கும் பாதையில் அவன் மேல் படாமல் நடந்து போவதும் தவறு. 'தீண்டல்' என்ற மனப்பான்மை இன்றைக்கும் கூட இந்நாட்டின் உயர்ந்த வகுப்பார் என்று கருதிக் கொண்டிருக்கும் கூட்டத்தினிடம் காணப்பட்டு வருகிறது."

* * *

"ஒரு வகுப்பு ஒன்றைச் செய்கிறது. மற்ருெரு வகுப்பு 'இப்படிச் செய்கிருர்களே நியாயமா?' என்று கேட்கிறது. சொல்வதே குற்றமாகுமாளுல் செய்வது எவ்வளவு பெரிய குற்றமாகும். சொல்லாமலிருக்க வேண்டுமென்று விரும்பிளுல், செய்யாமலிருக்க வேண்டியதே புத்திசாலித்தனமாகும். 'நாங்கள் செய்வது வகுப்புத் துவேஷமல்ல. நாங்கள் செய்வதை நீ சொல்வதுதான் வகுப்புத் துவேஷமாகும். நாங்கள் செய்யத்தான் செய்வோம். நீ சொல்லத்தான் கூடாது.' என்று ஒருவன் கூறிளுல் அது நேர்மையாகுமா? அப்படிப்பட்ட ஒரு மனிதனிடம் ஒரு நாடும் கிடைத்து

அதை அவன் ஆட்சி செய்யவும் ஆரம்பித்துவிட்டால் அந்நாட்டு மக்களுடைய கதி என்னவாகும் என்பதை அறிஞர்கள் ஆலோசித்துப் பார்க்கட்டும்.

* * *

"தாழ்த்தப்பட்டு புண்பட்ட மனத்துடன் ஆறுதலற்று வாழும் பிற்போக்கடைந்த வகுப்புகளின் மனதை—நெஞ்சத்தை—உள்ளத்தையேனும் திருப்திப் படுத்த முன்னேற்றமடைந்த வகுப்புகள் முயற்சி செய்யட்டும். இதுவே வகுப்புத் துவேஷத்தை ஒழிக்க சிறந்த வழியாகும். அரசாங்கம் இதை ஏற்குமா?"

இது மட்டுமல்ல, இந்தி எதிர்ப்புக் காலத்தில் தம் பெயரிட்டு, 'விடுதலை'யில் விசுவநாதம் மூன்று தலையங்கங்கள் எழுதியிருக்கிறார். அத்தலையங்கங்களில் இன்னும் உயிர்த்துடிப்பு இருக்கின்றதைக் காணும்போது, அவரது சக்தி வாய்ந்த எழுத்தாற்றலையும், நிகழ்காலத்தில் மட்டுமல்ல எதிர் காலத்திலும் பயன் தரத்தக்க அறிவு சான்ற வாதங்களையும் அறிந்து வியப்படைவோம்.

இந்தி எதிர்ப்புக்குப்பின் விசுவநாதம் அரசியலில் பெரும்பங்கு கொள்ளாமல் ஒதுங்கி நின்று வருகிறார். ஆயினும் "தமிழ் நாடு தமிழர்க்கே" என்ற உயர்ந்த குறிக்கோளைத் தந்த தமிழர் கழகத்தை மீண்டும் புதுப்பித்து, தமிழகமெங்கும் அது இயங்க வேண்டுமென்று முயற்சிசெய்தார். அப்பொழுது காகிதக் கட்டுப்பாடு இருந்ததால், கழகத்திற்கென முதலில் ஒரு பத்திரிகை வெளியிட முடியவில்லை. அரசாங்கத்திடம் அனுமதி கிடைக்கும் வரையில் "தமிழர் நாடு" எனும் பெயரில் ஏழு வெளியீடுகள் கொண்டுவந்தார். அதன் முதல் வெளியீட்டில் தமிழ் நாட்டுப் பெருங்குடிமக்களுக்கு ஓர் அறிக்கை எழுதி

யிருந்தார். அவ்வறிக்கையின் முதற்பகுதியைப் பாருங் கள் :—

"தமிழ் நாட்டின் தலை எழுத்தை, தமிழ் மொழி யின் நிலையை, தமிழ் மக்களின் வாழ்வை, தமிழ் மக்களே கூடி முடிவு கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. தமிழ் நாட்டிற்கு என்று ஒரு இயக்கம் இல்லை. அறிவும் ஆற்றலும் படைத்த தமிழ்ப் பெருமக்கள் பலரும் ஒன்று கூடி வழி வகுக்காவிடில் வாழ வழியில்லை"—என்று அழுத் தந் திருத்தமாக அறிவித்திருந்தார்.

மேலும், 'ஆரியரோடும், வடநாட்டாரோடும் தமிழன் போரிட்டு உரிமை பெறவேண்டியிருக்கிறது, ஆந்திர நாட்டையும், மலையாள நாட்டையும், கன்னட நாட்டை யும் தமிழன் போரிட்டு ஆளமுடியாவிட்டாலும் ஆந்திர, மலையாள, கன்னடியர்களின் ஆதிக்கத்திலிருந்து தமிழ் நாட்டை விடுவிக்கவாவது போராட வேண்டியிருக்கிறது. இந்திய, கிறிஸ்தவ, மகமதிய தாழ்த்தப்பட்ட மக்கள் அனை வரையும் மொழியை முன்னிறுத்தித் தமிழர்களாக ஒன்று படுத்த வேண்டியிருக்கிறது' என்றும், 'தமிழ் நாடு தனி யாகப் பிரிக்கப்பெற்று, தமிழ் நாடு தமிழர்க்கே ஆகி, தமிழ் மக்களால், தமிழ் மொழியால் தமிழர் அரசு நடத்தி ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது' என்றும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். மற்றும் தமிழ் நாட்டுக்கு வழிகாட்டுபவர், தலைவர், துணைத்தலைவர்கள், 22 பிரிவுகளின் அமைச்சர்கள் ஆகியோரின் பெயரைக் குறிப்பிட்டுவிட்டு, தமிழ்நாட்டு ஆட்சிக் குழுவிற்கு பல பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தார். மேற்சொன்ன 22 பிரிவுகளுக்கு ஏற்ற ஆட்களைக் குறிப்பிட்டிருப்பதைக் கொண்டே, தக்கவர் களுக்குத் தக்க துறையில் அமைச்சு வேலையைக்

கொடுத்துத் திறம்பட ஆளவேண்டுமென்ற விசுவநாதத்தின் பேராவலை உணர்ந்து கொள்ளலாம். சான்ருக ஒரு சில கூறுகிறேன். தமிழர் ஆட்சியில் விஞ்ஞானத்தை ஜி. டி. நாயுடுவிடமும், தொழிலாளர் பகுதியை, ப. ஜீவானந்தமிடமும், பெண்கள் துறையை டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையாரிடமும், மருத்துவத்தை எஸ். எஸ். ஆனந்தத்திடமும், பயமில்லாமல் ஒப்படைக்கலாம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பே துணிந்து சொன்ஞர் விசுவநாதம். இன்று அவர் குறித்தவர்களில் எவரும் அவரவர்க்குத் தரப்பட்ட துறையை மிகத்திறமையுடன் கவனிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

திரு. வி. யின் ' தமிழர் நாடு " வெளியீட்டைப் படித்துப் பல தமிழ்த் தலைவர்கள் வரவேற்புத் தந்தார்கள், பாராட்டினர்கள். அவர்களில் மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனரின் பாராட்டுரையைக் கவனியுங்கள்.

> "திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை யான் நீண்ட நாட்களாக அறிவேன். அவர் தம் வேளாண்மை, தாளாண்மை, பயன் கருதா உழைப்பு, இன்னபிற என் உள்ளத்தைக் கவர்வதுண்டு. இப்பொழுது அணித்தே அவரால் வெளியிடப்பெற்ற " தமிழர் நாடு" எனது பார்வைக்கு வந்தது. அவரது தமிழ்ப்பற்றும், தமிழ் நாட்டுப் பற்றும் போற்றற்குரியன. அன்பர் விசுவநாதம் அவர்களின் முயற்சியால் தமிழ்நாடு ஒருமைப்படும் என்று நம்புகிறேன். ஒருமைப் பாட்டுக்குரிய செயல்கள் அவர்பால் முகிழ்க்கும் என்று எதிர்பார்க்கிறேன்.
>
> " ' தமிழ்நாடு தமிழர்க்கே " என்னும் கொள்கை ஆக்கமுறத்தக்க வாய்ப்பு இப்பொழுது நேர்ந்துள்ளது.

இவ் வாய்ப்பைத் தோழர் விசுவநாதம் அவர்கள் பயன்படுத்தி, நாட்டின் பண்டை எல்லைக்குப் பழுது நேராவண்ணம் காப்பாராக! "தமிழர் நாடு" வாழ்க! தோழர் முயற்சி வெல்க."

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும்,

"தென்னாடு முற்றும் திருந்திச் சிறப்பெய்திப்
பொன்னாடு போலப் பொலிந்திடவே—எந்நாளும்
நாடுபுக ழுந்'தமிழர் நாடெ'னுமிப் பத்திரிகை
நீடுலகில் வாழ்க நிலைத்து."

"ஆக்கமும் பேரறிவும் ஆண்மையும் செய்வினையில்
ஊக்கமும் மக்களிடை ஓங்கிடவே—நீக்கமற
நந்'தமிழர் நாடு' நலங்கண்டு தொண்டாற்றி
சந்ததமும் வாழ்க தழைத்து."

என வாழ்த்தினர்.

"தமிழர் நாடு" சிறு வெளியீடாக இருந்தாலும், அச்சிறிய வசதியைக்கொண்டு, தமிழகத்தில் தமிழர் கழகத்தைக் காண விசுவநாதம் தமது எழுத்தாற்றலைப் பயன்படுத்தினர்; தமிழர்களின் நல்லாதரவைக் கோரினர். 'தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் மதவேற்றுமைகளை மறந்து, ஜாதி வேற்றுமைகளை அழித்து, கட்சி வேற்றுமைகளை ஒழித்து, தமிழ் மொழியை முன் நிறுத்தி எல்லோரும் தமிழர்களாக ஒன்றுபட வேண்டும்" என பாடுபட்டார்.

இதன் பிறகு, தமிழர் கழகம் காணப்படவே, "தமிழர் நாடு" துண்டு வெளியீட்டிலிருந்து, 17-8-1947 முதல் கிழமை இதழாக வெளிவரத் தொடங்கியது.' திராவிடன்' ஆசிரியராக இருந்த திரு. ஜே. எஸ். கண்ணப்பரைப் பத்திரிகை நடத்துவதற்கு ஓர் எடுத்துக் காட்டாகக்கொண்ட அன்பர் விசுவநாதம், தமது சொந்தப் பத்திரிகையான "தமிழர் நாடு"வை மிகச் சிறப்புற சிலகாலம்வரை கிழமை இதழாக

நடத்தி வந்தார். பின்னர் அதைத் திங்கள் இதழாக மாற்றி, மேலும் சிலகாலம் அழகுற வெளியிட்டு வந்தார்.

"தமிழர் நாடு" துண்டு வெளியீட்டிலும், கிழமை, திங்கள் இதழ்களிலும் அவர் தந்த அறிவுக்கு உணவுகள், கற்றோரையும் காமுறச் செய்தன; தமிழ் மக்களின் மனதில் சிந்தனையைத் தூண்டின. அறிவுக்கு உணவோடு, தமிழ் மருந்து சம்பந்தமாகத் தமது அனுபவ உரைகளையும் வெளியிட்டு வந்தார். மாறுபட்ட கருத்துக்களை எடுத்துரைத்து அவைகளுக்கு மறுப்புரையும் தந்துள்ளார். இன்னும் இலக்கியம், இசை, பெண் மக்கள் என்ற பகுதிகளில் பல ரது கட்டுரைகளை வெளியிட்டார். இதற்குமுன் பிறரது பத்திரிகைக்கு கட்டுரைகளை எழுதிவந்த விசுவநாதம், 'தமிழர் நாடு' வெளிக்கொண்டு வந்ததற்குப் பிறகு, தமது பலவித வேலைகளுக்கிடையே, பத்திரிகைக்கு வேண்டிய தலையங்கம், கட்டுரைகள் எழுதுதல், நல்ல முறையில் தொகுத்து வெளியிடுதல், அச்சடித்தல், விற்பனையாளர் களுக்கு அனுப்புதல்—போன்ற இன்றியமையாத செயல் களையும் தாமே செய்ய வேண்டியவரானார்.

"தமிழர் நாடு"வில் வெளிவந்த தலையங்கங்களில் 'தட்டுங்கள் திறக்கப்படும்,' 'தமிழ் நாட்டில் இந்தி ஏன்?' 'செக்கிழுத்த தமிழன்,' 'எனது தோல்வி'—போன்றவை மிகவும் உள்ளத்தை உருக்கக் கூடியனவும், சிந்தனையை எழுப்புவனவும், சக்தி வாய்ந்தனவும் ஆகும்.

'தமிழர் நாடு'வில் வெளியிடப்பட்டுள்ள 'அறிவுக்கு உணவுகள்' அன்பர் சி. ர. பழனியாண்டியால் திரட்டப் பட்டு நூலாகியுள்ளது. இதே போல், தமிழ் மருந்துகள் புத்தகமாக்கப்பட்டுள்ளது. சிந்தனைச் செல்வம், உடற் செல்வம்போன்ற கட்டுரைகள் "ஐந்து செல்வங்கள்"

என்ற பெயரில் நூல்வடிவாக்கப்பட்டுள்ளது. திரு.வி. யால் "தமிழர் நாடு"வில் வரையப்பட்ட நான்கு தலைவர்கள், மூன்று தலைவர்கள் என்ற எழுத்தோவியங்கள் அடுத்து 'எனது நண்பர்கள்' என்ற பெயரில் நூலாக வெளிவர இருக்கின்றது. தம் பத்திரிகையில் மட்டுமன்றி, "அமுதசுரபி" என்ற மாதப் பத்திரிகையிலும் திரு. வி. தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். அவைகளும் நூலாக்கப்பட்டுள்ளன. மேலும் 'திராவிடன்', 'கிளர்ச்சி', 'தனியரசு' போன்ற திராவிட இயக்கப் பத்திரிகையாசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, தம் கொள்கையைத் தெரிவிக்கும் கட்டுரைகளை எழுதி உதவியிருக்கிறார்.

இவைகளை யெல்லாம் கவனிக்கும்பொழுது வர்த்தகம், பயிர்த்தொழில், குடும்பம், அரசியல், பிரயாணம் பேச்சு போன்ற பலதுறைகளை அன்றாடம் கவனிக்க வேண்டிய நெருக்கடிக்குள்ளாகியுள்ள அன்பர் விசுவநாதம், எப்படித்தான் ஆர அமரச் சிந்தித்து தெளிவாகக் கட்டுரைகளையும் உரையாடல்களையும் எழுதினாரோ என்று மலைக்க வேண்டியிருக்கிறது!

## நூலாசிரியர்

எழுத்தாளர், பேச்சாளர் பத்திரிகாசிரியர் என்பதோடு விசுவநாதம் நூலாசிரியராகவும் புகழ் பெற்று விளங்குகின்றார்.

முதன்முதலாக அவருடைய பேச்சுக்கள்தாம் நூலாகும் வாய்ப்பைப் பெற்றன.

தஞ்சையில், திரு. விசுவநாதம், காலஞ்சென்ற பேரறிஞர் சி. பா. ய. சுரேந்திர நாத ஒகளி ஆரியா அவர்களின் நினைவின் அறிகுறியாக 'ஆரியா வாசகசாலை'யை 30-11-1930-ல் திறந்துவைத்து பேசிய பேச்சு 'சொற்

பொழுது' என்ற தலைப்பில் மேற்சொன்ன படிப்பகத்தா ராலேயே (1946) அச்சிடப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த படியாக, திருச்சி வானொலியில் கி. ஆ. பெ. விசுவநாதம் 'ஜாதிமுறை'யைப் பற்றிய பேச்சு "ஜாதிமுறை" என்ற தலைப்பில் கதம்ப நிலையத்தாரால் வெளியிடப்பட்டது. பின்பு சென்னைத் தமிழர் பதிப்பகத்தாரால் திரு. வி. யின் ஏழு வானொலிப் பேச்சுக்களைக் கொண்ட "வானொலியிலே" என்ற நூல் மிகவும் கவர்ச்சியான முறையில் வெளியிடப் பெற்றது. "வானொலியிலே" அடுத்து, 'சகிப்பு வேண்டும் சமூகத்தில்' என்ற நூல் கதம்ப நிலையத்தாரால் வெளிக் கொண்டு வரப்பட்டது. இச்சிறு நூலைத் தொடர்ந்து "வள்ளுவர் உள்ளம்" என்ற தலைப்பில் பொன்மலை திருக் குறள் கழகத்தாரால் திரு. வி. பேசிய அரிய பேச்சு அச்சு வடிவம் தரப்பட்டிருக்கிறது. இன்னும் சென்னைப் பாரி நிலையத்தாரால் ஐந்து செல்வங்கள், மும்மணிகள், தமிழ் மருந்துகள், எண்ணக்குவியல், அறிவுக்கு உணவு, திருக்குறள் புதையல், எனது நண்பர்கள் போன்ற நூல்கள் சிறப்பாக வெளியிடப் பெற்றுள்ளன. வள்ளுவரும் குறளும் என்ற தலைப்பில் திரு. வி. பேசிய பேச்சு அறிஞர், ஜி. டி. நாயுடு வால் ஒலிப்பதிவு செய்யப்பெற்று, பின்னர் அது கோவை வள்ளுவர் படிப்பகத்தால் வெளியிடப் பெற்றுள்ளது.

## நாடக ஆசிரியர்

திரு. வி. யிடம் மறைந்து கிடந்த நடிப்புப் புலமையும், இசைப்புலமையும் வெளிவரக்கூடிய வாய்ப்பை மதுரை முத்தமிழ் மாநாடும், ஈரோடு நாடக முன்னேற்ற மாநாடும் உண்டாக்கித் தந்ததால், 'இசை' 'நடிப்பு'—பற்றி முத் தமிழ் மாநாட்டு மலரிலும், நாடக முன்னேற்ற மாநாட்டு மலரில் "நாடகத்"தைப் பற்றியும் திரு. வி. பேசிய பேச்சுக் கள் வெளியாகியுள்ளன.

மேலும் 'முத்தமிழ்ப் புலவ'ரான டி. கே. எஸ். சகோதரர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, திரு. விசுவநாதம் அவர்கள் "தமிழ்ச் செல்வம்" எனும் கருத்தாழமிக்க அரிய நாடகத்தை எழுதித் தந்துள்ளார். அந்நாடகம் வானொலியிலும், நாடக அரங்குகளிலும் பலமுறை நடித்துக் காண்பிக்கப்பட்டு, பல அறிஞர் பெருமக்களின் பாராட்டுரையைப் பெற்றுள்ளது. மாறுபட்ட கருத்துடைய திரு. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி கூட 'தமிழ்ச் செல்வ'த்தை இருமுறை கண்டு அனுபவித்து மகிழ்ந்து சென்றிருக்கிறாரென்றால் வேறு நான் என்ன சொல்லவேண்டும்! 'தமிழ்ச்செல்வம்' திரு. வி. யின் முதல் நாடகம் என்றாலும் அது அவரிடம் மண்டிக் கிடந்த நாடகப் பண்பை உலகறியச் செய்திருக்கிறது. இந்நாடகத்தைச் சென்னைப் பாரி நிலயத்தார் அழகுற அச்சியற்றி வெளிக்கொணர முயற்சித்து வருகிறார்கள்.

திருச்சியில் கலைக்கழகம் ஒன்று 20 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதற்கு திரு. வி. 19 ஆண்டுகளாகத் தலைவராக இருந்து வருகிறார். பல நாடகங்களை நடத்தியும், சில நாடகங்களில் நடித்தும் வந்திருக்கிறார். திரு. என். எஸ். கிருஷ்ணனுக்கு நகைச்சுவை மன்னர் என்ற பட்டம் வழங்கியதும் இக்கலைக் கழகமே. இழந்த காதல் என்ற நாடகம் இக்கலைக் கழகத்துடையதே. இது நிழற்படமாக எடுக்கப் பெற்றுள்ளது. திரு. எம். ஆர். இராதா நடித்துவரும் விமலா அல்லது விதவையின் கண்ணீர் என்னும் நாடகமும் இக்கலைக் கழகத்தாரால் எழுதப் பெற்று, நடிக்கப் பெற்றதாகும். இக்கலைக்கழகத்தினர் மதுரை, இராமநாதபுரம், கோவை, தஞ்சை முதலிய வெளியூர்களுக்கும் சென்று நாடகங்களை நடத்தி வந்திருக்கின்றனர்.

சில இளம் நடிப்புப் புலவர்களையும், இசைப் புலவர்களையும் இக்கலைக் கழகம் அரங்கேற்றி தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்தி வைத்து நற்றொண்டு செய்திருக்கிறது. இவர்களில் மதுரை-சோமசுந்தம், திருச்சி-லோகநாதன், எம். எம். மாரியப்பா, திருக்கோவிலூர்-அலமேலு முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். திரு. எம். கே. தியாகராஜ பாகவதருக்கு இசை மன்னர் என்ற பட்டம் வழங்கியதும் இக்கலைக் கழகமே.

திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் இந்தி எதிர்ப்பு நிதிக்கு பொருளுதவி செய்ய, சென்னையில் ஒரு இசை அரங்கை நடத்திய பொழுதுதான் அவருக்கு திரு. வி. காலஞ்சென்ற ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் இசை அரசு என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டினர். அப்போது, திரு. வி. சென்னை மாகாண தமிழர் கழக அமைச்சராக இருந்தார். இவ்வாறு இசைக்கலைக்கும் நடிப்புக் கலைக்கும் அவர் செய்துவந்த தொண்டுகள் பல.

இவைகளே யன்றி பல ஆண்டு மலர்களில் பலவேறு கருத்துக்களுடைய திரு. வி. யின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டு எப்பொழுதும் புதுமை உடையனவாக இலங்குகின்றன.

கடைசியாக, திரு. விசுவநாதத்தின் எழுத்தும் பேச்சும் சிறப்பாகத் தமிழரையும், பொதுவாக மக்கள் சமுதாயத்தையும் நல்லவழியில் செல்லும்படி வழிகாட்டக்கூடிய அறிவு விளக்குகள் என்று கூறலாம். அவருடைய எண்ணம்—நிறைந்த கல்வி, கேள்வி, அனுபவத்திலிருந்து எழுகிறது. ஆகவேதான், அவர் பேசியதும், எழுதியதும் பல நாளாகியும்கூட, என்றும் பயன்தரக்கூடியதாய் உள்ளன. அது கெட்டி முத்தே அன்றி போல் அன்று. அழுத்தமான மணியே அன்றி, காற்றில் பறந்துவிடும் பதர் அல்ல. என

வேதான், அவரது நூல்கள் பல பதிப்புக்களாக வெளி வந்துகொண்டிருக்கின்றன. தமிழ் எழுத்தாளர் உலகில் —நூலாசிரியர் இடையில்—திருச்சி விசுவநாதத்திற்கு ஒரு நல்ல இடம் உண்டு என்பதை இன்றைய உலகமே உணர்ந்துகொண்டிருக்கிறது. இனி வருங்காலத்தில் அவருக்கு ஏற்பட இருக்கும் செல்வாக்கை அதிகமாகக் கூற நான் யார்? அத்தீர்ப்பு வழங்க வருங்காலத்தவர்க்குத் தானே உரிமை உண்டு?

# 16. குண நலன்கள்

கி. ஆ. பெ. விசுவநாதத்திடம் இயல்பாகக் காணப் படும் பல பண்புகள் பிறரால் போற்றிப் பின்பற்றக் கூடியனவாக உள்ளன. அவைகளை அறிந்து இன்புறு வோம்.

## கவர்ச்சியான தோற்றம்

திரு. வி. யைப் பார்க்கும்பொழுதே ஒரு தனியான கவர்ச்சி ஏற்படுகின்றது. அவர் கம்பீரமான தோற்ற முடையவர். சுமார் 6 அடி உயரமுள்ளவர். அவரது உயர்ந்த உருவத்திற்கு அழகு செய்வதைப்போல பொன் னிற மூக்குக் கண்ணாடி மின்னிக்கொண்டிருக்கின்றது. அவர் எப்பொழுதும் மெல்லிய 'மஸ்லீன்' ஆடையைப் பயன் படுத்துகிறார். நீண்டசொக்காயும், கீழ்ப்பாச்சு கட்டிய வேட்டியும், தோளில் பட்டுத்துண்டும் அணிந்து வருவது, அவரது செந்நிற உடலை மேலும் கவர்ச்சிப் படுத்துகிறது. அவரது கை விரல்களில் மோதிரங்கள் ஒளி விட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் மயில் போன்ற சாயலை

உடையவர். எடுப்பான குரலைப் பெற்றிருப்பவர். அவரைப் பார்த்தால் 55 ஆண்டுகள் கடந்தவராகத் தெரியாது. இளமையில் அவர் செய்த உடற்பயிற்சி, உணவில் 'அற்றால் அளவறிந்து உண்ணும்' தன்மை, குடும்பத்தில் சிக்கலின்மை, இவை யத்தனையும் அவரை உடற்கட்டு வாய்ந்தவராகச் செய்திருக்கின்றன.

ஆகவேதான், அவர் மூன்று முறை திருமணஞ் செய்து கொண்டு, பதினைந்து பிள்ளைகளுக்குத் தந்தையாகியும், அவரது முகத்தில் இன்னும் இளமைக்கூறு மறையாமல் இருந்து கொண்டிருக்கிறது!

## சிந்தனையாளர்

போதிய கல்வி அறிவினாலும், நிறைந்த அனுபவத்தினாலும், குடும்ப அமைதியினாலும், வாழ்க்கை வசதியினாலும் திரு. வி. யால் நன்கு சிந்தித்து நல்லமுடிவுக்கு வர முடிகிறது. அவரது தெளிந்த சிந்தனையிலிருந்து தெறித்த நன்முத்துக்களை, அவரது ஒவ்வொரு பேச்சிலிருந்தும் எழுத்திலிருந்தும் நாம் கண்டு இன்புறலாம். 'அறிவுக்கு உணவும்', 'ஐந்து செல்வங்களும்' இதற்கு நற்சான்றுகளாக உள்ளன.

## தமிழ்ப்பற்று

உலகின் மிகப்பழமையான மொழியும் உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றுமான தமிழ்மொழி மீது விசுவநாதத்திற்கு அடங்காக்காதல் உண்டு. வள்ளுவர், இளங்கோ போன்ற பண்டைச் சான்றோர்களிடமும், மறைமலையடிகள், ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. வி. க., ச. சோ. பாரதியார் போன்ற பெரும்புலவர்களிடமும், பாரதியார், பாரதிதாசன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போன்ற தற்காலக் கவிஞர்களிடமும் அவருக்குப் பெரும் பற்றிருக்கிறது.

மேலும், இரண்டரை லட்சம் சதுர மைல் நிலப்பரப்பும், முப்புறமும் அலைகடலும் எழுநூறு மைல் நீளம் கடற்கரையும் கொண்ட தமிழகத்திலுள்ள மூன்று கோடி தமிழர்கள் இன்னும் சரியான அரசியல், சமுதாயம், பொருளாதார, விழிப்புணர்ச்சி பெறமல், அடிமை போல் வாழ்வதைக் கண்டு, அவர் நீதியா, முறையா என்று உளம் கொதித்துக் குமுறுகின்றார்.

"தமிழா நீ மறந்து கிடக்கிறாய்! நீ தரணியாண்டவன்! பழங்கால நிலையை எண்ணியாவது விழி! எழு! வீறு கோள்! வெற்றிமுழக்கம் செய்!" என்று பண்டைப் பெருமையை நினைவுபடுத்தி, "தமிழைப் பழிப்பவனைப் பழி! தமிழனைப் பழிப்பவனை ஒழி! தமிழ் நாட்டைப் பழிப்பவனை அழி!" என்று இழந்த உரிமையைப் பெறவேண்டுமென்று கனல் கக்குகிறார்.

## இசைப் புலமை

அவருக்கு நல்ல இசைப் புலமை உண்டு. திருவனந்தபுரம் தி. இலக்குமணப் பிள்ளையிடம் இசையறிவு பெற்றவர். ஆகவேதான் தமிழ் நாட்டில் தமிழ் இசை இயக்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டபோது, தமிழ் இசைப் பெருமை குறித்தும், இலக்கியங்களைப் பற்றியும் நன்கு விளக்கிக் கூறி, எதிரிகளின் உளுத்த வாதங்களை ஒன்றுக்கும் உதவாததாகச் செய்தார். இந்த வகையில் தமிழிசைக்காக அவர் ஆற்றிய தொண்டு கண்டு தமிழகம் நன்றி செலுத்தியிருக்கிறது.

மனநிறைவும், ஆழ்ந்து சிந்திக்கும் அறிவும், இசைப் புலமையும் ஒருங்கே பெற்றிருக்கும் விசுவநாதம் சில சமயங்களில் கவிதைகள் புனைவதுண்டு. இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது திரு. வி. இட்டுக் கட்டிய பாட்டுக்கள்

நாடு முழுவதும் பாடப்பட்டு, தமிழ் மக்கள் உள்ளத்தில் இந்தியை எதிர்த்துத் தீர வேண்டும் என்ற உணர்ச்சியை கொழுந்து விட்டெரியச் செய்தன.

அக்காலத்தில் 'விடுதலை'யில் வந்த பாட்டு ஒன்றை மட்டும் இச்சமயத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

## எழுந்திரு! எழுந்திரு!!

1

தமிழ் மகனே! தமிழ் மகனே!! தமிழ் மகனே!!!
தமிழா உன் தோள் வலிமை தரணியெல்லாம் அறியாதா!
தமிழ் மொழியைக் கொலை புரிந்து தாழ்வடைந்து
வாழ்வாயா?
தமிழ்த்தாயின் தனிக்கொடியைத் தாங்கி
உயர்த்தலாகாதா?
தமிழ் நாடு தமிழர்க்கே என்றுரைக்க லாகாதா?

2

உறக்கமா? உறக்கமா? உறக்கமா?
கட்டாய இந்திதனைக் கண்டதுண்ட மாக்காயா?
காங்கிரசின் கொடுஞ்செயலைக் கண்விழித்துப் பாராயா!
அடக்குமுறை ஆட்சிதனை அடக்கி வைக்கலாகாதா?
இடக்குச் செய்யும் காங்கிரசை எதிர்த்தொழிக்கலாகாதா!

3

எழுந்திரு! அன்பனே!! எழுந்திரு!
நெல்லுக் குற்றும் ஜெயில் கொடுமை நீ நினைத்துப்
பாராயா!

புல்லுருவி மாந்தருக்குப் புத்தி சொல்லலாகாதா!
ஒன்பது நூற்றாண்டு உறங்கியது போதாதா!
விழிப்படைய நினைந்து விட்டால் வெற்றி யுனதாகாதா?
தமிழ் மகனே! தமிழ் நாடு!! தமிழருக்கே!!!

[இது தக்ஷயக்ஞத்தில் ராஜகுரு பாடிய 'பவானி' வர்ண மெட்டை ஒட்டிப் பாடப்பட்டது.]

இப்பாட்டின் சிலபகுதிகள் இன்றும் இதைக் கேட்டவர் மனதிலிருந்து மறையாமல் ரீங்காரம் செய்துகொண்டே யிருக்கின்றன என்பதைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இன்னும், அவர் 'தமிழன்', 'தமிழ் உலகம்' என்ற இரு பத்திரிகைகளுக்கும் எழுதியனுப்பிய பொங்கல் வாழ்த்துக் கவிதைகளும், தமிழ் நாட்டுக் கிளிக்கண்ணியும் ஆரணி குப்புசாமி முதலியார், மறைமலையடிகள், காந்தியடிகள் போன்ற பெரியோர் இறந்தபோது அவர் பாடிய இரங்கற் பாக்களும் அவரது கவிதை உள்ளத்தைக் காண்பிக்கின்றன.

## அஞ்சாமை

ஒருவரை அளவுக்கு மீறிப் புகழும் வழக்கம் அவரிடம் கிடையாது. கருத்து வேற்றுமை எழும்போது அதை ஒளிவு மறைவின்றி, பிறர்க்காக அஞ்சாமல் எடுத்துக் கூறும் தனிப் பண்பு அவரிடம் காணக்கிடக்கின்றது. இதில் நண்பர், பகைவர் என்று ஒருதலைச் சார்பாக அவர் எப்பொழுதும் நடந்து கொண்டதில்லை. அவருடன் நன்கு பழகியவர்களே இக்குணத்தை அறிந்து புகழ்கின்றனர்.

அவரது களங்கமற்ற, பாராட்டத்தக்க மன உறுதியை எவ்வளவு போற்றினாலும் தகும். இந்தி

எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது இவருக்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல், கொண்ட கொள் கைக்காகக் கல்லால் அடிக்கப்பட்டு இரத்தம் வழிவதைக் கண்டும் பயப்படாமல் தொடர்ந்து பேசிய நிகழ்ச்சிகளே அவரது அஞ்சாமைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக இலங்குகின்றன, அவரைப் போன்ற தீரர்கள் எந்த இயக்கத்திற்கும் சிறந்த அணிகலனாக இருப்பர் என்பது எப்போதும் உண்மையாக இருக்கும்.

## நேர்மையாளர்

சிலர் அரசியல் வாழ்வை, சொந்த வாழ்வின் ஏற்றத் திற்காகப் பயன்படுத்திவருவது அவருக்குப் பிடிப்பதில்லை. பொது வாழ்வில் இறங்குவோர், தமது கொள்கைகளின்படி நடக்க வேண்டுமே தவிர, அதற்கு எதிரிடையாகச் சொல் லும் செயலும் இருக்கக்கூடாது என்று அவர் கருதுகிறார். ஆகவேதான், அவர் முழுக்க முழுக்க பொது வாழ்வில் ஈடு படாமல், தமது வாணிபத்தைக் கவனித்துக்கொண்டு எஞ் சிய நேரத்தில்தான் பொதுப் பணியில் கலந்துகொள்கிறார். இதனாலே அவர் பெரும் தலைவராக ஆகமுடியாத நிலையில் உள்ளார். இதற்காக அவர் கவலைப்படுவதில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம் பொதுவாழ்வைத் தமது சொந்தப் பிழைப்புக்காகப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான்.

அதோடு அவர் கருத்து வேற்றுமைக்கு இடம் தரு பவர். மாற்றாரிலும் மதிக்கத் தக்கவர் இருக்கிறார்கள் என்று உணர்பவர். ஆகவே அவர் பெருமைதந்து பெருமை பெறுகிறார்.

## காலந் தவறாமை

விசுவநாதத்திடம் நாம் அறியக்கூடிய மற்றொரு சிறந்த பண்பு காலந் தவறாமை. கூட்டத்திற்குப் பேச ஒத்துக்

கொண்டால், குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று, கொடுத்த பொருள்பற்றி, காலவரம்பிற்குள்ளே அமைப்பாகப் பேசிவிட்டு வருபவர். அவர் பேசும் போது மக்கள் எப்படி தமது கருத்தை வரவேற்கிறார்கள் என்பதைக் குறிப்பால் அறிந்து கொள்வார். அதே சமயத்தில் தம் கையில் அணிந்துள்ள கடியாரத்தின் முள் காட்டியின்மீதும் கவனம் செல்லும்! இதிலிருந்தே அவரது போக்கை அறியலாம்.

அவரது தொழில் நிலயத்தில் அவருக்குப் பின்னல் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு அட்டையில், "தயவு செய்து தாங்கள் வந்த வேலைகளை இரண்டு நிமிடங்களுக்குள் பேசி முடித்துக்கொண்டு போகுமாறு வேண்டுகிறேன்" என்று எழுதப் பெற்றிருப்பதைக் கண்டு பலர் திடுக்கிட்டுப் போவதுண்டு.

ஒரு சமயம் திருச்சி 'டிப்டி கலெக்டர்' ஒருவர் திரு. வி.யை மாலை நாலரை மணிக்கு வீட்டில் இருப்பாரா என்று கேட்டுவரச்சொல்லியிருந்தார். திரு. வி. இருப்பதாக ஒப்புக் கொண்டார். நாலு நாற்பதுவரைக் காத்திருந்தும் டிப்டி கலெக்டர் வராததால் திரு. வி. தம் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டார். ஐந்து மணிக்குக் காலம் கடந்து வந்த அதிகாரி வெட்கித் திரும்பினர்.

அன்றாட வேலைகளை அன்றே முடிப்பதும், அவரது இயற்கையான பண்பு! அது ஓரளவு யந்திர ஓட்டம் போல் தோன்றினாலும், காலத்தின் சிறப்பை உணர்ந்தவர்க்கு அது மிகவும் அவசியம் என்பது கருதத் தக்கது.

## நல்ல வாணிபர்

விசுநாதம் பிறர் கையை எதிர்பாராமல் தம் கையே தமக்குதவி என்றபடி, வாணிபம் நடத்தி வருகிறார். அதில் குறைந்த விலைக்கு மட்டச் சரக்குகளை வாங்கி, மிகுந்த

விலைக்கு விற்கும் பேராசைக் குணம் அவரிடம் இல்லை. அவர், தாம் வெளிநாடு சென்றிருந்தபோது, மலேயாவில் கண்ட உயர்ந்த வாணிப முறையை மேற்கொண்டிருக்கிறார். இதன்படி உயர்ந்த பொருளை வாங்கி, அதிக விலைக்கே விற்று வருகின்றார். விலை உயர்வு என்றாலும் பொருள் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையால், வெளியூர்களிலிருந்தும் உள்ளூர்களிலிருந்தும் இவரது சரக்குக்கு ஏராளமான தேவை ஏற்பட்டிருக்கின்றது. இதனாலேயே அவரது வியாபாரம் செழித்து புகழ்பெற்று வருகிறது.

அவர் வாணிபத்தில் கண்டிப்புள்ளவர். ஆகவே காட்டுவது ஒன்று கொடுப்பது மற்றொன்று என்ற சூழ்ச்சியின்றி, கேட்ட பொருளைச் சொன்ன விலைக்கே தரும் கண்டிப்பான குணம் படைத்தவராக இருக்கிறார். பொய் என்றும் அவரிடம் இல்லாமையினாலேயே நாணயக்காரர் என்ற சிறப்பைப் பெற்றிலங்குகிறார்.

அவர் குடும்பத்தில்—வாழ்க்கையில்—பொது வாழ்வில்—அரசியலில்—நேர்மையை விரும்புவர். அவரிடம் சொல்வது ஒன்று, செய்வது வேறு என்பது கிடையாது. எது சரியென்று தமக்குப் படுகிறதோ அதைத் துணிந்து சொல்கிறார். ஆகவே தான், பொய் பேசுவர்களையும், தவறு செய்பவர்களையும் வெறுக்கிறார். அவரது நேர்மையில் கருத்து வேற்றுமையுள்ளவர்களுக்கும் ஐயம் ஏற்படுவதில்லை.

அவர் ஒரு வணிகர், நீதிக் கட்சி யன்பர்: தன்மான இயக்கத்தைச் சேர்ந்தவர்; தமிழ்ப் பற்றுடையவர். இன்னும் ஒருபடி அதிகமாகச் சொல்லப் போனால் "ஒழுக்கம் விழுப்பம் தருதலால்—ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனும் குறள்வாக்குக்கு ஏற்ப நடக்கும் ஒரு ஒழுக்கசீலர்.

## பழமை பேணுபவர்

சீர்திருத்தக்காரராகிய திரு. விசுவநாதம் பழமையையும் போற்றிப் பேணுகிறார். அவர் குடியிருக்கும் வீடு நூற்றி இருபது ஆண்டு பழமையானது. நான்கு தலைமுறைகளாக அவர் குடும்பத்தினர் வாழ்ந்து வருவது. அவ்வீட்டின் ஆதரவு, ஈடு, ஒத்தி, கிரயம் என இத்தனை ஆண்டுகளாகப் பதிவு நிலையத்துக்குப் போகவில்லை. இத்தகைய பழமையான வீட்டில் இருந்து கொண்டிருப்பதுடன் பழம் பொருள்களை வைத்துக் காப்பாற்றுவதிலும் அவர் தேர்ந்தவராக இருக்கின்றார்.

அவர் இன்றும் கணக்கெழுதி வருகின்ற கற்பலகை (Slate) நாற்பத்தி நான்கு ஆண்டுகளுக்குமுன் வாங்கியது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாங்கிய எழுத்தாணியும் படித்த ஓலைச் சுவடிகளும் புத்தகங்களும் அவரிடம் இன்றும் பாதுகாப்பில் உள்ளன. அவர் ஒரு 'பிளாக் பேர்ட்' பேனாவைப் பதின்மூன்று ஆண்டுகளாகவும், ஒரு 'பார்க்கர்' பேனாவை இருபத்தி ஆறு ஆண்டுகளாகவும், ஒரு கைக்கடிகாரத்தைப் பதினைந்து ஆண்டுகளாகவும் கையாண்டு வந்திருக்கிறார்.

அவரது தொழில் நிலையத்தில் நாற்பத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இரண்டேகால் ரூபாய்க்கு வாங்கிய ஜப்பான் சுவர்க்கடிகாரம் இன்றும் பழுதடையாமல் சரியாக ஓடிக்கொண்டிருக்கிறது. அவருக்குப் பயன்பட்டு வருகிற நாற்காலி முப்பத்தி இரண்டு ஆண்டுகளாகவும் மேஜை முப்பத்தி ஆறு ஆண்டுகளாகவும் பழுதடையாமல் உள்ளன. எண்பது வருடங்களுக்கு முன் திரு. வி. யின் தந்தைக்கு அவர் முதலாளி வைத்துக் கொடுத்த நாற்பது பழைய இரண்டணா வெள்ளி நாணயங்களை (ஐந்து ரூபாய்) இன்றும் அப்படியே நினைவுப் பொருளாக வைத்திருக்கிறார் விசுவநாதம்.

இதிலிருந்து அவர் பொருள்களின் அருமை அறிந்து பாழாக்காமல்நாள்தோறும் நிதானமாகக் கையாண்டுவரும் பழக்கத்தை உடையவர் என்பதை நன்கு அறியலாம்.

## அமைப்புத் திறமை

அவரிடம் எந்த வேலை ஒப்படைக்கப்பட்டாலும் அதைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பல மாநாடுகளை மிகச் சிறப்புற நடத்திக் கொடுத்திருக்கிறார். நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தபோது நாடெங்கும் தமது சொந்தச் செலவில் சுற்றுப் பயணஞ் செய்து, ஆங்காங்கே கிளைக்கழகங்களை ஏற்படுத்தித் திரும்பினார். இம்மாதிரியே தன்மான இயக்கத்தின் தூணாக இருந்தபோது பட்டித் தொட்டிகளிலெல்லாம் பகுத்தறிவுப் பிரசாரஞ் செய்து, மூலை முடுக்குகளிலும் சங்கம் காணும்படிச் செய்திருக்கிறார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போதும், ஜில்லாதோறும் பெரும் பலம் திரட்டி, இந்தியை ஒழிக்க பட்டாளம் கொண்டு வந்தார். ஈ. வே. ரா. சிறைப்பட்ட போது, தானே தனித்து நின்று இயக்கம் தளர்ச்சியடையாமல் அதை முன்னிலும் அதிக வலுவுடையதாக ஆக்கினார். அன்று அவரது கட்சி அமைப்புத் திறனையும், போரை முன்னின்று நடத்திய விதத்தையும் கண்டு, தமிழகமே வியந்து பாராட்டியது. ஆச்சாரியாரும் நடுங்கிப் போனார். திரு. வி. க. போன்ற நடுநிலையாளர்களே தமது வாழ்க்கைக்குறிப்புக்களில்வியந்து பாராட்டியுள்ளார்கள். இதற்குப் பின்பு தமிழர் கழகத்தை ஒவ்வோர் ஊரிலும் திறக்கச் செய்து, 'தமிழர் நாடாக' ஆக்க அவர் பெரும் பணியாற்றியதைத் தமிழகம் மறந்துவிடவில்லை. இன்னும் அவரிடம் இந்த ஆற்றல் மறைந்து போய்விடவில்லை. அது நீறுபூத்த நெருப்புப்போல் இருக்கின்றது. சமயம் வந்தால் அது வீறிட்டெழும் என்பதில் சிறிதும் தடையில்லை.

## பாராட்டும் குணம்

திரு. வி. யிடம் இருக்கும் மற்றொரு இயல்பு நல்லதைப் பாராட்டும் குணம். "மனோகர"னாக நடிப்பதில் டி. கே. சண்முகமும், கே. ஆர். ராமசாமியும் சிறந்தவர்கள் என்கிறார். இன்றுள்ள உயர்ந்த கவிஞர்களில் பாரதிதாசனைத் தலை சிறந்தவர் என்று குறித்திருக்கிறார். "வீராயி" எனும் சிறு காப்பியத்தைப் படித்து, அதிலுள்ள அருமையான கவிதைகளைச் சுவைத்து, அதன் பெருமைகளை வியந்து பாராட்டியுள்ளார், அதை எழுதியவர் "தமிழ் ஒளி" எனும் இளம் கவிஞராக இருந்துங்கூட! அரசியலில் ஒதுங்கியிருந்த நேரத்திலும் தமது கருத்துரையைத் தர அவர் தயங்கியதில்லை. "அறிஞர் அண்ணாதுரை" எனும் தொகுப்பு நூலில் அண்ணாதுரையைப் பற்றித் தாம் அறிந்ததை மிக விளக்கமாக எழுதியிருக்கிறார். "தலைவர் காமராஜர்" என்ற நூலுக்கும், காமராஜர் எதிர் கட்சித் தலைவர் என்று தெரிந்தும்கூட நல்லதோர் பாராட்டுரை வரைந்திருக்கிறார். இன்னும் தொடர்பன் எழுதிய "சிறந்த பேச்சாளர்"க்கும் சி. ர. பழனியாண்டியின் நூலுக்கும் பிறர்க்கும் இவ்வாறே தமது மதிப்புரையை வழங்கியிருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கா. சுப்பிரமணியம் எம். ஏ. பி. எல், அவர்கள் எழுதிய 'தமிழர்சமயம்' என்ற நூலுக்கு திரு. வி. எழுதிய மதிப்புரை என்றென்றும் உயிருள்ளவையாகும். இவையெல்லாம் அவரது பாராட்டுள்ளத்தைக் காட்டுகின்றன.

## விரிந்த உள்ளம்

இன்னும் அவரது விரிந்த மனப்பான்மையைக் காட்டும் சில நிகழ்ச்சிகளை இங்கு சொல்வது அவசியம். காலஞ்

சென்ற கவிக்குயில் சரோஜினிதேவி திருச்சிக்கு வந்த போது, அவரது நினைவின் அறிகுறியாகத் தமது மகளுக்குச் சரோஜினி என்ற பெயரை வைத்திருக்கிறார். காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டபோது உருக்கமுடன் வானொலியில் பேசியிருக்கிறார். இதைக் காணும்போது நல்லவர்க்காகக் கட்சி வேற்றுமையையும் மறந்து அவர் மதிப்புக் கொடுப்பவர் என்பது நன்கு புலனாகின்றது.

## பேட்டிகள்

பாடுபடும் தொழிலாளர் குறைகளை நீக்கும் பொருட்டு அடிக்கடி மாவட்ட அதிகாரிகளைக் கண்டு பேசியிருக்கிறார் விசுவநாதம். புகையிலை வரி சட்ட சம்பந்தமாகச் சென்னைக் கவர்னர் அவர்களையும், வண்ணான் பாட்டுச் சச்சரவை நீக்க, சலவைத் தொழிலாளர் சார்பில் சென்னை அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சரையும், தென்னிந்திய ஏற்றுமதி சம்பந்தமாக டில்லி சென்று இந்திய அரசாங்க வர்த்தக அமைச்சராக இருந்த சர். ராமசாமி முதலியாரையும் பேட்டி கண்டு பேருதவி புரிந்திருக்கிறார். வியாபாரியான விசுவநாதத்திற்கு தொழிலாளர் நலத்தில் மிகுந்த சிரத்தையுண்டு. ஆனால் தாம் தொழிலாளர் தலைவரென்று மேடையிலும் பத்திரிகையிலும் அவர் விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை. வீம்புக்காகத் தொழிலாளர்களை ஏவிவிட்டு வேடிக்கைப் பார்ப்பதுமில்லை. மாறாக, அமைதியான முறையில், நேர்மையான வழியில் அறிவின் துணைகொண்டு அன்புப் பணி புரிந்து அவதியுறும் தொழிலாளர்தம் சிக்கலை நீக்கி, அதைக்கண்டு மகிழ்ச்சியடைந்து வந்திருக்கிறார்.

"இதனை இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"—என்ற திருக்குறளின் வழியொழுகி பொறுப்புள்ளவராக எப்பணியிலும் விளங்கும், விசுவநாதத்தின் பண்புடையுள்ளம் வளர்வதாக!

## பஞ்சாயத்து குணம்

திரு. விசுவநாதத்தின் தந்தையார்—காலஞ்சென்ற பெரியண்ணப் பிள்ளை, திருச்சியில் மிக்க செல்வாக்கும் மதிப்பும், நேர்மையும் உள்ளவராக விளங்கியமையால், சுற்றிலுமுள்ளவர்கள் அவரிடம் வந்து தங்களுடைய வழக்குகளைச் சொல்லித் தீர்த்துக்கொள்வது வழக்கம். பிள்ளையவர்களும் அவர்களுடைய வழக்குகளைச் செவி மடுத்துக் கேட்டு ஓரஞ்சொல்லாது, நடு நிலைமை பிறழாது இருசாராரும் ஒப்பும்படி வழக்குகளின் முடிவுகளைக் கூறி வந்தார். அவரது முயற்சி பல வழக்குகளை நீதி மன்றம் ஏறுமல் செய்தது. பயன் கருதாது பிறர் வழக்குகளை கேட்டு நீதிவழுவா நெறி முறையில் நடத்தி வந்தது, பிள்ளையவர்களின் பெருந்தன்மையைக் காட்டிவந்தது.

பெரியண்ணப்பிள்ளை இறந்தவுடன் அப்பெரும் பொறுப்பை விசுவநாதம் ஏற்க வேண்டியதாயிற்று. பல ஏழைக் குடும்பங்களும் பணக்காரக் குடும்பங்களும் விசுவநாதத்தின் தலையீட்டால், நீதிமன்றம் ஏறி பணம் விரயஞ் செய்யாமல், பலனடைந்துள்ளனர்.

விசுவநாதத்தின் பஞ்சாயத்து குணத்துக்கு மற்ருெரு சான்றைப் பார்ப்போம். தன்மான இயக்கம் சம்பந்தமாக திருவாளர்கள் ஈ. வே. ராமசாமி, என், தண்டபாணி பிள்ளை, ஜே. எஸ். கண்ணப்பர் ஆகியவர்கட்கும் பல்லாவரம் மறைமலை அடிகட்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு, அது முடிவில் நீதி மன்றம் செல்லவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது.

பார்ப்பனரல்லாதார் தலைவர்களுக்குள் பூசல் ஏற்பட்டு நீதிமன்றம் செல்வதும் அங்கே பொதுநல நன்மைக்குக் கேடு விளைவிக்கக்கூடிய செய்திகள் வெளியாக்கப்படுவதும், பார்ப்பனரல்லாத பெருங் குடிமக்களின் முன்னேற்

றத்திற்குப் பெரிதும் ஊறு செய்யும் என்று விசுவநாதம் கருதினர். ஆகவே, அவர் இதில் குறுக்கிட்டு இருசாராரையும் ஒற்றுமைப் படுத்த முயன்றார். காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வின் துணைகொண்டு, சம்பந்தப்பட்ட தலைவர்களைப் பலமுறை கண்டு பேசி, இருதரப்பு வாதங்களையும் அறிந்து, தப்பெண்ணங்களைப் போக்கி, நீதிமன்றம் செல்லாமலே சமாதானப் படுத்தி வைத்துவிட்டார். இப்படியாக ஈ. வே. ரா. அவர்கட்கும், மறைமலை அடிகளுக்கும் நேரவிருந்த ஒரு பெரு வழக்கு திரு. விசுவநாதத்தின் கடமை யுணர்ச்சியாலும், சலியா முயற்சியாலும் தடுக்கப் பட்டது. இவரது அரிய செயலைப் பாராட்டி 1928-ல் 'திராவிடனி'ல் ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கின்றது.

## அயரா உழைப்பாளர்

ஓயா உழைப்புக்கு எறும்பையும் சுறு சுறுப்புக்குச் சிட்டுக் குருவியையும் உதாரணங் கூறுவார்கள். இவ்விரு குணப் பண்புகளும் விசுவநாதத்திடம் ஒருங்கே அமைந்திருக்கின்றன. அவரது அன்றாட நிகழ்ச்சி முறைகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

காலை 6–30 மணிக்கு விசுவநாதம் துயில் நீத்து எழுகிறார். உடனே படிக்காத நூல்களைப் படிக்கிறார். பிறகு 7–15 க்கு வானொலிச் செய்தி கேட்கிறார். 7–30 க்கு காலைக்கடனை அரைமணி நேரத்திற்குள் முடித்துக் கொள்கிறார். குளிர் காலத்தில் வெந்நீரிலும் வெயிற் காலத்தில் தண்ணீரிலும் நீராடுவது அவரது வழக்கம். இதன் பிறகு தலை சீவுதல் உடுப்பு உடுத்தல் முதலியன மேற்சொன்ன இடைவேளையான அரைமணிக்குள் நடந்து விடும். அடுத்து 8 மணி முதல் 9–30 வரை பேட்டி தருகிறார். பேட்டி வேலை முடிந்ததும் 9–30 யிலிருந்து 12–30 வரை தமது தொழிலைக் கவனிக்கின்றார்.

அன்றுடம் இவருக்கு வரும் கடிதங்களைப் பார்த்து உடனே பதில் எழுதி விடுவார். இதில் நண்பர் பகைவர் நொதுமலர் என்ற வேறுபாடின்றி வந்த கடிதங்களுக்குத் தட்டாமல் பதில் வரைவார். இந் நியதியை தம் வாழ்க்கையில் இன்றுவரை பிசகாமல் நடத்தி வருகிருர். எவ்வளவு அதிக வேலைகள் இருந்தாலும் இவ்வொழுங்கு முறையில் அவர் தவறியதில்லை. விற்பனையாளர்களுடைய கடிதப் போக்கு வரவுகூட இந்த நேரத்துக்குள் கட்டுப்பட்டு விடும்!

அஞ்சலட்டையில் ஒன்றரை நிமிடத்திற்குள்ளும் உறையில் எழுதும் கடிதத்தை முகவரி உட்பட 3 நிமிடத்திற்குள்ளும் எழுதி முடித்து விடுகிருர்!

நடுப்பகல் 1 மணிக்கு உணவு உட்கொள்கிருர். இவருடைய உணவிலே புளிப்பும் காரமும் குறைந்திருக்கும். பெங்களூர் காய்கறிகளையே இவர் மிக விரும்பி உண்கிருர். இளமையிலிருந்தே புலால் உணவை அருந்துவதில்லை. ஊண் உணவிலுள்ள பெரும் சத்தைப் பருப்பிலும் பாலிலும் பெற முடியுமென்று கூறுகிருர், எளிய முறையில் செரிக்கும் காய்கறி, பருப்பு வகைகளையே அவர் உண்டு வருகிருர்.

உணவருந்திய பின் 15 நிமிடம் ஓய்வு எடுத்துக்கொள்கிருர். இந் நேரத்தை மாலையில் நடைபெற வேண்டிய வேலைகளைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்குவர பயன்படுத்துகிருர்.

பிற்பகல் 2 முதல் 3-30 வரை பகல் உறக்கம் செய்கிருர். "மூளைக்கு அதிக வேலை தருபவர்கள் பகலில் சிறிது நேரம் மூளைக்கு முழு ஓய்வு கொடுப்பது நல்லது" என்பது அவர் கருத்து.

பகல் உறக்கத்திற்குப் பின்னர் 4 மணிக்கு 'காபி'க்குப் பதிலாகப் பால் அருந்திவிட்டு வெளி வேலைகளைக்

கவனிக்கச் செல்கிறார். அவைகளைக் கவனித்துவிட்டு இரவு 8 மணிக்கு வீடு திரும்புகிறார். 8 மணி முதல் 9 மணிவரை அன்றாடக் கணக்குகளை எழுதி முடித்துவிடுகிறார். குறிப்பும் பேரேடும் இவர் கையாலே சென்ற 30 ஆண்டுகளாக எழுதப்பட்டு வருகின்றன என்பது இங்கு நினைவுகூறத் தக்கது. புகையிலை ஏற்றுமதி வியாபாரம், கொடுக்கல் வாங்கல்(லேவாதேவி) பயிர்த் தொழில், குடிக்கூலி, குடும்ப வரவு செலவு முதலிய யாவும் இக் கணக்கில் அடங்கியிருக்கும்!

இரவு 9 மணிக்குப் பசும்பாலும், ரொட்டியும் அல்லது சிற்றுண்டி எடுத்துக்கொள்வார். அரைமணி நேரம் ஆனவுடன் அவர் உறங்கச் செல்கிறார்.

பேசும் படங்களை இவர் பெரும்பாலும் பார்ப்பதில்லை; ஆண்டுக்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ பார்ப்பதுண்டு; அதுவும் பெரும் பாலும் வெளியூர்களில்!

இந்த அட்டவணையின்படிதான் அவரது அன்றாடப் பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன கடியாரம் சாவியில்லாமல் நின்று போனாலும் போகும்! நமது விசுவநாதம் மட்டும் தாம்போட்ட திட்டத்திலிருந்து வழுவுவதே கிடையாது!! அவ்வளவு கணக்காக வேலைகள் ஒரே சீராக நடைபெற்று வருகின்றன !!!

## நூல் நிலையம்

அவரிடமுள்ள அரிய பண்புகளில் ஒன்று நூல் நிலையம் வைத்துக் கட்டிக் காத்து வருவதாகும், அன்பர் விசுவநாதம் தமது இல்லத்தில், "மணி வாசகத் தமிழக நூல் நிலையம்" என்ற பெயரில் சங்க இலக்கியம், ஓலைச் சுவடிகள் உள்பட., ஏறக்குறைய 1000 நூல்கள் வரை 3 நிலைப்பெட்டிகளில் வைத்திருக்கிறார். இதில் பல நூல்கள் விற்பனைக்கு இப்போது வெளியில் கிடைக்காதவையாகும்.

இந்நூல்களைத் தாம் மட்டும் பயன்படுத்துவதோடு நில்லாது, பிறரும் இலவசமாகச் சென்று படிக்கவும் ஏற்பாடு செய்துள்ளார். இத்தகைய நல்வாய்ப்பைத் திருச்சி மக்கள் நழுவவிடாமல் பயன் படுத்திக் கொண்டு வருகின்றனர். இந்நூல் நிலையமும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

அவர் நூல் நிலையத்தில் உள்ள கல்லாடம் என்ற நூலைத் தாம் அச்சியற்ற ஆசைப்பட்டு ரூபாய் இருநூறு வரை விலைக்குத் தரும்படி மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் தக்க ஆள் மூலம் கேட்டு அனுப்பினர். 'தமிழை விலைக்கு விற்பதில்லை' எனக்கூறி மறுத்துவிட்டார் விசுவநாதம்!

## பதவிகள்

திருச்சி விசுவநாதம் அவர்கள் திருசிரபுரத் தமிழ்ச் சங்கம், திருசிரபுரம் சைவசித்தாந்த சபை, திருசிரபுரம் புகையிலை வர்த்தகர் சங்கம், சென்னை மாகாண நீதிக் கட்சி, சென்னை மாகாணத் தமிழர் சங்கம், தமிழ் நாட்டு தமிழர் கழகம் ஆகிய பல்வேறு கழகங்களில் பொறுப்பான அமைச்சர் பதவிகளை வகித்திருக்கிறார்.

திருச்சி சுருட்டு பீடித்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் பதவியும், திருச்சி நகரக் கலைக் கழகத்தினர் தலைவர் பதவியும், திருச்சி ஜில்லா வர்த்தகக் கழகத்தின் தலைவர் பதவியும், சென்னை தென்னிந்திய வர்த்தகக் கழகத்தின் (The Southern India Chamber of Commerce, Madras) நிர்வாக உறுப்பினர் பதவியும் பெற்றுப் பலதொண்டுகளைச் செய்து வந்திருக்கிறார். தற்போது தமிழர் பேரவையின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வெற்றிலையின் பெருமையையும் அதன் குணத்தைப் பற்றியும், மற்றவர்கள் வாயில் நீர் சுரக்கும்படிச் சொல்லும் விசுவநாதம், வெற்றிலை போடுவதில்லை. அது வியப்புக்

குரிய செய்தியல்லவா? இது மட்டுமல்ல. இன்னும் ஒன்று. அவர் நல்ல புகையிலை வியாபாரி. உயர்ந்த புகையிலையின் மணம், குணம் அனைத்தும் அவருக்கு நன்கு தெரியும். அப்படியிருந்தும் கூட அவர் பீடி, சுருட்டு, சிகரெட்—எதையும் பயன் படுத்தும் வழக்கமில்லாதவர்!

கடைசியாக ஒரு வேண்டுகோள்: தமிழ் மக்கள் இன்று பிளவுபடுத்தப்பட்டு, யார் தலைமையில் போராடி வெற்றி பெறுவது என்று திகைக்கிருர்கள்? இந்த அவலக் கட்டம் இனியும் நீடிக்கக்கூடாது, தமிழர்கள் எக்கட்சி அணியில் திரண்டிருந்தாலும், அவர்களது மொழி தமிழும், அவர்களது நாடு தமிழ் நாடும் ஆகும். ஆகவே பல்வேறு முகாம்களிலும் உள்ள தமிழர்களைத் தமிழ் நாட்டின் விடுதலைக்காகவும், தமிழின் மேன்மைக்காகவும் வேண்டி, ஒரு பொதுப்படையான அவையில் உறுப்புப் பெறச் செய்யவேண்டும். அதைச் செய்ய விசுவநாதம் முன்வரவேண்டும். எல்லாக் கட்சியினருக்கும் சங்கத்தினருக்கும் அழைப்பு விடுத்து, அவர்களது எண்ணத்தையும் ஒப்புதலையும் பெற்று, புதியதோர் அமைப்பு ஏற்படுத்தப் படுமாஞல், உறுதியாக அது வெற்றி பெறும் என்பது திண்ணம். கட்சி அமைப்பில் தேர்ச்சி பெற்ற திரு. வி. இதில் முனைந்து செயற்கரிய செய்யவேண்டும்.

## 17. திரு. வி. யின் நூல்கள்

### ஐந்து செல்வங்கள்

திரு. வி., அவர்கள் அவ்வப்பொழுது பல பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளில் இருந்து 5 கட்டுரைகள் பொறுக்கி எடுத்து நூலாக்கப் பட்டுள்ளன.

முதற் கட்டுரையான 'தாய்ச் செல்வ'த்தில் 16 வகையாகச் செல்வத்தைப் பாகுபடுத்தி அவை யாவற்றிலும் 'தாய்ச் செல்வ'மே சிறந்தது, தலையாயது என்ற முடிவை மிக அழகாக எடுத்துரைக்கின்றார்,

இதில் அவர் கடைசியாகச் சுட்டிக் காட்டுவது இங்கு நினைவுபடுத்தத் தகுந்தது. "...தாய் என்ற சொல் நம்மைப் பெற்றோர்களுக்கு மட்டும் வைக்கிற ஒரு சொல் என்று எண்ணி விடாதே. நம்மைப் பெற்ற நாட்டிற்கும் தாய் நாடு என்று பெயர், நம்மை வளர்த்த மொழிக்கும் தாய் மொழி எனப் பெயர். தமிழ் மக்களாகிய நமக்குத் தமிழ்நாடும், தமிழ் மொழியுமே தாய்நாடும், தாய்-மொழியுமாகும். இவைகளும் நமது தாய்ச் செல்வங்களேயாம். தாயை இழந்த பிள்ளைகள் சிலகாலம் தப்பிப் பிழைத்து உயிர்வாழ முடியும். ஆனால், தாய்-நாட்டை இழந்து. தாய்மொழியை இழந்துபோன மக்கள் எக்காலத்தும் வாழ இயலாது. ஒரு கால் வாழ்ந்தாலும் அவ் வாழ்வு சிறக்காது" என்பதே. இவ்வுண்மை அனைவராலும் அறிந்து போற்றிப் பாராட்டத் தக்கதாகும்.

இனி அடுத்ததாகச் சிந்தனைச் செல்வத்தைக் காட்டுகின்றார். இதில் உரையாடல் மூலமாகச் "சிந்தித்தால் யாவும் விளங்கும். உண்மையைக்காண, சிந்தனை ஒன்றே

பெருந்துணை செய்யும்; சிந்தனை ஒரு சிறந்த செல்வம்; அதை இழந்துவிடாதே! பயன்படுத்து! நன்கு பயன் படுத்து" என்று சிந்தனையின் மேன்மையை வற்புறுத்து கின்றார்.

மூன்றாவதாகக் 'கிழட்டுச் செல்வத்'தின் அருமை பெரு மைகளை விளக்குகின்றார். இதில் குழந்தைகளை எவ்வளவு எச்சரிக்கையுடன் வளர்க்கவேண்டும் என்பது பற்றியும், இன்றையக் 'கிழடு'களிடமிருந்து 'எதிர்காலக் கிழடுகள்' தெரிந்துகொள்ள வேண்டிய செல்வங்கள் என்னென்ன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

நான்காவதாக 'உடற் செல்வ'த்தின் இன்றியமை யாமையை வலியுறுத்தி, 'பொருட் செல்வம்தேட முயற்சி தேவை; உடற் செல்வம்தேடப் பயிற்சி தேவை; உடற் பயிற்சியின்றி உடற்செல்வத்தைப் பெறமுடியாது' என்று அழுத்தந் திருத்தமாக உரைக்கின்றார்.

கடைசியாகக் 'திருச் செல்வ'த்தைக் குறிப்பிடுகின்றார். 'ஒழுக்கமே முதற் செல்வம்; மற்றவை துணைச் செல்வம்! இவை இரண்டும் சேர்ந்ததே திருச் செல்வம்" என்று முடிக்கின்றார்.

இத் திருச்செல்வத்தின் உரையாடல் பகுதி அவரது தமிழ்ச் செல்வ நாடகத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பது இங்கு அறியத் தக்கதாகும்.

இந் நூலுக்கு முன்னுரை தந்துள்ள பன்மொழிப் புல வர் தே. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், "சிறந்த கருத் துக்களை எளிய முறையில் பசுமரத் தாணி போலப் பதிய வைப்பதில் ஆசிரியர் சிறந்து விளங்குகிறார்" என்றும்,

"நண்பர் ஒரு செல்வர்; செல்வங்களைப்பற்றி எழுது கின்றார். அவர் உயிர்போல் போற்றுகிற தமிழில் எழுது

கிறார். தமிழ் நாடு உய்ய வேண்டி எழுதுகிறார்" என்றும் சிறப்பித்திருக்கிறார்.

## மும்மணிகள்

பதினென் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான திரிகடுகத்தின் கருத்துரையைத் தழுவியதே இம் மும்மணிகள். சுக்குத் திப்பிலி மிளகு ஆகிய மூன்றும் சேர்ந்த ஒரு மருந்தைத் திரிகடுகம் என்று சொல்வர்.

இதைப்போலவே உள்ளத்தைச் சார்ந்த பிணிகளை நீக்க இந் நூல் பெரிதும் உதவியாக இருக்கின்றது. இதன் மூல நூலை யாவரும் படித்து இன்புறுவதற்கு ஏற்றவகையில் திரு வி. சுருக்கமாகவும் தெளிவாகவும் சுவையுடனும் கருத்துரை எழுதியிருக்கிறார். இதில் நம் வாழ்வுக்கேற்ற மருந்தும், சாவை விரும்பும் செயலும், அறியாமையால் வரும் கேடும், ஊர் ஆளும் செல்வமும், நற்குணமுடையவர் செயலும், நல்லதை சேமிக்கும் வழியும், பெண்ணுக்குப் பெருமை தருபவைகளும், பெருதற்கரிய பொருளும், பிறவும் 100 பாக்களில் சொல்லப்பட்டுள்ளன.

ஆசிரியரே சொல்வதுபோல் 'பழந்தமிழ் மக்களின் அறிவை, அன்பை, அறத்தை, பண்பை, வாழ்வை, நன்கறிய' இந்நூல் மிகவும் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

## தமிழ் மருந்துகள்

தமிழ் மருத்துவம் இந்நாட்டில் பன்னெடுங்காலமாகத் தேர்ச்சி மிக்கவர்களால் கையாளப்பட்டு வருவதும், தமிழகத்தின் தட்டவெட்ப நிலைக்கு ஏற்ப தமிழர்களுக்கு வருகின்ற நோய்களைப் போக்க உதவுவதும், இந்நாட்டிலேயே முளைக்கும் செடி கொடிகளையே மருந்தாக்கிப் பயன் படுத்திக் கொள்வதுமான ஓர் அரிய முறையாகும்.

இன்று இம்மருத்துவத்தின் சிறப்பை இந்நாட்டு மக்களே புறக்கணிக்கத் தொடங்கியுள்ளனர். ஆங்கில, ஆயுர்வேத, யூனனி முறைகளைவிட, சித்த மருத்துவமான இந்த தமிழ் முறை பல வழிகளில் மேம்பாடு உடையதாக விளங்கு வதைப் பழக்கப்பட்ட ஒரு சிலரே அறிவர்.

சித்த மருத்துவ தேர்ச்சிமிக்கவர்கள் தங்கள் அரிய மருந்துகளையும், முறைகளையும் குடத்திலிட்ட விளக்குப் போல் உலகம் அறிய முடியாதபடி வைத்திருக்கிறார்கள். இக்குறை நீக்கப்பட்டு, பிற முறைகளைவிட இதுவே பல விதத்திலும் சாலச்சிறந்தது என்பதைப் பல பரிசோதனை கள் மூலம் விளக்கிக்காட்டவேண்டும். அப்பொழுதான் இதன் பெருமை தெரியும்; ஆதரவு பெருகும்.

முன்பு நீதிக்கட்சியினர் சென்னை மாநில அரசியலைக் கைப்பற்றியிருந்தபோது, இந்தியமருத்துவப் பள்ளிஒன்றை ஏற்படுத்தினர். ஆனால் அது இன்று கல்லூரியாக உயர்த் தப் பட்டுங்கூட, ஆங்கிலப் பட்டதாரிகளுக்கு அளிக்கும் மதிப்பைவிடக் குறைவான மதிப்பையே இந்திய மருத்துவ மாணவர்கள் (ஐந்தாண்டுகள் ஆங்கில மருத்துவ மாணவர் களைப்போல் சமமாகப் படித்துங்கூட) பெறுகின்றார்கள். இதற்காக அவர்கள் போராடியும் அரசாங்கத்தின் மாற்றாந்தாய் மனப்பான்மையினால் மதிப்பு உயரவில்லை.

திரு. வி. அவர்களின் பெரிய குடும்பத்தில் இதுவரை கையாளப்பட்டு வந்த அனுபவ முறைகளையும் மருந்துகளை யும் 'தமிழ் மருந்துகள்' என்ற தலைப்பில் எழுதியிருக் கிறார். தமிழ் வைத்தியம் மீண்டும் பழைய உயர் நிலையை எட்டிப் பிடிக்கவேண்டுமென்ற வேணவா கொண்டிருக் கிறார். அவருடைய நல்லெண்ணம் ஈடேற தமிழ் மக்கள் தமிழ் மருந்துகளைக் கையாண்டு ஒத்துழைக்கவேண்டும். தமிழ் மருத்துவர்கள் அனைவர்களும் கூட்டாகச் சேர்ந்து ஒரு சங்கம் வைத்து, தங்கள் அனுபவங்களைத் திரட்டி

முதலில் தமிழில் வெளிப்படுத்தவேண்டும். பிறகு அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும். இத்தனையும் நடைபெற இந்நூல் தூண்டுகோலாகவும் பயனுடைய தாகவும் இருக்கின்றது.

இந் நூலின் இரண்டாம் பதிப்புக்கு பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் மதிப்புரை அளித்திருக்கிறார்கள்

## வானொலியிலே

திரு. விசுவநாதம் வானொலியில் பலமுறை பல தலைப்புகளில் பேசியுள்ளார். இவைகளில் ஏழு பேச்சுக்களைத் திரட்டி தமிழர் பதிப்பகத்தார் அழகாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்நூலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், 'நாடறிந்த நாவலர் விசுவநாதன் அவர்களின் இன்னுரைக்கு என் முன்னுரை மிகை' என்று புகழ்ந்திருக்கிறார்.

இந்நூலில் கி, ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் அரசியல் பேச்சு ஒன்று, ஆராய்ச்சிப் பேச்சு ஒன்று, சமூகப் பேச்சு ஒன்று, இலக்கியப் பேச்சு ஒன்று, விவாதப் பேச்சு ஒன்று, வியாபாரப் பேச்சு ஒன்று, வெளி நாட்டுப் பேச்சு ஒன்று ஆக ஏழு சிறந்த வானொலிப் பேச்சுக்களைத் தேர்ந்தெடுத்து அழகிய நூல்வடிவாக அச்சியற்றப் பெற்றுள்ளது. இதற்கு மதிப்புரை செய்த "பொன்னி" எனும் இலக்கியப் பத்திரிகையின் தீர்ப்பைப் படியுங்கள்.

"சில சொற்பொழிவாளர்கள் நகைச் சுவையுடன் பேசுவர். ஆனால் பேசியபின் நினைத்துப் பார்த்தால் ஒன்றும் இராது. பொருட் செறிவுடனும் நகைச் சுவையுடனும் பேசுவது அறிஞர் கி. ஆ, பெ. விசுவநாதத்தின் தனிச் சிறப்பு......கல்லூரி மாணவர்கட்குப் பயனற்ற புத்தகங்களைப் பாட புத்தகமாக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்

தின் கண்ணுக்கு இப்புத்தகம் படுமா?''—'பொன்னி' டிசம்பர் 1947.

மேலும், "பேச்சுக்கலை பயிலும் இளைஞர் கரத்தில் எல்லாம் தங்கும் உரிமையும் பெருமையும் இந்நூலுக்கு உண்டு" என்று "போர்வாள்" (6-3-48) கிழமை இதழ் நற்சான்று தந்துள்ளது. இன்னும் இந்நூலைக் குறித்து அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இதனைப் படிக்காதவர்கள் உடனே படிப்பது நல்லது.

## எண்ணக் குவியல்

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ!" என்ற பாரதியாரின் ஒரு அடியை எடுத்துக்கொண்டு, நமக்கெல்லாம் 'நல்ல அடி' தருகிறார் விசுவநாதம்! அடுத்து "முடத் தெங்கு" உரையாடல் கட்டுரையில் தாத்தாவையும் பேரனையும் பேசவைத்து, 'பிறந்த பொன்னாட்டை மறந்து பிறநாடுகளுக்குத் தொண்டு செய்யும் பக்தனும், வளர்த்த இன்மொழியை மறந்து, பிறமொழிகளுக்குத் தொண்டு செய்யும் அறிஞனும்தான் தலைசிறந்த முடத் தெங்குகள்" எனும் உண்மையைப் பெறவைக்கிறார். பிறகு எழுதுகிறவர்களும் பேசுகிறவர்களும் சிறந்த சொற்களைத் தகுந்த இடத்தில் அமைத்து, உண்மையும் உணர்ச்சியுமுடையதாகப் பேச்சையும் எழுத்தையும் செய்யவேண்டும் என்பதை "வெல்லும் சொல்" எனும் கட்டுரையில் விளக்குகிறார்.

பொறாமை, தீச்செயல், முதலியவைகளை நேரடியாக நீக்கவேண்டுமென்றும், அங்ஙனம் முடியாவிட்டால் குறுக்கு வழியிலாவது அவைகளை ஒடுக்கவேண்டு மென்றும் திறம்பட "ஆமை" எனும் கட்டுரையில் விவரிக்கின்றார். இவ்வுலகிலே முழு அறிவு பெற்ற ஒரு முழு மனி

தர் திருவள்ளுவர் ஒருவரே என்பதை 'அறிவில்லாதவன்' என்ற தலைப்பில் அழகாக எடுத்துரைக்கின்றார்.

## அறிவுக்கு உணவு :

திருச்சி. விசுவநாதத்தின் தெளிந்த சிந்தனையில் எழுந்த கருத்துக்களின் தொகுப்பே இச் சிறு நூல். இதில் அவரது குறிக்கோளும், அவர் கண்டறிந்த அனுபவ உரைகளும் ஆங்காங்கே முத்துத் தெறித்தாற்போல் சிதறிக் கிடக்கின்றன. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இந் நூலைப்பற்றிக் கூறும்பொழுது "கற்பனை யுலகத்தை நடை முறைக்கு ஈர்த்து அலைவதும் இங்கு இல்லை. பழைய வரலாற்றை இன்றைய வாழ்வுக்குப் பாய்ச்சி இளைப்பதும் இங்கு இல்லை. நடைமுறையை மறவாமல் வாழ்வைக் காக்கும் அனுபவ அறிவுரையே இங்கு உள்ளது" என்று கூறியிருக்கிறார்.

சிறந்த கருத்துக்களைத் தெளிவான நடையில் சுவையான முறையில் சொல்லும் இக் குறுஞ்சுவடி, ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து இன்புற்று, என்றும் வைத்துக் கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்ததாகும்.

## தமிழ்ச் செல்வம்

நாடு, மக்கள், காதல், கொடை, வீரம் என்ற பல தலைப்புக்களில் தமிழ்ப் பெருமக்களின் சிறந்த பண்புகளைப் புறநானூறு திருக்குறள் போன்ற நூல்களிலிருந்து தொகுத்து இனிமையான நாடகமாக ஆக்கியுள்ளார் ஆசிரியர். வானொலி வாயிலாகவும், மேடையிலும் நடிக்கப் பெற்று பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட அரிய நாடகம்.

# கருத்துரைகள்

திரு. விசுவநாதத்தைப் பற்றி தமிழ் அறிஞர்களும், பத்திரிகாசிரியர்களும், அன்பர்களும் தங்கள் கருத்துரைகளை வழங்கியிருக்கிருர்கள். அவர்கள் உரைகளில் சிற்சில பகுதியை மட்டும் சுருக்கங் கருதி திரட்டித் தருகிறேன்.

"விசுவநாதம் இந்த நாட்டின் தனித்தலைவன். அவனுடைய தலைமையில் பணிசெய்ய எதிர்காலத் தமிழகம் கட்டாயம் காத்திருக்கும்".

—தமிழ்க்கடல். மறைமலையடிகள்.

"...நாயக்கரின் இயக்கத்திற்கு ஆக்கம் தேடுவதில் விசுவநாதம் சிந்தை சிறந்து விளங்கியது. அப்போது திருச்சி இளமை பாழுக்கு உழைக்கிறது என்று யான் நினைத்தேன். விசுவநாதன் ஒவ்வொருபோது சென்னையில் என்னைக் காண்பார். கருத்து வேற்றுமை அவர் மனத்தில் காழ்ப்பைப் புகுத்துவதில்லை என்பது எனக்கு நன்கு விளங்கியது. அவ்வியல்பை என் மனம் போற்றும்"

—தமிழ்ப் பெரியார். திரு. வி· கல்யாணசுந்தரனர்
(வாழ்க்கைக் குறிப்பில்.)

"...ஏழுரைகளையும் முன் வானெலியின் வாயிலாகக் கேட்டு மகிழ்ந்த எனக்கே மீண்டும் படிக்கத் தெவிட்டாமல் சுவை தந்தன என்ருல், அவற்றை இப்புத்தகத்தில் முதல் முதலில் படிப்பவர்க்கு அவை உவகை தருவதில் ஐயமில்லை. கற்ருரும் முன்னறியாப் பல புதிய செய்திகளை இவற்றில் காணலாம். உளம் தள்ராமல் மேல் வரும் பொருளை உணர்ந்துவக்க ஆவலூட்டி, எதிர்பார்ப்பதிலும் அதிக இன்பம் உதவி, படிப்பவர்க்கு முடிவில் மேலும்

பேசாமல் நிறுத்த நேர்ந்தமைக்கு வருத்தம் உறுத்தும் இன்னுரைகள் இவை. பதவி வயது, மதம் பால் கொள்கைகளில் வேறுபடுவாரும் வெறுப்பின்றி விரும்பி வரவேற்கும் நடுநிலையும், நாட்டு நலம் நாடுபவர் யாவரும் பேணத்தக்க பொருள் நயமும் வாய்ந்துள்ளது..."

—பேராசிரியர். ச. சோமசுந்தர பாரதியார்
('வானொலியிலே' நூலுக்குத் தந்த மதிப்புரையில்)

"திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் செறிவான எழுத்தாளர்; சுவையான பேச்சாளர். ஒழுங்கு ஒழுக்கம் இரண்டையும் போற்றுபவர். 'செய்வன திருந்தச் செய்' என்ற ஔவையாரின் நெறியை அவர் செய்வன யாவற்றிலும் காணலாம்.

தமிழ் நாட்டில் அறிவும் திறனும் வாய்க்கப் பிறப்பவர் பலர். ஆயின் அந்த அறிவையும் திறனையும் அவர்கள் தமிழ் நாட்டின் நலனுக்கும் உயர்வுக்கும் பயன்படுத்துவதில்லை; மாறாகத் தமிழ் நாட்டின் கேட்டிற்கும் தாழ்வுக்கும் உரிய வகையில் அவர்களின் செல்வாக்கும் செல்கிறது. மிகச் சிலரே தம் அறிவாலும் திறனாலும் நன்மைக்குப் பாடு படுகின்றனர். நாடு வாழவேண்டும் என்று எண்ணுகின்றனர். ஏங்குகின்றனர். அத்தகைய நன்மக்களுள், ஒருவராகத் திரு. கி. ஆ. பெ. வி. விளங்குதலை உள்ளுந்தோறும் உள்ளம் குளிர்கிறது."

—டாக்டர் மு. வரதராசனார்.

"பொறுப்பாகச் செயல் நடத்துவதிலே, இதுவரை தமிழ் நிலத்திலே நண்பர் விசுவநாதத்தைப் போல யாரும் இல்லை. இருக்கப் போவதுமில்லை என்றுகூடச் சொல்லலாம் அல்லவா? என்று பல தமிழ் நிலத்துத் தலைவர்கள்—ஊழியர்கள்—தொண்டர்கள் இயக்க அன்பர்கள்—பேச்

சாளிகள்—பெரிய தலைவர்கள்—சிறிய தலைவர்கள் முதலிய அனைவரும் சொல்லத் தக்கவாறு, நம்பத் தக்கவாறு, தம்மிடம் ஒப்படைத்த இயக்க வேலைகளை மிகப் பொறுப்புடன் ஏற்றுச் செய்வன செய்து, ஒழுங்காக முடித்து வெற்றி தேடித் தருபவர்...''

—மு. அண்ணல்தங்கோ.

''சிறிது நேரம் திரு. கி. ஆ. பெ. வி. அவர்களிடம் உரையாடிவிட்டுத் திரும்புவேன். ஓர் உயர்ந்த நூலைப் படித்தது போன்ற உணர்ச்சி என் உள்ளத்திலே தோன்றும். அவர்கள் பேச்சிலே பேருண்மைகள் மலிந்து கிடக்கும்.

கலை வலிமையுடையது; ஆக்கவும் அழிக்கவும் அதனுல் முடியும் என்ற உண்மையை நன்கறிந்தவர்களிலே ஒருவர் —திரு. கி. ஆ. பெ. வி. அவர்கள். ஆகவே கலைஞர்களிடத்தில் அவர்களுக்குத் தனி மதிப்பு. அவர்களுடைய உணர்ச்சியும் உண்மையும் நிறைந்த பேச்சும், எழுத்தும் தமிழரை உயர்த்துபவை.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமிழ் நாட்டின் செல்வம்! தமிழன்னை ஈன்றெடுத்த நற்புதல்வர்களிலே ஒருவர். அவர்கள் வாழ்க!''

—முத்தமிழ்ப் புலவர். டி. கே. சண்முகம்.

''திருவாளர் விசுவநாதத்துடன் நெருங்கிய பழக்கம் இல்லாவிடினும் அவரைச் சுமார் இருபது ஆண்டுகளாக அறிவேன். அவர் கட்டுரைகள் சிலவற்றைப் படித்திருக்கிறேன்; சொற்பொழிவுகள் சிலவற்றைக் கேட்டிருக்கிறேன். தானுகச் சிந்திக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. தமிழர்க்குரிய சிறந்த பண்புகள் வாய்ந்தவர் அவர். எடுத்துக் காட்டாகச் சொல்லக்கூடிய தமிழர்களில் ஒருவரான அவர் வாழ்க என்று வாழ்த்துகிறேன்.''

—பரலி. சு. நெல்லையப்பர்.

"தேனினுமினிய தமிழ்ச் சொற்களால் பொருட் சுவை, நகைச்சுவை இவைகள் நிரம்பப்பெற்று, அழகாகப் பேசி மக்களின் மனதைக் கவர்ந்தவர் நண்பர் கி. ஆ. பெ. விசுவநாதம். ஒருவர் பல துறைகளிலும் நின்று சிறந்த முறையில் பணியாற்றுவது சிரம சாத்தியம். இலக்கியம், கட்டுரை, மேடைப் பேச்சு இத்துறைகளில் பண்பட்ட தன் சிந்தனையைச் செலவிட்டு நம் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் வல்லமை படைத்தவர். வணிகத்திலும் நல்ல தேர்ச்சியுண்டு.

...குறளையும் வாழ்க்கையோடு இணைத்துப் பேசி அவர் தரும் விளக்கங்கள் நம் அறிவுக்கு விருந்தாக அமைவ தோடன்றி, நம் ஒவ்வொருவரிடமும் குறளைப் படிக்கும் படியான ஒரு ஆர்வத்தை எழுப்புகிறது. அத்தகையதொரு அறிவாளியின் வாழ்க்கை சிறப்படைய விரும்புகிறேன்."

—விஞ்ஞான மேதை ஜி. டி. நாயுடு.

"கி. ஆ. பெ. வி. அவர்களைப் பார்ப்பவர் கண்களுக்கு எளியவர் மட்டுமல்ல; இனியவருங்கூட. சுருங்கச் சொல் லின், கண்ணிறைந்த கவினுறு காட்சியுடையவர் அவர்...

திருச்சியார் நயத்தக்க நாகரிகம் படைத்தவர். அவ ருடைய சூழலும் ஒழுக்கமும் சமூகப் பழக்க வழக்கங்களும் தூய்மை, ஒப்புரவு, பண்பு இன்னோரன்ன சீரிய குணங் களுக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

ஒழுங்கு, கட்டுப்பாடு—இவற்றிற்குமேல் எல்லைக் கோடு ஒன்று இருக்குமானால் அது திருச்சி விசுவநாதம் அவர்கள்தான்...

கி. ஆ. பெ. வி. அவர்கள் நல்ல நட்புக்குப் பாத் திரமானவர்...

தமிழர்கள் அவரை, காட்டில் காய்ந்த நிலாவாகவோ எடுத்து முடிக்காத ரோஜாவாகவோ ஆகும்படி விட்டுவிட

லாகாது. அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அவருடைய இனம் பெருகும். நாடும் மொழியும் நலமடையும்.''

—வ. பா. தாமரைக்கண்ணி, வல்லை. பாலசுப்பிரமணியம், சென்னை.

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாது; தலைவரிடத்தில் தவறு இருந்தாலும் தட்டிக் கேட்கும் நக்கீர பண்புடையவர்......

அவரது சேவை, ஐக்கிய திராவிடத்தில் தமிழக சுதந்திரத்தை நிலைநாட்ட மட்டும் பயன்படும் என்று நம்புகிறேன்; பயன்பட வேண்டுமென்று நான் மட்டுமல்ல, நாடு விரும்புகிறது. வாழ்க தமிழர் தலைவர் விசுவநாதம்.''

—ஏ. வி. பி. ஆசைத்தம்பி,
"தனி அரசு'' ஆசிரியர், விருதுநகர்.

"திருக்குறளுக்குப் புதிய பொருள்கூறும் அறிஞரென மட்டும் நான் அறிந்திருந்தேன். நான் திருச்சி வந்திருந்த போது தங்கள் வாழ்க்கையும் திருக்குறள் வாழ்க்கையாக இருக்கக் கண்டு பெரிதும் வியந்து வந்தேன். தங்கள் வாழ்க்கை என் போன்றவர்களுக்கு ஒரு முன் மாதிரியாக இருந்து வருவது என்றென்றும் போற்றக்கூடியதாகும்''

—எஸ். டி. சிவநாயகம்,
ஆசிரியர் 'சுதந்திரன்' கொழும்பு.

"மணிவாசக மன்றத்தில் இருக்கின்ற நன்கு பயன்படுத்துகின்ற சுவடிகளைப்போல எந்தக் கல்லூரிப் பட்டதாரியின் இல்லத்திலும் நாம் காண்பது அரிது...

இவருக்கு நன்ருகப் பேசத் தெரிகின்றதற்குரிய காரணங்கள் பலவற்றுள் பேசாமல் இருக்கவும் தெரியும் என்பது ஒன்ருகும்.

—எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.
('தமிழ்த் தொண்டர்கள்' எனும் நூலில்)

"...Mr. K. A. P. Visvanathan of Trichinopoly, a prominent tobacco merchant, has been a staunch Justicite during the past ten years. Like Nehru, he is steadfast to his principles and never wavers with them. I first met him a couple of years ago and talked with him. I was astonished by the fertility of his brain. His education was wholly in Tamil but that does not dwarf his sharp intellect. Well informed on all affairs, he is brief, witty, impressive and convincing in his talks. A fine orater in Tamil it is pleasure to hear him treat a subjcct in a most original and interesting manner. With all that, he is a born fighter and he employs all the avilable resources at his command to carry on a fight. Had he some college education, he would have been easily counted as one of our ablest politicians in the whole of India."

–**Nilkan Perumal**, in his book entitled "These 18 Months" (1939).

" It would be scant justice on my part, if I were to omit mention of the name of K.A.P. Visvanatham of Trichy. A pleasing personality, he is the idol of the young Non-Brahmins of Tamilnad. He won his popularity through his oratory. A tobacco merchant in private life, he came into public view with patriotic zeal but Naicker fearing his popularity saw to it that he shrank into solitude soon after the anti Hindi movement. He loves Naicker the man but hates the dictator that he is. He too has no aspirations for leadership.

—"**Free India**". Madras, (5–3 –1944).

"K. A. P. Visvanathan of Trichy is one of the most-scientific and systematic speakers of Tamil Nad. He speaks after careful thought and preparation and plans his speech with a clever discretion. Coherence of thought and expression is scrupulously maintained; one argument follows another; one thought is born of the other A watchful speaker he watches his words, as well as his watch! He is one of the rare few who never take a minute more than the time allotted to them. It used to be said of him that even before he delivers his speech, he will correctly judge in which place his speech would draw the applause of the house, and adjust those pauses at suitable intervals, to help himself to a sip of soda."

—**Swatantra,** Madras (8-11-1947).

"Mr. K. A. P. Visvanatham is a popular Tamil leader in South India, hailing from Trichinopoly. He is the editor of a popular Tamil publication known as Tamilar Nadu, and he took an active part recently in the Trichy District Journalists' Conference. A very sharp writer, he is given to weild a logical pen. Equally, he is an idol of the Tamil masses, when he mounted a platform to address them. Now, in his fifties, Visvanatham is a large scale Tobacco Businessman. He has never aspired to be a legislator nor run after ministerial seats but he always identified his interests with the welfare of the people."

—**Orient Illustrated Weekly,** Calcutta (30-6-1950).

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

## கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

**தமிழ்ச் செல்வம்** 2–0–0

நாடு, மக்கள், காதல், கொடை, வீரம் என்ற பல தலைப்புக்களில் தமிழ்ப் பெருமக்களின் சிறந்த பண்பு களை புறநானூறு திருக்குறள் போன்ற நூல்களி லிருந்து தொகுத்த இனிமையான நாடக நூல்.

**தமிழ் மருந்துகள்** 0–8–0

தமிழகத்தில் முளைக்கும் செடி கொடிகளையே மருந் தாக்கிப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த நூலில் சுமார் நூறு வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

**எண்ணக் குவியல்** 0–8–0

சொல்லுக்குச் சொல் தமிழ் பற்றையும் தமிழ் நாட்டுப் பற்றையும், உண்டாக்கும் பல கட்டுரைகள் கொண்டது இந்நூல்.

**ஐந்து செல்வங்கள்** 0–8–0

பணமும் பண்டமும் மட்டும் செல்வம் அல்ல. பெற்ற தாயும், அறிவு நிறைந்த பெற்றோரும், நோயற்ற உடலும், உள்ளத்து எழும் சிந்தனைகளும் அரிய செல்வங்கள் என விளக்கும் இனிய நூல். மூன்றும் பதிப்பு.

**மும்மணிகள்** 0–8–0

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய திரிகடுகத்தின் கருத்துக்களைத் தழுவியது. உயர்ந்த நீதிகளைத் தித்திக்கும் செந்தமிழில் வடித்துத் தருகிறது.

**அறிவுக்கு உணவு** 0–8–0

சிறுவடிவில் சிறிய சிறிய சொற்களில் உள்ளத்தை ஊடுருவிப் பாயும் உயர்ந்த கருத்துக் குவியல்கள்.

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

*Jacket Printed at Vinodan Press, Madras-1.*